விலை ரூபா 20.00

www.onlineuthayan.com


வெடித்தது கலவரம்
9


கப்டனுக்கு வீட்டுக்காவல்
10


சங்கானை சம்பியன்
23


முன்னிலையில் பாகிஸ்தான்
24

பக்கங்கள்: 28

★


# உதயன்

சுடர் 27
கதிர் 54

வள்ளுவர் ஆண்டு 2043 | தை 05 வியாழக்கிழமை (19/01/2012) | UTHAYAN - A Lively National Tamil Daily

# பேச்சுத் தடைப்பட்டுள்ளபோதும் தீர்வு வரும் என நம்பும் இந்தியா

## உண்மையான அதிகாரப் பகிர்வுக்கு யாழ்ப்பாணத்தில் வலியுறுத்து



கிளிநொச்சி, ஜனவரி19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சை முன்னறிவித்தல் ஏதுமின்றி இலங்கை அரசு இடை நிறுத்தியுள்ள நிலையிலும் அந்தப் பேச்சின் ஊடாக அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு ஒன்று எட்டப்படும் என்று இந்தியா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

"நடந்து கொண்டிருக்கும் பேச்சின் ஊடாக, 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் ஓர் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுப் பொதியை உருவாக்கி, அதன் மூலம் நாட்டின் அரசியல் தீர்வுக்குத் தேவையானதொரு சூழலை உருவாக்கும் என்பது நம்பிக்கை" என்று யாழ். நகரில் நேற்று உரையாற்றிய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கிருஷ்ணா தெரிவித்தார்.

பேச்சு மூலம் தீர்வு காண்பதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் இந்தியா செய்யும் என்றும் அவர் கூறினார். அதேவேளை, "இலங்கை அரசும், வடமாகாண மக்களும் மேற்கொள்ளும் சகல மீள்கட்டமைப்பு முயற்சிகளிலும் இந்திய அரசும் இந்திய மக்களும் தோளோடு தோள் கொடுத்து நிற்பர்" என்றார் கிருஷ்ணா.

அமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்று அமைச்சர் பீரிஸும் நானும் 260

27

# 13⁺ பற்றியே இனிமேல் பேச்சு

கொழும்பு, ஜன.19

13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப் படுத்துவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் இந்தியாவிடம் உறுதிமொழி வழங்கியுள்ளார். அதனை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் என்னென்ன விடயங்களைப் பகிர்வது என்பது பற்றித்தான் இனித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் பேசும்.

- இவ்வாறு நேற்று 'உதயனி'டம் கருத்து வெளியிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நேற்றுமுன்தினம் கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது, 13ஆம் திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வை முன்வைக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார் எனத் தெரிவித்திருந்தார். இது பற்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கேட்டபோதே சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் இந்தியாவிடம் தெரிவித்திருப்பதை நாம் வரவேற்கிறோம். இது வார்த்தையளவில் இல்லாமல் நடைமுறைக்கு வர வேண்டும். ஜனாதிபதி இப்படிக் கூறிவிட்டதனால் காணி,

27

# போலிக் கடிதம் மூலம் பட்டதாரிகள் நியமனம்

## குடாநாட்டில் நடந்த மோசடி அம்பலம்

-யு.சங்கர்-

உதயன் சிறப்புச் செய்தி

யாழ்ப்பாணம், ஜன. 19

கல்வி அமைச்சில் இருந்து வழங்கப்பட்டது போன்ற போலியான நியமனக் கடிதங்களை வழங்கி பட்டதாரி நியமனம் பெற முனைந்த மோசடி ஒன்று அம்பலமாகி உள்ளது.

இவ்வாறான போலி நியமனக் கடிதங்களுடன் அண்மைய நாள்களில் 9 பேர் பாடசாலைகளில் இணைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. உறுதியான எண்ணிக்கை தெரியவரவில்லை.

இத்தகைய கடிதத்துடன் பெண் ஒருவர் பாடசாலை

27

# 8 ஆசிய நாடுகளுடன் இலங்கையில் போர் பயிற்சி

கொழும்பு, ஜன.19

சீனா, இந்தியா உள்ளிட்ட எட்டு ஆசிய நாடுகள் பங்கேற்கும் இராணுவப் பயிற்சி நடவடிக்கை ஒன்றை இலங்கை இராணுவம் நடத்தவுள்ளது.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தியகவ என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் போர்ப்பயிற்சி நடவடிக்கையில் சீனா, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ் உள்ளிட்ட எட்டு ஆசிய நாடுகள் பங்கேற்கவுள்ளன.

ஒவ்வொரு நாட்டின் சார்பிலும் தலா 8 படையினர் வீதம் மொத்தம் 64 வெளிநாட்டுப் படையினருடன் இலங்கைப் படையினரும் இணைந்து இந்தப் போர்ப் பயிற்சியில் பங்கேற்கவுள்ளனர்.

போர் அனுபவப் பகிர்வு மற்றும் இராணுவ நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படும் தந்திரோபாயங்களை உள்ளடக்கியதாக இந்தப் பயிற்சி நடவடிக்கை அமையும் என்று இராணுவத் தளபதி தகவல் வெளியிட்டுள்ளார். (த)



அரியாலை, நாவலடியில் நேற்று நடைபெற்ற வீடு கையளிக்கும் நிகழ்வில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா உத்தியோக பூர்வமாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் வீட்டுத் திறப்பைக் கையளிக்கிறார்.

# அரசு – கூட்டமைப்பு பேச்சின் போது இந்திய மத்தியஸ்தம் அவசியம்

## கிருஷ்ணாவிடம் வலியுறுத்தினார் யாழ்.ஆயர்

யாழ்ப்பாணம்,ஜன 19

இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுக்களில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக இந்தியா செயற்பட வேண்டும் என யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். எம்.கிருஷ்ணாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்திய அரசின் உதவிகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை யாழ். பொது நூலகத்துக்கு முன்னால் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கலந்து கொண்டார்.

இதன்போதே யாழ் ஆயர்

27

# இந்தியாவின் ஆதரவை பெறுவதற்கே 13 பிளஸ்

## குற்றம் சாட்டுகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜன.19

ஜெனிவா மாநாட்டின்போது இந்தியாவின் ஆதரவைத் திரட்டிக்கொள்ளும் நோக்கிலேயே அரசு, 13ஆவது அரசமைப்புக்கு அப்பால் சென்று தேசிய இனப்பிரச்சினைத் தீர்வை காண்பதற்குத் தயார் என மீண்டும் அந்த நாட்டிடம் உறுதிமொழிகளை அள்ளி வீசியுள்ளது என்று பரபரப்பான குற்றச்சாட்டை முன்வைத்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, அரசு ஒருபோதும் இந்த உறுதிமொழியை நிறைவேற்றாது என்றும் ஆணித்தரமாக இடித்துரைத்துள்ளது.

இதற்கு முன்னரும் இவ்வாறான உறுதிமொழிகளை பலமுறை அள்ளி எறிந்துள்ளார் ஜனாதிபதி. நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களின் போதெல்லாம் இந்த 13 பிளஸ் என்ற பல்லவி பாடப்பட்டுள்ளது.

27

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
இன்னும் 1 நாள்

## மின்சார சபை ஊழியர்கள் வேலை நிறுத்தம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான பேச்சுத் தோல்வியில் நிறைவடைந்ததை அடுத்து, இலங்கை மின்சார சபை ஊழியர்கள் நேற்றுப் புதன்கிழமை நள்ளிரவு முதல் வேலை நிறுத்த போராட்டத்தில் குதித்துள்ளனர். எனினும் தடையில்லாமல் மின் விநியோகம் இடம்பெறும் என மின் சக்தி அமைச்சு உறுதியளித்துள்ளது.

## அதிக தடவை ஹெலியில் பயணம் செய்த பிரதமர்

அண்மைக் காலத்தில் அதிக தடவை ஹெலிகொப்டர் மூலமான பயணங்களை மேற்கொண்ட இலங்கை அரசியல்வாதியாக தான் விளங்குவதாகப் பிரதமர் டி.எம்.ஜயரட்ண நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார். தனது உடல்நிலை காரணமாக இவ்வாறான பயணங்களைத் தனது மருத்துவர்கள் அங்கீகரிக்காத போதிலும் தான் அதிக தடவை ஹெலிகொப்டர் மூலம் பயணங்களை மேற்கொண்டதாகப் பிரதமர் ஜயரட்ண் கூறினார். ஒரே தினத்தில் நாட்டின் வெவ்வேறு பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் தான் பங்குபற்ற வேண்டியிருந்ததாக அவர் கூறினார்.

## துமிந்த சில்வா சந்தேக நபரல்ல

முல்லேரியா சம்பவத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்த சில்வா பாதிக்கப்பட்டவரே தவிர, சந்தேகநபர் இல்லை என கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுல சூரிய மீண்டும் வலியுறுத்தியுள்ளார். குறித்த துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சம்பவத்தின் போது முதலாவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்தசில்வாவிற்கே துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதாக பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் சாரதி உள்ளிட்ட சாட்சிகள் 5 பேருக்கும் மேலதிக மானவர்கள் வாக்குமூலம் அளித்துள்ள நிலையிலும், அவர் சந்தேக நபராக்கப்பட்டுள்ளார் என சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார்.

## சேமலாபநிதி சட்ட மூலம் நிறைவேற்றம்

ஊழியர் சேமலாப நிதி திருத்த சட்ட மூலம் 59 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. சட்ட மூலத்திற்கு ஆதரவாக 71 வாக்குகளும், எதிராக 12 வாக்குகளும் பதிவாகியுள்ளன. இதேவேளை, அரசினால் நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்படவிருந்த மூன்று சட்ட மூலங்கள் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த தகவலை, சபைத் தலைவர் நிமால் சிரிபால டி சில்வா வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத்திலும் "கொலை வெறி"

''சுறா மீன்களைத் தப்பவிட்டு சிறு சாளை மீன்களைப் பிடித்துள்ளீர்கள். உண்மையாகவே ஊழல் மோசடிகளில் தொடர்புடைய அமைச்சர்கள் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பெரும் புள்ளிகளின் பெயர் பட்டியலையும் வெளியிடுவீர்களா?'' எனப் பிரதமரிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார் ஐ.தே.க. உறுப்பினர் ரவிகருணா நாயக்க.

நேற்று நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போதே அவர் இந்தக் கேள்வியை வீசினார்.

சபாநாயக்கர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நாடாளுமன்ற அமர்வுகள் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்குக் கூடியது. அப்போது ரவி கருணநாயக்க கடந்த எட்டு வருடங்களாக லஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு? என்று கேட்டார்.

''இலஞ்ச ஊழல் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் எத்தனை? அதில் விசாரணைக்கு உள்வாங்கப்பட்டவை எத்தனை? இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு சுயமாக இயங்குகின்றதா? இல்லாவிட்டால் அதற்கான பரிகாரம் காணப்படுமா-? என்று ரவி கேட்டார்.

### ரவிக்கு காது கேட்கவில்லை அஸ்வருக்கு மூளை வேலை செய்யவில்லை

இந்தக் கேள்விக்குப் பிரதமரின் சார்பில் ஆளும் கட்சிக் கொறடாவான தினேஷ் குணவர்த்தன பதில் அளித்தார். அப்போது ''மைக்'' சரியாக வேலை செய்யவில்லை. அமைச்சர் என்ன கூறுகின்றார் என்று கேட்கவில்லை'' என்று ரவி கருணாநாயக்க சபாநாயகரிடம் கூறினார்.

இடையில் பாய்ந்த ஆளும் கட்சி உறுப்பினரான அஸ்வர் ''என்ன உங்களுக்கு காது கேட்கவில்லையா?'' என்றார்.

''ஆமாம்! எங்களுக்கு காது மட்டும்தான் கேட்கவில்லை. ஆனால் இந்த மனிதனுக்கு (அஸ்வருக்கு) மூளையே வேலை செய்வதில்லை'' எனப் பதிலடி கொடுத்தார் ரவி கருணாநாயக்க.

### அமைச்சரின் பட்டியல்

ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலாக ஒரு பெரியபட்டியலையே சமர்ப்பித்தார் அமைச்சர். அதில் பெயர்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

''இலஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மிகவும் சிறப்பாகவும் சுதந்திரமாகவும் செயல்படுகின்றது. முறைப்பாடுகளைப் பரிசீலனை செய்து அதன் உண்மைத் தன்மைக்கேற்ப விசாரணைகளையும் மேற்கொள்ள சிபார்சு செய்கிறது என்று அமைச்சர் கூறினார்.

### பெரிய சுறாக்கள் தப்பிவிடுகின்றன

அமைச்சரின் பதிலை ஏற்றுக் கொண்ட ரவி கருணாநாயக்க, ''அரச துறையில் பெரும் மோசடிகளும் ஊழல்களும் இடம்பெற்றுள்ளதாக ஆளும் கட்சியினரே குறிப்பிடுகின்றனர். அதிவேக நெடுஞ்சாலைகள் உட்படப் பல நிர்மாணப் பணிகளில் ஊழல்கள் இடம்பெற்றுள்ளன. முன்னாள் அமைச்சர்கள், தற்போதைய அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்று குறிப்பிடப்படுள்ளது. இவர்களின் பெயர்களை வெளியிடுவீர்களா? எதிர்த்தரப்பான எங்களுடைய பெயர்கள் இருந்தாலும் வெளியிடலாம். சுறா மீன்களைத் தப்பவிட்டு சிறு மீன்களைப் பிடிக்கக்கூடாது'' என்றார் ரவி கருணாநாயக்க.

இதற்குப் பதில் அளித்த அமைச்சர் ''உறுப்பினர் தனது கேள்வியில் பெயர்களை வெளியிடும்படி கேட்கவில்லை அப்படி ஒரு கேள்வி எழுப்பினால் அதற்கான பதில் வழங்கப்படும்'' என்றார்.

### ஊழல் மோசடி தான் அபிவிருத்திக்குச் சாபக்கேடு

இந்தச் சந்தர்ப்பத்தில் ரவி கருணாநாயக்க மற்றும் ஒரு கேள்வியை எழுப்பினார். ''நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இப்படியான லஞ்ச, ஊழல் தான் சாபக்கேடாக அமைந்துள்ளன என்பதனை அமைச்சர் ஏற்றுக் கொள்கின்றாரா?'' என்றார் இதற்கு ஒரே வார்த்தையில் ''ஆம்'' என்று கூறிவிட்டு அமர்ந்தார் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

### இரண்டரைக் கோடி ரூபா பெறுமதியான வாகனங்கள் 5 விமல் வீரவன்சவுக்கு

தயாசிறி ஜயசேகர, வீடமைப்பு நிர்மாண மொழியியல்த் துறைகள் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் எத்தனை? அவற்றிற்கு செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு? என்று அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார். ஆனால் இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க அமைச்சர் விமல் வீரவன்ஸ சபையில் இல்லை.

இதனை கண்ட தயாசிறி




ஜய சேகர, ''என்ன அமைச்சர் தருஸ்மன் அறிக்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யப் போய்விட்டாரா?'' என்று கிண்டலடித்தார். அப்போது பிரதி அமைச்சர் பதில் அளித்தார். ''குறிப்பிட்ட அமைச்சுக்கு 36 வாகனங்கள் இருக்கின்றன. பல வாகனங்கள் 16 தடவைகளுக்கு மேல் பழுது பார்க்கப்பட்டுள்ளன. இதனால் தலா இரண்டரைக் கோடி ரூபா பெறுமதியான ஐந்து வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன'' என்று பதிலிளித்தார் பிரதி அமைச்சர் வசந்த அழகியவன்ன.

''பல்கலைக் கழகங்களில் மாணவர்கள் விடுதி வசதி இன்றி ஒரே அறையில் ஆறு ஏழு பேர் தங்கி இருக்கின்றனர். ஆனால் அமைச்சர்கள் கோடி கோடியாக செலவிட்டு சொகுசு வாகனங்களில் நடமாடுகின்றனர். இப்படி துஷ்பிரயோகம் செய்யும் பணத்தைக் கொண்டு அந்த மாணவர்களுக்கு விடுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கலாமே'' என்று கேட்ட தயாசிறியின் பேச்சு பல்கலைக் கழகம் நோக்கி சென்றது.

உங்களுடைய கேள்வி திசைமாறிப் போகின்றது. எனக்கூறி சர்ச்சைக்கு முற்றுப் புள்ளி வைத்தார் சபாநாயகர்.

### போர் இல்லாத காலத்திலும் ஹெலி - சவாரி ஏன்?

எதிர்க்கட்சி உறுப்பினர் அகில விராக்காரியவசம் விமானப்படைக்குச் சொந்தமான ஹெலி கொப்டர்களின் சவாரி தொடர்பாக ஒரு கேள்வியை எழுப்பினார்.

''இப்பொழுது நாட்டில் போர் இல்லை. பயங்கரவாதம் இல்லை. அதிவேகப் பாதைகளும், பெருந் தெருக்களும் பல கோடி ரூபா செலவில் சீரமைக்கப்பட்டுள்ளன. ஆனால் இப்போதும் கூட அரசியல்வாதிகளும், உயர் அதிகாரிகளும் ஹெலியில் சவாரி செய்கின்றனரே ஏன்? இப்படி சவாரி செய்ய அனுமதிக்கப்பட்டவர்களின் விவரங்களை கூறமுடியுமா?'' எனக் கேள்வி எழுப்பினார்.

### வடக்கு ஆளுநருக்கும் ஹெலி சவாரி

''ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அவசியம் ஏற்படின் ஏனைய அமைச்சின் செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்களுடன் வடமாகாண ஆளுநருக்கும் விமானப்படை ஹெலி கொப்டர்களை பயன்படுத்த அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது'' என்றார் கேள்விக்குப் பதில் அளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

''நாட்டில் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டுள்ள இவ்வேளையில் தேவையற்ற செலவினங்களைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்காதது எதற்காக?'' என்றார் அகில விராக் காரியவசம்.

இந்த சந்தர்ப்பத்தில் இடைமறித்த பிரதமர் டி.எம். ஜயரத்ன, ''நான் பிரதமராக மட்டுமன்றி நான்கு மதங்களுக்கும் பொறுப்பான அமைச்சராகவும் இருக்கின்றேன். தெற்கில் ஒரு நிகழ்வு நடைபெறும். அதேவேளை வடக்கிலும் நிகழ்வு இடம்பெறும் ஒரேநாளில் ஆறு ஏழு நிகழ்வுகளில் கலந்து கொண்டு பேசவேண்டும். அவற்றை ஒதுக்கமுடியாது. இன்றைய நிலையில் ஆகக் கூடுதலாக ஹெலி கொப்டர்களைப் பயன்படுத்துவது நானே. அதிக நிகழ்வுகளில் கலந்துகொண்டு பேசுபவனும் நானே நடப்பு ஆண்டில் மேலும் கூடும். இதனைக் குறைக்க முடியாது'' - என்றார் பிரதமர்.

### வாக்காளர் பட்டியல் இணையத்தளத்தில்

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவரும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரமேதாஸ வாக்காளர் இடாப்பை இணையத்தளத்தில் வெளியிடுவது தொடர்பான கேள்வி ஒன்றை எழுப்பினார்.

''அரச நிறுவனங்களும் அமைச்சுகளும் தத்தமது செயற்பாடுகள் தொடர்பாக தனித்தனியான இணையத்தளங்களை வைத்திருக்கின்றன. இதன்மூலம் தேவையான விவரங்களைப் பார்த்துக் கொள்ளமுடியும். இதைப் போன்று வாக்காளர் இடாப்பினையும் பார்வையிடக் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்படுமா?'' என்று கேட்டார் சஜித் பிரேமதாச.

இதற்குப் பதில் அளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, ''இப்பொழுது மாவட்டக் கச்சேரிகள், உதவி அரச அதிபர் அலுவலகங்கள், பிரதேச சபைகள் மற்றும் கிராம சேவகர் அலுவலகங்கள் என்பவற்றில் வாக்காளர் பட்டியல்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. திறந்த வாக்காளர் பட்டியல் ஒன்றைத் தயாரிப்பது தொடர்பாகப் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது.

இது தொடர்பான சட்டத் திருத்தம் ஒன்று விரைவில் கொண்டுவரப்படவுள்ளது. இந்த திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் வாக்காளர் பட்டியலையும் இணையத்தளங்களின் மூலம் பார்வையிடமுடியும்'' என்றார்.

### மூன்று சட்ட வரைபுகள் ஒட்டுமொத்தமாக வாபஸ்

அரசு ஏற்கனவே சபையில் முன்வைத்த மூன்று சட்ட வரைவுகளை நேற்று ஒட்டு மொத்தமாக வாபஸ் பெற்றுக்கொண்டது.

- ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டம்.
- கடல் கடந்த ஊழியர்களின் ஓய்வூதிய நிதியச்சட்டம்.
- ஓய்வூதியங்கள் (விளைவாத் தன்மையிலான ஏற்பாடுகள்) சட்ட மூலம்.

ஆகிய மூன்று சட்ட மூலங்களும் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெற இருந்த நிலையிலேயே அரசு இந்த மூன்று சட்ட வரைவுகளையும் வாபஸ் பெறுவதாகச் சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா நேற்று சபையில் அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஊழியர் சேமலாப நிதியம் திருத்தச் சட்டம் தொடர்பான விவாதம் இடம்பெற்றது.

### அஸ்வரின் ''கொலை வெறி''

ஆளும் கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம்.அஸ்வர் நேற்று நாடாளுமன்றத்தில் கொலை வெறி தொடர்பாக புதிய வியாக்கியானம் ஒன்றை சமர்ப்பித்தார்.

''தென்னிந்தியாவிலிந்து வெளியிடப்பட்டுள்ள ''கொலை வெறி கொலை வெறி'' என்ற பாடலுக்குப் பதில் அளிக்கும் வகையில் யாழ்ப்பாண இளைஞன் ஒருவர் ஒரு பாடலை வெளியிட்டுள்ளார் இப்பாடலை தமிழக முதல்வர் செல்வி. ஜெயலலிதாவுக்கும் கருணாநிதிக்கும் அனுப்பி வைக்க வேண்டும். இப்பொழுது எங்கள் நாட்டில் கொலை வெறி இல்லை. 'நோ கொலை வெறி நோ கொலை வெறி.' ஜே.வி.பியினர் மூன்று கொலை வெறிபிடித்து அப்பாவி இளைஞர்களை முன்னர் பலியிட்டனர். இப்பொழுது முன்னாள் புலிப் போராளிகளையும் இணைத்துக்கொண்டு மீண்டும் கொலை வெறியை ஏற்படுத்த முனைகின்றனர்'' என்றார் அஸ்வர்.

அதேவேளை தினசரி வெளிவரும் தமிழ் பத்திரிகை செய்திகளையும் வாசித்து பத்திரிகைகளை விமர்சனம் செய்யவும் அஸ்வர் தவறவில்லை. (உ-2)

# தேடப்படுபவர் இட்டார் ஆணை தேடிவந்தவர் கொன்றார் தமிழை

## அரியாலையில் அரங்கேறிய கிருஷ்ணலீலை

யாழ்ப்பாணம், ஜன.19

தமிழகம், சூளைமேட்டுச் சூட்டுச் சம்பவம் தொடர்பான வழக்கில் இந்தியாவில் தேடப்படுபவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் 'அன்புக் கட்டளைக்கு' அடிபணிந்து அரைகுறைத் தமிழிலும் இடையே புரியாத ஒரு மொழியைக் குழைந்தும் உரையாற்றினார் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா.

அரியாலையில் இந்திய நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட வீடுகளைக் கையளிக்கும் நிகழ்விலேயே இந்த 'கிருஷ்ண லீலை' நிகழ்ந்தது.

அத்தோடு யாழ்ப்பாணத்தில் நேற்று கிருஷ்ணாவோடு ஒட்டி உறவாடியபடியே அமைச்சர் டக்ளஸும் நிழலாகப் பின் தொடர்ந்தார். ஆனாலும் கிருஷ்ணாவும் அதற்கு எதிர்ப்பு ஏதும் தெரிவிக்கவில்லை. கிருஷ்ணாவின் கவனத்தை தன் பக்கம் ஈர்க்கும் முகமாக, ''இப்போது தமிழில் அமைச்சர் கிருஷ்ணா உரையாற்றுவார்'' என்று அறிவித்தார் டக்ளஸ். சபை நாகரீகம் கருதி அமைச்சரின் அன்புக் கட்டளைக்கு அடிபணிந்து ஒரு சில நிமிடங்கள் தனக்குத்தெரிந்ததமிழில்கிருஷ்ணா உரையாற்றினார்.

இதேவேளை ''இந்தியாவில் ஒரு வழக்கில் தேடப்படும் நபர் ஒருவருடன் இந்திய அரசின் முக்கிய அமைச்சர் ஒருவர் கூடிக் குலாவிய விடயம் கண்டிக்கத்தக்கது. இந்தியாவின் இறையாண்மையை மதிக்காமல் ஒளிந்திருக்கும் ஒருவருடன் இவ்வாறு அமைச்சர் உறவாடியமை இந்தியா [illegible] [illegible] குத் தெரிவித்தார். (ங-15)

# 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்ல கடும் போக்காளரின் ஒத்துழைப்புத் தேவை

## முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

கொழும்பு, ஜன.19

இனப்பிரச்சினைக்கு 13ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வைக் காண்பதற்கு, அரசிலிருக்கும் கடும் போக்காளர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு 13ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வை வழங்குவதற்கு அரசு தயார் என இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளமை தொடர்பாகக் கேட்டபோதே, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் அலி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் 'உதயனு'க்குக் கூறியவை வருமாறு:-

நாட்டில்தற்போது அமைதியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி இந்திய அமைச்சரிடம் கூறியுள்ள கருத்தானது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை வெளியீடு உட்பட நாட்டில் சில சாதகமான நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் பழையனவற்றை மறந்து நாம் அனைவரும் இனப்பிரச்சினைக்கு 13ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வைக் காண்பதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

அரசுக்குள் இருக்கும் கடும்போக்காளர்களும் ஜனாதிபதிக்கு இந்த விடயத்தில் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் - என்றார் அவர். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# அடிப்படை உரிமைகளை நீர்த்துவிடச் செய்யும் முயற்சி

மக்கள் போராட்ட இயக்கமும் நாம் இலங்கையர் அமைப்பும் இணைந்து யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்த ஆர்ப்பாட்டம், பாதுகாப்புப் படையினரால் - அரசாங்கத்தினால் - இல்லாமற் செய்யப்பட்டது. மறைமுகமாகத் "தடை" செய்யப்பட்டது என்பதும் தவறன்று.

கடந்த டிசெம்பர் 10 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் வைத்துக் கடத்தப்பட்ட லலித் மற்றும் குகன் ஆகிய இருவரையும் சிறைச்சாலைகளில் வாடும் பல நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யக் கோருவதற்காகவே, வலியுறுத்துவதற்காகவே, யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்துவதற்கு, ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

உத்தேச ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்குபற்றுவதற்காகத் தென்னிலங்கையிலிருந்து வந்துகொண்டிருந்த சுமார் எண்ணூறு மக்கள், வவுனியாவில் வைத்துப் பாதுகாப்புத் தரப்பினரால் தடுத்து நிறுத்தப்பட்டதனால் அவர்கள் கொழும்பு திரும்ப நேர்ந்தது. பஸ்கள் உட்பட இருபது வாகனங்களில் யாழ். நோக்கி வந்து கொண்டிருந்தவர்கள் ஏமாற்றத்துடனும் உள்ளார்ந்த ஆத்திரத்துடனும் தெற்கே திரும்பினர்.

இதேவேளை, நல்லூரில் உள்ள விடுதி ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, கொழும்பில் இருந்து வந்த தேசிய சமாதானப் பேரவையின் வாகனம் நேற்றுமுன்தினம் முற்பகல் அடித்துச் சேதப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் நோக்கி வந்த தென்னிலங்கை மக்கள் திருப்பி அனுப்பப்பட்டதற்கும் நல்லூரில் வாகனம் நொருக்கப்பட்ட சம்பவத்துக்கும் தொடர்புண்டா என்பது இனிமேல் தான் தெரியவரும்.

தென்னிலங்கையிலிருந்து வந்த மக்கள் தடுத்து நிறுத்தப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்ட போதிலும் ஓமந்தைச் சோதனைச் சாவடியூடான போக்குவரத்து சுமார் மூன்று மணி நேரம் மூடப்பட்டுப் பயணிகளுக்கு அசௌகரியம் விளைவிக்கப்பட்டது.

மக்கள் தமது நியாயமான, கோரிக்கைகளை முன்வைத்து அல்லது பொதுசன விரோதமான செயற்பாடுகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தி தமது எதிர்ப்பை அமைதியாகத் தெரிவிப்பது அவர்களுக்கு உள்ள ஜனநாயக உரிமை. அவர்களின் எதிர்ப்பு அல்லது ஆட்சேப நடவடிக்கைகள் சட்டம் ஒழுங்கை சீர்குலைத்தால் அல்லது அவை அமைதிக்குப் பங்கம் விளைவித்தால் மட்டுமே அவற்றைத் தடைசெய்ய, அல்லது தடுத்து நிறுத்தச் சட்டம் ஒழுங்கைப் பேணும் அலகுகளுக்கு அதிகாரம் உண்டு.

மக்களின் நியாயமான, ஜனநாயக ஒழுங்கமைந்த போராட்டங்களை நசுக்கி ஒடுக்குவதற்கு அரசாங்கம் பல்லாண்டு காலமாகத் தன்வசம் வைத்திருந்த அவசரகாலச் சட்டம் என்ற வாள் அதன் கையில் இப்போது இல்லை.

அதனால் மக்களின் ஜனநாயக ரீதியான, நியாயம் கேட்டு நிற்கும் செயற்பாடுகளை, அமைதிப் போராட்டங்களை, ஒடுக்குவதற்கு படையினர், (பொலிஸாரும் கூட) குறுக்கு யுத்திகளைத் தமதாக்கிக் கொண்டு செயற்படுகின்றனர். இத்தகைய 'தடைகள்' இப்போதெல்லாம் நிரந்தரமான எழுதப்படாத சட்டங்களாகவும் விதிகளாகவும் மாறி வருகின்றன.

சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர்-

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தின் தொழிலாளர்கள் நடத்திய, அவர்தம் தொழில் உரிமைப் போராட்டம், ஜனநாயகச் சட்டவரம்புகளுக்கு அப்பாற்பட்டு அடக்கி (தொழிலாளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்) ஒடுக்கப்பட்டதில் இருந்து இத்தகைய ஆதிக்க மரபுஆரம்பித்து வைக்கப்பட்டது.

அது போன்ற அல்லது அது சார்ந்த சம்பவமே சர்வதேச மனித உரிமைகள் தினமான, கடந்த (டிசெம்பர்) மாதம் பத்தாம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த அமைதிப் போராட்டத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு அதிகாரத் தரப்புகள் அத்துமீறிச் செயற்பட முனைந்தமை.

காணாமற்போகச் செய்யப்பட்ட, காணாமற் போனோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட தமது பிள்ளைகளின், கணவன்மாரின், பேரன் பேர்த்திமாரின் பெயர்களை வெளியிடக் கோரியும், மீட்டுத் தருமாறு கோரியும் அமைதியான முறையில் யாழ். பஸ் நிலையத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்த முனைந்த மக்களை அதற்கு அனுமதிக்காது துரத்திவிட பொலிஸ் தரப்பினர் முயன்றனர். ஆனால் மக்கள் மன உறுதியுடன், ஒற்றுமையுடன் செயற்பட்டதால் "பாய்ச்சா" பலிக்கவில்லை. எனினும் அந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றுவதற்கென கொழும்பில் இருந்து வந்தவர்கள் உரிய இடத்தை வந்தடைய இயலாதவாறு பாதுகாப்புக் கெடுபிடிகள் இறுக்கப்பட்டன.

அதன் நீட்டமே, நேற்றுமுன்தினம் யாழ். நகரில் நடத்தத் திட்டமிடப்பட்ட அமைதிப் போராட்டம் இல்லாமற் செய்யப்பட்ட தந்திரம்.

ஓர் அதிகாரத்துவ வாய்ப்பாட்டின் அடிப்படையிலேயே மக்களின் ஜனநாயக ரீதியான போராட்டங்கள் தடுக்கப்படுகின்றன. அதிகார வர்க்கத்தினரால் மக்களின் உரிமைகள் பிடுங்கப்படும் போது தென்னிலங்கை மக்களும் வடக்கு மக்களும் கைகோர்த்துக் குரல் கொடுக்க எந்தச் சந்தர்ப்பத்திலும் இடங்கொடுத்து விடலாகாது என்ற வன்மத்தின் வெளிப்பாடே அந்த வாய்ப்பாடு.

முன்னர் ஒரு காலத்தில், இடதுசாரிகளை ஒன்று சேரச் சந்தர்ப்பம் கொடுக்காமல், பல வியூகங்களை வகுத்து, முதலாளித்துவக் கட்சிகள் தமது பக்கம் இழுத்து அவற்றுக்குள் பிளவுகளை, பிரிவுகளை உண்டாக்கின. அதேபோன்று தெற்கு, வடக்கு மக்கள் தமக்குள்ள பொதுவான அடிப்படை உரிமைகளுக்காகத்தானும் ஒன்று சேர்ந்து, கைகோர்த்துச் செயற்படவிடாது தடுப்பதில் இப்போதைய அரசு கண்களை அகல விரித்துக்கொண்டு செயற்படுகிறது.

ஜனநாயக நாடு, மக்கள் அரசு என்ற முத்திரைகளை நெற்றியில் ஒட்டிக்கொண்டு, மக்களுக்கு உள்ள அடிப்படை உரிமைகளைக் கூட நீர்த்துவிடச் செய்யும் திட்டம், படைகள் மற்றும் பொலிஸ் தரப்புகள் ஊடாகப் பிரமாதமாக அரங்கேற்றப்பட்டுவருகின்றன. யார் தான் தட்டிக்கேட்கமுடியும்?

# டெங்கு நோய் விவரங்களை அனுப்ப குறுந் தகவல் சேவை

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆதார வைத்தியசாலைகளில் டெங்கு நோய் தொடர்பான விவரங்களை உடனுக்குடன் அறிவிக்க குறுந் தகவல் சேவைத் திட்டம் பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் பணிமனையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆதார வைத்தியாசாலைகளில் அனுமதிக்கப்பட்டுபரிசோதனைகளின்போது டெங்கு நோயாளிகளாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுபவர்களின் பெயர் விவரங்களை உடனடியாக மாகாணப் பணிப்பாளர் பணிமனை நோய்த் தடுப்புப் பிரிவுக்கும் பிராந்தியத் தொற்று நோயியல் பிரிவுக்கும் தெரிவிக்க இந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

குறுந் தகவல் சேவை மூலம் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு டெங்கு நோய் ஏனையோருக்குப் பரவுவதை தடுக்கும் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தத் திட்டம் வழி வகுக்குமெனத் தெரிவிக்கப்பட்டது.

டெங்கு நோய் யாழ்.மாவட்டத்தில் அதிகரித்து வருவதைத் தடுப்பதற்காக இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-207)

## காலாண்டு மருந்துகள் எடுத்துவர ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளுக்குத் தேவையான காலாண்டு மருந்துகளை எடுத்து வருவதற்கு சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது

இந்த மருந்துப் பொருள்களை அடுத்துவரும் சில நாள்களில் கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மருந்துப் பொருள்கள் வந்து சேர்ந்ததும் அவற்றை உடனடியாக அரச வைத்தியாலைகளுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை- இந்த மாதத்துக்கான குழந்தைகளுக்குரிய சத்துணவும் எடுத்துவரப்படவுள்ளது. (ம-17)

## முஸ்லிம் மக்களின் விசாரணை அடுத்த வாரம்

யாழ்ப்பாணம், ஜன.19

உரிமைக் கோரிக்கைப் படிவம் ஊடாக விண்ணப்பித்த யாழ் முஸ்லிம் மக்களின் விசாரணைகள் எதிர்வரும் 23 ஆம், 24 ஆம், 25 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில், கொழும்பிலிருந்து வருகை தரும் தேர்தல் திணைக்கள அதிகாரிகளால் நடத்தப்படவுள்ளதாக உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பதிவு செய்யாமல் விட்டவர்கள் அதன் பின்பு உரிமைக் கோரிக்கை படிவத்தினூடாகத் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு கோரி விண்ணப்பித்தனர். இதனடிப்படையில் தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்று மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனை, பருத் தித்துறை பிரதேச செயலர் பணிமனை கரவெட்டி பிரதேச செயலர் பணிமனை, கோப்பாய் பிரதேச செயலர் பணிமனை ஆகியவற்றில் உரிமைக்கோரிக்கைப் படிவத்தினூடாக விண்ணப்பித்தவர்களது விசாரணைகள் இடம்பெற்றன.

இன்று நல்லூரில் காலை 9.30 மணிக்கும், நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு வேலணையிலும் விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

இந்த விசாரணைகளின்போது வாக்காளர்களாக இதுவரையும் பதிவு செய்யாதவர்கள், மேற்குறித்த இடங்களில் விசாரணைகள் இடம்பெறும்போது நேரடியாக வந்து உதவித் தேர்தல் ஆணையாளரைச் சந்திக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-15)

## நீதிமன்ற ஆணையாளர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்.மேல்நீதிமன்ற ஆணையாளராக ஜே.விஸ்வ நாதன் நேற்று முன்தினம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதுவரை யாழ்.குடியியில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற ஆணையாளராகக் கடமையாற்றி வந்தார்.

அதேபோன்று யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளராகக் கடமையாற்றிய எஸ். பரமராஜா யாழ்.குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற ஆணையாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மேல் நீதிமன்றத்திலேயே குற்றவியல் பிரிவு வழக்குகள் விசாரணைக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வவுனியா குடியியல் மேன்முறையீட்டு மேல்நீதி மன்ற ஆணையாளராக எம்.எம். மொஹமட் நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் தொடக்கம் அமுலாகும் வகையில் இந்த இடமாற்றங்களை நீதிச்சேவை ஆணைக்குழு வழங்கியுள்ளது. (ங-4)

## ஓய்வூதிய அதிகரிப்பால் பாதிப்பு

தென்மராட்சி, ஜன.19

ஓய்வூதியத் திணைக்களத்தினரால் அண்மையில் விடுக்கப்பட்ட ஓய்வூதிய அதிகரிப்பில் ஒரு சிலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஓய்வூதிய திணைக்களப் பணிப்பாளரினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபங்களின் பிரகாரம் 2003 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு இந்த வருடம் இரு கட்டங்களாக ஆயிரம் ரூபாவும் 2004 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 2005 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ஓய்வுபெற்றவர்களுக்கு இரு கட்டங்களாக 500 ரூபாவும் அலவன்ஸில் அதிகரிக்கப்பட்டுள் ளது.

2007 ஜூலை 31 ஆம் திகதி தொடக்கம் 2011 ஜூன் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இளைப்பாறியவர்களின் ஓய் வூதியம் மீளாய்வு செய்யப்பட்டு ஓய்வூதியம் 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சம்பள அளவுத் திட்டத்தின் பிரகாரம் அதிகரிக் கப்படல் வேண்டுமெனவும் அறி விக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்று நிருபங்களின் பிரகாரம் 2006 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 2007 ஜூன் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதிய அதிகரிப்பு தொடர்பாக எதுவும் குறிப்பிடாததால் இந்தக் காலப் பகுதியில் ஓய்வு பெற்றவர்களுக்கு எந்தவொரு ஓய்வூதிய அதிகரிப்பும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதிய அதிகரிப்பு வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

## பொன்சேகாவின் மேன்முறையீடு ஒத்திவைப்பு

கொழும்பு,ஜன.19

முதலாவது இராணுவ நீதி மன்றுக்கு நீதிபதிகள் நியமிக்கப்பட்டதை சவாலுக்கு உட்படுத்தி முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன் சேகா தாக்கல் செய்த மனு மீதான விசாரணையை மேன்முறையீட்டு நீதி மன்றம் மீண்டும் பிற்போட்டுள்ளது. நீதிபதி அனில் குணசிங்க முன்னிலையில் இந்த மனு நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எனினும் நீதிபதிகளில் ஒருவரான ரஞ்சித் டி சில்வா விடுமுறையில் உள்ளதால் மனு மீதான விசாரணை எதிர்வரும் முத்லாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் சரத் பொன் சேகாவை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ச)

## நிகழ்வுகள் இன்று

**திறப்பு விழா**

யாழ்ப்பாணம், ஜன.19

ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கம்பனி தனது புதிய கிளை ஒன்றை காலை 9.16 மணிக்கு சாவகச்சேரியில் ஏ-9 வீதியில் திறந்து வைக்கவுள்ளது. (ம-ரி)

**சமையல் கூடம் திறப்பு**

யாழ்ப்பாணம், ஜன.19

நெடுந்தீவு மேற்கு மங்கையர்க்கரசி வித்தியாலத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சமையல் கூடம் முற்பகல் திறந்து வைக்கப்படும். வித்தியாலய அதிபர் கோ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நெடுந்தீவு கோட்டக்கல்வி அதிகாரி க.அரசரத்தினம் இதனைத் திறந்து வைப்பார். பாடசாலைகளுக்கிடையிலான போஷாக்கு நிகழ்ச்சித் திட்டமும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (ம-7)

**கலந்துரையாடல்**

யாழ்.மாநகர சபையின் ஏற்பாட்டில் ஜே/84 கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட மக்கள் பங்கேற்புடனான கலந்துரையாடல் பிற்பகல் 3மணிக்கு நாவாந்துறை சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பிரதேச வாழ் மக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார். (ம-311)

**கலந்துரையாடல்**

கல்வி அபிவிருத்தி தொடர்பாக பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் பிற்பகல் 3 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்துகொள்வார். (ம-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13+ இல் காணி, பொலிஸ் அதிகாரம்; ஜனாதிபதி ஒருபோதும் கூறவில்லை

கொழும்பு, ஜன.19

13ஆவது அரசமைப்புத் திருத்தச்சட்டம் நாட்டில் நடைமுறையில் இல்லை. எனவே, அதற்கு அப்பால் எனக் கூறப்படுவது திருத்தம் செய்யப்பட்ட புதிய சட்டத்தையே வலியுறுத்தி நிற்கின்றது. அந்தப் புதிய சட்டத்தில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடக்கப்படும் என ஜனாதிபதி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கிருஷ்ணாவிடம் கூறவில்லையே என அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது தேசிய சுதந்திர முன்னணி.

ஜனாதிபதியால் இந்திய அமைச்சருக்குத் தீர்வுத் திட்ட விடயம் தொடர்பாக வழங்கப்பட்ட உறுதிமொழி குறித்துக் கருத்து வெளியிடும்போதே தேசிய சுதந்திர முன்னணியின் அரசியல் குழு உறுப்பினரும், முன்னாள் பிரதி அமைச்சருமான பியசிறி விஜேநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இனப்பிரச்சினைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குகின்றோம் என ஜனாதிபதி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்திய அமைச்சரிடம் கூறவில்லை.

13ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வு வழங்கப்படும் என்றே கூறினார். நாட்டில் தற்போது 13ஆவது அரசமைப்புத் திருத்தச்சட்டம் நடைமுறையில் இல்லை. எனவே, அதற்கு அப்பால் எனக் கூறப்படுவது திருத்தம் செய்யப்பட்ட ஒரு தீர்வைக் குறிப்பதாகும்.

இனப்பிரச்சினைக்கு 13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பால் சென்றுதீர்வு காணப்படும் என ஜனாதிபதி கூறினாலும், அவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் 13 பிளஸில் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதாகக் கூறவில்லை - என்றார்.

## ஆள்கடத்தலில் ஈடுபட்ட இலங்கையருக்கு சிறை

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை ஆஸ்திரேலியாவுக்கு கடத்த முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் இந்திய கொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இலங்கை இளைஞன் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் பீ.விஜயன் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர் என்று கருதப்படும் செந்தூரன் என்பவர் கேரள கடல் வழியாக இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை ஆஸ்திரேலியாவுக்கு கடத்த முயன்றுள்ளார் என்று பொலிஸார் கூறுகின்றனர். தீவிரவாத நடவடிக்கை களுக்காக இவ்வாறு மக்கள் கடத்தப்பட்டார்களா என்று இந்திய பொலிஸார் அவரிடம் விசாரணை நடத்திவருகின்னர்.

பல நோக்கங்களுக்காக கடந்த சில வருடங்கள் செந்தூரன் ஆள் கடத்தலில் ஈடுபட்டார் என்றும் பொலிஸ் கூறுகிறது.

மீனவர் படகு மூலம் கேரளாவில் இருந்து 17 இலங்கையர்களை செந்தூரன் ஆஸ்திரேலியாவுக்கு நாடு கடத்த முயன்ற போது கடந்த ஜூன் 7 ஆம் திகதி கைதானார். (வ)

# ஆசிரியரைத் தாக்கிய அதிபர் கேட்டார் மன்னிப்பு பகிரங்கமாக

யாழ்ப்பாணம், ஜன.19

பாடசாலையில் வைத்து ஆசிரியையை ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்ட அதிபர் நீதிமன்றில் பகிரங்க மன்னிப்புக் கோரியதை அடுத்து அந்த வழக்கு சுமூகமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

விசாரணையில் இருந்து வந்த இந்த வழக்கு யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் சுமார் 3 மாதங்களுக்கு முன்னர் ஆசிரியையை பிரஸ்தாப அதிபர் தாக்கினார். இதையடுத்து வழக்கு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு விசாரணையில் இருந்து வந்தது. நேற்று முன்தினம் நீதிமன்றில் வைத்து பாடசாலையில் அவ்வாறு நடந்து கொண்டதற்காக அதிபர் மன்னிப்புக் கோருவதாக கூறியதை அடுத்து இரு தரப்பினரும் அந்த வழக்கை முடிவுக்கு கொண்டுவர இணக்கம் தெரிவித்ததை அடுத்து அது முடித்து வைக்கப்பட்டது. (த-4)

# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு 29 மில்லியன் ரூபா மருத்துவ உதவி

## நேற்று வழங்கினார் கிருஷ்ணா

கிளிநொச்சி, ஜன.19


கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு 29 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை இந்தியா அன்பளிப்புச் செய்தது. அந்த நாட்டு வெளியுறுவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நேற்றுப் பகல் 11 மணியளவில் அவற்றை வைத்தியசாலை அதிகாரிகளிடம் கையளித்தார்.

தொடர்ந்து போரால் சேதமடைந்த கிளிநொச்சி சிவபாதகலையகம் அ.த.க. பாடசாலையின் வர்ணம் பூசப்பட்ட கட்டடங்களைத் திறந்து வைத்தார். அதன் பின்னர் இந்திய அரசின் நிதியுதவியுடன் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டு வரும் 250 வீடுகளில் கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதிகளில் அமைக்கப்பட்டு வரும் வீடுகளில் 5 வீடுகளையும் பயனாளிகளிடம் கையளித்தார்.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா போரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களின் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு இந்தியா தொடர்ந்து உதவும் என்றார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியா தொடர்ந்தும் முழுமையான உதவிகளை செய்யும் என்றும் கூறினார். (உ-6)

# இந்திய வீடுகள் நேற்று பயனாளிகளிடம் கையளிப்பு



யாழ்ப்பாணம், ஜன.19

இந்திய அரசின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட இந்திய வீட்டுத்திட்டம் மற்றும் இந்திய அரசின் சைக்கிள்கள் என்பவற்றை இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா யாழ். நகரில் வைத்துப் பயனாளிகளிடம் கையளித்தார்.

நேற்று மாலை 3 மணியளவில் உலங்குவானூர்தி மூலம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழுவினர் முதலில் அரியாலை, நாவலடியில் இடம்பெற்ற வீடு கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் ரிஷாட் பதியுதீன், இலங்கைக்கான இந்திய தூதுவர் அசோக் கே.காந்த, துணைத் தூதுவர் சி. மகாலிங்கம், யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அகியோர் கலந்து கொண்டனர்.

இந்திய அரசின் நிதியுதவியில் அரியாலையில் அமைக்கப்பட்ட வீடு ஒன்றினை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தார். அங்கு வைத்து 48 பயனாளிகளுக்கு வீட்டுக்கான உறுதிப் பத்திரம் வழங்கப்பட்டது. பின்னர் பொதுமக்கள் மத்தியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தமிழில் சிறிது நேரம் உரையாற்றினார்.

அதன் பின்னர் யாழ். பொது நூலகத்தின் முன்னால் வைத்து இந்திய அரசின் சைக்கிள்கள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது. இதில் கிருஷ்ணாவுடன் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிசும் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டனர். இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா சம்பிரதாய பூர்வமாக பயனாளிகளிடம் சைக்கிள்களை வழங்கினார்.

அத்துடன் காங்கேசன் துறைக் கடற்பரப்பில் பழைய கப்பல்களை அகற்றும் பணிகள் முடிவடைந்தமைக்கான நினைவுச் சின்னம் ஒன்றும் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு வழங்கப்பட்டது. அத்துடன் கலாசார நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மேலும் இங்கு உரையாற்றிய இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், இந்தியா நம்பிக்கையான, நெருக்கமான நாடு. 2009ஆம் ஆண்டு போர்முடிவடைந்த பின்னர் இலங்கை அரசு புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகள் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது. பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் அரசு உறுதியாக உள்ளது.

மேலும் பொருளாதார ரீதியாக மக்களைப் பலப்படுத்துவதன் மூலமே இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண முடியும் என்று நம்புகின்றேன். தெற்கில் எவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றதோ அதே போன்றே வடக்கிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்களின் மீள்குடியமர்வு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் இலங்கை அரசு தொடர்ந்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றார்.

சகல நிகழ்வுகளிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்ட போதும் அவருக்கு உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. (த-15)

## பணிக்குச் செல்ல அனுமதி கோரும் தமிழ் வைத்தியர்

கொழும்பு, ஜன.19

விடுதலைப் புலிகளுக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு அமெரிக்காவில் சிறை வைக்கப்பட்டுள்ள இலங்கை வைத்தியரான முருகேசு விநாயமூர்த்தி தன்னை லண்டனில் உள்ள வைத்தியசாலையில் மீண்டும் பணிக்கு அனுமதிக்குமாறு கேட்டுள்ளார். 2006 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பைப் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து நீக்குவதற்காக சிரேஷ்ட அரச அதிகாரி ஒருவருக்கு லஞ்சம் வழங்கினார் என்றும் புலிகளுக்கு ஆயுதம் விநியோகிக்கும் வங்கிக் கணக்குகளை தன் வசம் வைத்திருந்தார் என்றும் இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார். (10)

# $13^+$ பல்லவியை வைத்து மீண்டும் ஏமாற்றுகிறது அரசு

## ரெலோ குற்றச்சாட்டு

போர் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த போது 13+ என்று ஏமாற்றிய மஹிந்த அரசு மீண்டும் அதே பல்லவியைப் பாட ஆரம்பித்துள்ளது எனத் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) குற்றஞ்சாட்டியுள்ளது. ரெலோவின் அரசியல் தலைவர் எம்.கே. சிவாஜிலிங்கம் கையெழுத்திட்டு அனுப்பியுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு-

இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்ந்தும் இழுத்தடிக்கப்பட்டே வருகின்றது. இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் உடனடியாக அங்கம் வகிக்குமாறு அழுத்தம் கொடுத்துள்ளார். அதன் மூலம் இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையை இந்திய வெளிவிவகார அமைச்சர் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கையில் இருக்கும் போது பேச்சுக்கு நாள் குறித்து விட்டு இலங்கை அரசு ஏமாற்றியுள்ளது. போர் தீவிரமாக இடம்பெற்ற காலத்தில் 13+ என்று ஏமாற்றிய மகிந்த அரசு மீண்டும் அதே பல்லவியைப் பாட ஆரம்பித்துள்ளது.

ஜெனிவாவில் இந்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் கூட்டத் தொடர் முடியும் வரையிலும் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து கூறுபோடும் வரையிலும் இலங்கை அரசு பேச்சு நாடகத்தைத் தொடரவே செய்யும். எனவே உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைப்பாட்சி (சமஷ்டி) அடிப்படையில் தமிழ் மக்கள் தங்களைத் தாங்கள் ஆளக் கூடிய ஆட்சி அதிகாரத்தை சர்வதேச சமூகத்தின் உத்தரவாதத்துடன் பெறுவதே கடந்த காலத்தில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான தமிழ் உயிர்களைப் பலி கொடுத்தற்கு ஈடாகும்.

எனவே தமிழ்த் தேசிய இனம் தனது தாயகத்தின் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழரசை நிறுவத் திடசங்கற்பம் ஏற்போம் என்றுள்ளது. (த-319)

## அரியாலையில் மின் விநியோகப் பணிகள்

அரியாலை நாவலடிப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான வேலைத்திட்டங்கள் விரைவாக நடைபெற்றுவருகின்றன. கண்டி வீதியில் இருந்து இந்தப் பகுதிக்கு மின்கம்பங்கள் நடப்பட்டு மின் வயர்கள் பொருத்தப்படுகின்றன.

இந்தப் பகுதியில் இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்பட்ட வீடுகள் திறந்து வைக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுவரும் நிலையில், மின் விநியோகம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-135)


## கணினி தட்டெழுத்தாளர் தேவை

எமது நிறுவனத்துக்கு
கணினித் தட்டெழுத்தாளர்கள் தேவை

மிக வேகமாகத் தட்டெழுத்துச் செய்யக்கூடிய
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 26.01.2012
ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக
அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி:
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 விடுதிகள் காலியாகின

யாழ்ப்பாணம், ஜன.19
ஸ்ரான்லி வீதியில் உள்ள விடுதிகள் ஐந்தில் இருந்து மக்கள் வெளியேறியுள்ளனர் என்று திணைக்கள அதிகாரி ஒரு வர் தெரிவித்தார்.

இந்த விடயம் தெடர்பாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளதா வது:

இந்த விடுதிகளில் தங்கியிருக்கும் மக்கள் விடுதிகளை விட்டுச் செல்வதற்குப் பின் நிற்கின்றனர்.

இதனால் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நெருக்கடி நிலைமை தோன்றுகிறது.

நேற்று வரைக்கும் ஐந்து விடுதிகளில் இருந்து மக்கள் வெளியேறிச் சென்றுள்ளனர்.

மேலும் ஏழு விடுதிகளில் அவர்கள் தொடர்ந்தும் தங்கியுள்ளனர்.

அவர்களும் விரைவில் வெளியேறவில்லை என்றால் இவர்களை வெளியேற்ற பொலிஸாரின் உதவிகளே கோரப்படும் என்றார்.

குடாநாட்டுக்கான ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்கும் நடவடிக்கைக்காகவே மக்கள் வெளியேற்றப்படுகின்றனர். (ம-17)

# மீண்டும் இடம்பெயர்வா?

## கிளாலி மக்களின் அவலம்

**மீளக் குடியமர்ந்த மக்களின் பிரதான தொழிலான கடற்றொழிலுக்குச் செல்ல இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.**

தென்மராட்சி, ஜன.19
கிளாலிப் பகுதியில் அண்மையில் மீளக் குடியமர்ந்த மக்கள் மீண்டும் தாம் முன்னர் இருந்த இடங்களுக்குத் திரும்ப வேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளனர்.

இப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களில் பெரும்பாலானோர் கடற்றொழிலாளர்கள். கிளாலி கடற் பரப்பில் மீன் பிடிக்க அனுமதிக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உட்பட அரச உயர் அதிகாரிகள், படையினர் ஆகியோரால் வாக்குறுதியளிக்கப்பட்டதையடுத்து 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று வீடுகள் இல்லாத நிலையில் பெருமளவு செலவில் காணிகளைத் துப்பரவு செய்து வீடுகளை அமைத்துக் குடியமர்ந்தனர்.

மீளக் குடியமர்ந்த மக்களின் பிரதான தொழிலான கடற்றொழிலுக்குச் செல்ல இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் தமது வாழ்க்கைச் செலவுக்கு பணம் இல்லாததால் பட்டினி வாழ்வை மேற்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால் மனமுடைந்த மீளக்குடியமர்ந்த மக்கள் தாம் முன்னர் தங்கியிருந்த இடங்களுக்குத் திரும்பவுள்ளதாகத் தெரிவித்தனர். (ம-207)



தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வேலணை சமுர்த்தி வங்கிச் சங்கம் பெண்களுக்கிடையில் திங்கட்கிழமை நடத்திய தேங்காய் துருவுதல் போட்டிகளில் பங்குகொண்ட போட்டியாளர்கள். (த- 7)

# கனரக வாகன அதிகரிப்பால் வீதி சேதம்

தென்மராட்சி, ஜன.19
கனரக வாகனங்களின் பாவனை அதிகரிப்பால் புதிதாகப் போடப்பட்ட வீதி குன்றும் குழியுமாக மாறியுள்ளது.

கச்சாயிலிருந்து கிளாலிக்குச் செல்லும் வீதி அண்மைய மழையின் பின்னர் கனரக வாகனப் போக்கு வரத்துக் காரணமாகவே சேதமடைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ம-207)

# சிறுவர்களின் முதுகில் ஏறிச் சவாரி செய்யும் சண்டிலிப்பாய்

## புள்ளிவிவரங்கள் சொல்கின்றன

**2011 இல் யாழ். மாவட்டத்தில் ஏனைய பிரதேச செயலக பிரிவுகளை விட அதிகளவான சிறுவர் தொழிலாளிகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிலேயே இனங் காணப்பட்டுள்ளனர்.**

யாழ்ப்பாணம், ஜன.19
பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள் மற்றும் சிறுவர் தொழிலாளிகள் எண்ணிக்கையில் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகை யில் 2011 ஆம் ஆண்டு பெருமளவில் குறைவடைந்துள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தால் வெளியிடப்பட்ட புள்ளி விவரத்திலேயே இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அதில்மேலும்குறிப்பிடப்பட்டுள்ளது வருமாறு

கடந்த 2010 ஆம் ஆண்டு 83 ஆக இருந்த சிறுவர் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டு 57 ஆகக் குறைவடைந்துள்ளது. மேலும் 2010 ஆம் ஆண்டு 349 ஆக இருந்த பாடசாலை செல்லாத சிறுவர்களின் எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டு 160 ஆகக் குறைவடைந்துள்ளது.

2011 ஆம் ஆண்டு புள்ளி விவரங்களின்படி, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலேயே அதிகளவி லான சிறுவர்கள்பாடசாலைக்குசெல்லாமல் இருந்துள்ளனர்.

சிறுவர் தொழி லாளர்களைப் பொறுத்த வரையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலேயே அதிகளவான சிறுவர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 2010 ஆம் ஆண்டுஅதிகளவான பாடசாலைக்கு செல்லாத சிறுவர்கள் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், அதிகளவான சிறுவர் தொழிலாளிகள் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலும் இனங் காணப்பட்டிருந்தனர். இப்போது கோப்பாயின் சாதனையை சண்டிலிப்பாய் முறியடித்துள்ளது. (ம-15)

# அலுவலருக்குச் சலுகை?

## தனியார் போக்குவரத்தில் பாகுபாடு

**"உத்தியோகத்தர் என்றால் எமக்கு சொல்ல வேண்டும். உத்தியோகத்தருக்கு 10 ரூபா குறைவு"**

தென்மாரட்சி, ஜன 19
ஏ-9 வீதியில் தனியார் பேருந்தில் பயணிக்கும் உத்தியோகத்தர்களுக்கு பத்து ரூபா சலுகைக் கட்டணம் வழங்கப்படுகிறது. இவ்வாறான சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஒரு உத்தியோகத்தர் தனது அலுவலக விடயமாகச் சாவகச்சேரியிலிருந்து பளைக்கு தனியார் பேருந்தில் சென்றபோது 30ரூபா கட்டணம் அறவிடப்பட்டு ரிக்கற் வழங்கப்பட்டது.

அதே உத்தியோகத்தர் நண்பகல் வேளையில் பளையிலிருந்து தனியார் பேருந்தில் ஏறியபோது 40 ரூபா ரிக்கற் வழங்கப்பட்டது.

பயணக் கட்டணத்தை கொடுத்த அவர் காலையில் வந்தபோது பயணக்கட்டணமாக 30 ரூபா கொடுத்தாகக் கூறி மாறுபட்ட கட்டணம் ஏன் அறவிடுகிறீர்கள் எனக் கேட்டுள்ளார்.

சிறிது நேரத்தின் பின்னர் அவரிடம் வந்த நடத்துநர் நீங்கள் உத்தியோகத்தரா என்று விசாரித்தபோது இவர் தான் வேலை செய்யும் தொழில் நிறுவனத்தைக் கூறியுள்ளார். அப்போது "உத்தியோகத்தர் என்றால் எமக்குச் சொல்ல வேண்டும் உத்தியோகத்தருக்கு 10 ரூபா கட்டணம் குறைவு" என்று கூறி 10 ரூபாவைத் திருப்பிக் கொடுத்துள்ளார்.

உத்தியோகத்தருக்கு விசேட சலுகையா? என்று ஏனைய பயணிகள் கேள்வி எழுப்பினர். (ம-207)



கொக்குவில் குளப்பிட்டி பொதுச் சந்தைக்கான அடிக்கல்லை நேற்று புதன்கிழமை நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் நட்டு வைத்தார். (ம-7)

# மாதாந்த கணக்கறிக்கை சமர்ப்பிக்க புதிய நடைமுறை

யாழ்ப்பாணம், ஜன.19
யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களது மாதாந்த கணக்கறிக்கையை இயக்குநர் சபையில் சமர்ப்பிப்பதற்கான புதிய நடைமுறை ஒன்று விரைவில் வரவுள்ளதாக மாவட்டக் கூட் டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் புதிய நடைமுறையின் கீழ் சங்கங்களின் மாதாந்த கணக்கறிக்கைகள் 20 ஆம் திகதிக்கு முன்பாக இயக்குநர் சபைக் கூட்டங்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்தக் கணக்கறிக்கைகளின் பிரதி வடிவங்கள் மாதாந்தம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்துக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்தக் கணக்கறிக்கைகளை உரிய வேளையில் சமர்ப்பிக்காத சங்கங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

சங்கங்களில்இடம்பெறும் சகல வரவு மற்றும் செலவுகள் போன்ற விவரங்கள் இக்கணக்கறிக்கையில் உள்ளடக்கப்படவுள்ளது என்றும் கூறப்பட்டது. (ம-17)

# 2011 இல் குறைந்தது துஷ்பிரயோகம்

யாழ்ப்பாணம், ஜன 19
யாழ். மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டைவிட 2011 ஆம் ஆண்டு சிறுவர் துஷ்பிரயோகம் குறைவடைந்துள்ளதாக யாழ்.மாவட்ட செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ள புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே மாவட்ட செயலகம் இந்தப் புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு 163 ஆகப் பதிவாகி இருந்த சிறுவர் துஷ்பிரயோகம் 2011 ஆம் ஆண்டு 146 ஆகக் குறைவடைந்துள்ளது.

2010 ஆம் ஆண்டு பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் 54 ஆகக் காணப்பட்ட போதும் 2011 ஆம் ஆண்டு அது 72 ஆக அதிகரித்துள்ளது.

2011 ஆம் ஆண்டு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிலேயே அதிகளவிலானசிறுவர்துஷ்பிரயோகம் இடம் பெற் றுள்ளது. (ம-15)

## பழைய இடத்தில் புதிய கட்டடத்தில்

# பருத்தித்துறை நீதிமன்றம்

**புனரமைக்கப்பட்ட நீதிமன்றம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.15 மணிக்கு சுபவேளையில் ஆரம்பிக்கப்படும்**

வடமராட்சி, ஜன.19
பருத்தித்துறை நீதிமன்றம் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 27 வருட கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் பழைய இடத்தில் இயங்கவுள்ளது.

இலங்கை சுதந்திரம் அடைய முன்னர் 1940 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு அருகில் நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் இவற்றுக்கான தனித்தனி அலுவலகங்கள், தற்காலிக சிறைக்கூடம், சிறைக்கூட அலுவலகம், சட்ட நூலகம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் கொண்டதாகக் கட்டப்பட்டிருந்த பருத்தித்துறை நீதிமன்றக் கட்டடத் தொகுதி [illegible] மாக 1985 ஆம் ஆண்டு முதல் இயங்காமல் இருந்ததுடன் கடும் யுத்தத்தால் நீதிமன்றக் கட்டடத் தொகுதி பலத்த சேதத்துக்கும் உள்ளானது.

1997 ஆம் ஆண்டு யாழ். குடாநாடு அரசின்கட்டுப்பாட்டுக்குக் கீழ் வந்ததைத் தொடர்ந்து 12 வருடகால இடைவெளிக்குப் பின்னர் வதிரியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் பருத்தித்துறை நீதிமன்றம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டு வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் பருத்தித்துறை நகரில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தில் மீண்டும் நீதிமன்றத்தை இயங்கவைக்க நீதி அமைச்சு, பருத்தித்துறைச் சட்டத்தரணிகள் சங்கம் என்பன மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து 1940 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நீதிமன்றக் கட்டடத் தொகுதி சேதமடைந்திருந்த போதிலும் கட்டடம் வலுவாக இருப்பதனால் அதனைப் புனரமைப்புச் செய்யலாம் எனக் கட்டடத் திணைக்களப் பொறியியலாளர் குழு சிபார்சு செய்திருந்தது.

இதனைத் தொடர்ந்து இந்த நீதிமன்றக் கட்டடத் தொகுதியைப் புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி 70 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தது. அந்த நிதியில் கடந்த ஆண்டு புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வேகமாகப் புனரமைப்புப் பணிகள் நிறைவுற்று கடந்த மாதம் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், பிரதம நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்க ஆகியோரால் வைபவ ரீதியாகத்திறந்துவைக்கப்பட்டது.

புனரமைக்கப்பட்ட நீதிமன்றம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.15 மணிக்கு சுபவேளையில் ஆரம்பிக்கப்படும் போது 5 வழக்குகள் நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் ஆகியவற்றில் தனித்தனியே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என பருத்தித்துறை நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றச் செய்திகள்

யாழ்ப்பாணம், ஜன.19

அரியாலையில் 5 பேரை அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நால்வரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

எனினும் இவர்கள் மாணவர்கள் என்பதனால் தண்டப்பணம் அறவிடப்படவில்லை. எனினும் அரச செலவாக ஒவ்வொருவரையும் தலா ஆயிரம் ரூபா செலுத்துமாறு நீதிவான் உத்தர விட்டார்.

2011 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நால்வரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர்.

அதன் போது நீதிவான் நால்வரையும் சான்று பெற்ற பாடசாலை ஒன்றில் அனுமதிக்குமாறும் உத்தர விட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. (ம-4)

# பல்கலை விரிவுரையாளர்கள் அடையாள வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜன.19

2012 வரவு செலவுத் திட்டத்தின் படி பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படாததைக் கண்டித்து, யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் நேற்று முன்தினம் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது பல்கலை ஆசிரியர் சங்கம் பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தியிருந்தது.

✱ 2012 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டது போல அனைத்து ஆசிரியர்களுக்கும் அவர்களது அடிப்படைச் சம்பளத்தில் 20 வீதம் வழங்கப்படும் என்று உறுதிமொழியை அரசு நிறைவேற்றவில்லை.

✱ சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கு 16 வீதமும் கனிஷ்ட விரிவுரையாளர்களுக்கு 3 வீதமுமே சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இது அரசு கொடுத்த வாக்குறுதிக்கு முரணானது.

✱ நாட்டின் தேசிய வருமானத்தில் உயர் கல்விக்கு என 6 வீதம் ஒதுக்கப்பட வேண்டும் எனக் கேட்டிருந்த போதிலும் 1.9 வீதம் என்று மிகக்குறைந்த அளவே ஒதுக்கப்பட்டுள்ளது.



**சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கு 16 வீதமும் கனிஷ்ட விரிவுரைகளுக்கு 3 வீதமுமே சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இது அரசு கொடுத்த வாக்குறுதிக்கு முரணானது.**

✱ பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கருத்துகள் கேட்கப்படாமல் தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இது தொடர்பில் நாடாளுமன்றில் சட்ட மூலம் நிறைவேற்றப் படாவிட்டாலும் உள்ளார்ந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது பல்கலைக்கழக விரிவுரையாளர்களை புறமொதுக்கும் செயற்பாடாகவே உள்ளது.

அத்துடன் பரீட்சைக் காலக் கொடுப்பனவுகள், வருகை விரிவுரையாளர்களுக்கான சம்பளம் போன்றவை இன்னமும் அதிகரிக்கப்படாமை போன்ற விடயங்களைக் கண்டிக்கின்றோம்.

✱ பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு குறைந்த வட்டியிலான வீட்டுக்கடன் வசதிகள் செய்து தரப்படாமை.

✱ பல்கலைக்கழக ஆசிரியர்களின் பிள்ளைகளைப் பாடசாலைக்குள் உள்வாங்கும் நடமுறைகள்.

✱ பல்கலைக் கழக சுயாதீனம் பேணப்பட வேண்டும்.

ஆகிய 7 கோரிக்கைகளை முன்வைத்து இந்த அடையாள பணிப்புறக் கணிப்பை யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தினர் முன்னெடுத்திருந்தனர். (த-10-313-ரி)

## தொற்றுநோய் தாக்கம் குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.19

குடாநாட்டில் அண்மைக் காலமாகத் தொற்று நோய்களின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

தற்போது நிலவும் கால நிலை மாற்றம் காரணமாகவே இது அதிகரித்துக் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

காய்ச்சல், தடிமன், சளி, தலையிடி போன்ற பல்வேறு நோய்த் தாக்கங்களால் பாதிக்கப்படுவோரே பெருமளவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் பெரும் எண்ணிக்கையானோர் இவ்வாறு சிகிச்சை பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது. பகலில் கடும் வெப்பத்துடன் கூடிய வரட்சியும் இரவில் நிலவும் கடும் குளிரும் கடந்த காலங்களை விட இம்முறை அதிகரித்த நிலையிலேயே காணப்படுகிறது. இதனால் வயோதிபர்களும் குழந்தைகளுமே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-17)

## நெற்பயிர்களை தாக்கும் சந்துகுத்தி

யாழ்ப்பாணம்,ஜன.19

யாழ்.மாவட்டத்தில் நெற்பயிர்களில் ' சந்துகுத்தியின் தாக்கம் தற்போது அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஆரம்பத்திலேயே இதனைக் கட்டுப்படுத்தவேண்டும் எனவும் இதனை அறிந்திராத விவசாயிகள் கட்டுப்படுத்தத் தவறி விட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை, இதன் தாக்கத்தால் பெரியளவில் சேதம் ஏற்படாது என்றும் விவசாயிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. (ம-17)

# கொலைக்குப் பயன்பட்டது ஹயஸ்; கொள்வனவு செய்தவர் பொலிஸில்

யாழ்ப்பாணம், ஜன.19

நுவரெலியாவில் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனத்தை யாழ்ப்பாணத்துக்குக் கடத்தி ஒன்றரை லட்சம் ரூபாவுக்கு விற்ற போது அதனைக் கொள்வனவு செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரை யாழ். பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த நபரை யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தியதோடு வாகனத்தையும் நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

வாகனத்தை நுவரெலியா ஹல்வொட நீதிமன்றில் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டதோடு சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறும் எதிர்வரும் 24 ஆம் திகதி நுவரெலியா நீதிமன்றில் ஆஜராகும் வகையில் அங்கு ஒப்படைக்குமாறும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

நுவரெலியாவில் அண்மையில் நடந்த கொலை ஒன்றுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனத்தையே கொலையாளிகள் யாழ்ப்பாணத்துக்குக் கடத்தி வந்து அதனை ஒன்றரை லட்சம் ரூபா விலைக்கு விற்றுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் அந்த ஹயஸ் ரக வாகனம் வேறொரு நிற பெயின்ற் பூசுவதற்காக கராஜ் ஒன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த போது அது பொலிஸாரால் கண்டறியப்பட்டது.

அதனையடுத்தே அதனைக் கொள்வனவு செய்த சந்தேக நபரைக் கைது செய்ததோடு வாகனத்தையும் பொலிஸார் மீட்டனர்.

மூன்று நாள்களாக சந்தேக நபர் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணைக்குட்படுத்தியிருந்த நிலையில் நேற்று முன்தினம் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

இது தொடர்பாகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-4)



காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தால் வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு தைப்பொங்கல் தினமான ஞாயிற்றுக்கிழமை வியாவில் ஐயனார் ஆலய நூல் நிலையத்தில் இடம்பெற்ற போது கால்கள் பாதிக்கப்பட்ட பயனாளி ஒருவருக்கு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வாழ்வாதார உதவித் தொகையை வழங்குகிறார். (த-250)

## மாலை நேர சிகிச்சைக்குச் செல்வோர் அதிகரிப்பு

தென்மராட்சி, ஜன.19

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவுக்குக் கடந்த மூன்று தினங்களாகப் பிற்பகலில் வரும் நோயாளர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் முதலாம் திகதி ஓய்வு பெற்றுச் சென்ற உதவி வைத்திய அதிகாரி ச.அம்பிகைபாகன் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் நியமிக்கப்பட்டுப் பிற்பகல் வேளையில் அவருக்குக் கடமை நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதை அறிந்த நோயாளர்கள் மாலை வேளையில் வெளிநோயாளர் பிரிவுக்கு படையெடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மருத்துவர் அம்பிகைபாகன் முற்பகலில் வெளி நோயாளர் பிரிவில் கடமையாற்றுவதுடன் பிற்பகல் 2 மணி தொடக்கம் இரவு 8 மணி வரையும் கடமையாற்றி வருகிறார். இதனாலேயே நோயாளர்கள் மாலை வேளையில் பெரும் எண்ணிக்கையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம)

# திருநாவுக்கரசு ம.விக்கு தனியான ஆரம்பப் பிரிவு

தென்மராட்சி, ஜன.19

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் ஆயிரம் பாடசாலைகள் தரம் உயர்த்தும் திட்டத்தில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் தரம் உயர்த்தப்பட்டது.

இதனையடுத்து அங்கு இயங்கிய ஆரம்பப் பிரிவு தனியான நிர்வாக அலகின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை என்னும் பெயரில் புதிய அலகாக முன்னர் மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு இயங்கிய கட்டடத்தில் இயங்கவுள்ளது.

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலைக்கு புதிய அதிபரை நியமிப்பதற்கான ஏற்பாடுகள் தென்மராட்சி கல்வி வலயத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, பாடசாலைகள் தரம் உயர்த்தும் திட்டத்தில் தென்மராட்சிக் கல்வி வலயத்தை சேர்ந்த மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் தரம் உயர்த்தப்படவுள்ளதாகக் கல்வி அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-207)

# நயினாதீவு மின்சாரப் பணிகள் இந்த ஆண்டு நிறைவடையும்

யாழ்ப்பாணம், ஜன.19

நயினாதீவுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்குவதற்கான பணிகள் யாவும் இந்த ஆண்டுடன் நிறைவடையும் என்று வேலணைப் பிரதேச செயலர் மு. நந்தகோபாலன் தெரிவித்தார்.

**24 மணி நேரமும் மின்சாரம் வழங்குவதற்கான பணிகள் இந்த ஆண்டுடன் நிறைவடையும் என்று பிரதேச செயலர் கூறுகிறார்.**

நயினாதீவுக்கான மின்சார விநியோகத்தில் சீரற்ற நிலை காணப்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர் என வும் இந்த நிலையில் முற்று முழுதாக அந்த பகுதிக்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்க வேண்டும் என நயினாதீவு பிரதேச சபைக் கூட்டத்தில் கூறியிருந்தனர்.

இந்த நிலையில் பிரதேச செயலர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அத்துடன் நயினாதீவுக்கான கடற்பாதை குறித்துத் தீர்வு காணவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும் அவை நிறைவேறவில்லை. விரைவில் இதைச் செயற்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை, நயினாதீவுக்கான குடிதண்ணீர் பிரச்சினைக்கும் விரைவில் தீர்வு காணப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பட்டதாரிகள் நியமனத்தில் கணிதத் துறைக்கு யாருமில்லை

நுவரெலியா, ஜன.19

ஊவா மாகாணத்தில் வழங்கப்பட்டிருக்கும் 21 தமிழ் பட்டதாரிகளுக்கான ஆசிரிய நியமனத்தில் ஒருவர் கூட கணிதத்துறைசார் பட்டதாரியில்லை என்பது விசனத்திற்குரியது என்று ஊவா மாகாணசபை உறுப்பினர் அரவிந்குமார் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

கடந்த வாரம் ஊவா மாகாணத்தில் சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் பட்டதாரிகள் 276 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது. அவற்றில் 21 தமிழ்ப் பட்டதாரிகள், 15 முஸ்லிம் பட்டதாரிகள் உள்ளிட்ட ஏனைய 240 சிங்களப் பட்டதாரிகளில் கலைப் பட்டதாரிகள் 17 பேர், வர்த்தகப் பட்டதாரிகள் 2 பேர், விவசாய பட்டதாரி ஒருவர், விஞ்ஞான பட்டதாரி ஒருவர் என்ற வகையில் உள்ளடங்குகின்றனர்.

**கடந்த வாரம் ஊவா மாகாணத்தில் சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் பட்டதாரிகள் 276 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக கணிதத்துறையில் ஒருவர் கூட இல்லாமை பெரும் விசனத்தை அளிக்கின்றது.**

ஆனால், துரதிஷ்டவசமாக கணிதத்துறையில் ஒருவர் கூட இல்லாமையும், விஞ்ஞானத்தில் ஒருவர் மாத்திரமே நியமனம் பெற்றிருக்கின்றமையும் பெரும் விசனத்தை அளிக்கின்றது.

அதேவேளை, வழங்கப்பட்டுள்ள 240 பெரும்பான்மை சமூகத்தைச் சார்ந்த பட்டதாரிகளில் 95 பேர் கணிதத்துறைசார் பட்டதாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது. இது இந்த மாகாணத்தின் சிங்கள மொழி மூலமான கல்வித் தகைமையின் தரத்தையும், வளர்ச்சியையும் புடம்போட்டுக் காண்பிப்பதாகவும் உள்ளது.

எனவே, தமிழ்க் கல்வித் துறையை மேம்படுத்துவதும், அதனைச் சரியான பாதையில் வழிநடத்திச் செல்வதும் எமது தலையாய கடமையாகும். இதுவே, எமது சமூகம் முன்னேறுவதற்கான அடித்தளமாகவும் அமையும்.

இதனைக் கருத்திற்கொண்டே இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துகளை முன்வைத்த நான், ஊவா மாகாணத்தின் மாகாணக் கல்வியமைச்சிலே தமிழ்ப் பிரிவு ஒரு தமிழ் மேலதிக செயலாளரின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்படல் வேண்டும். அதேபோல் மாகாண கல்வித் திணைக்களத்திலும் தமிழ்ப் பிரிவு ஒரு மேலதிக தமிழ் மாகாண கல்விப் பணிப்பாளரின் கீழ் கொண்டுவரப்படல் வேண்டும் எனவும் வலியுறுத்தினேன்.

இதுதொடர்பாகத் தயாரிக்கப்பட்ட ஆவணம் ஒன்றை மாகாணத்தின் கல்வி அமைச்சராகவும் செயலாற்றும் முதலமைச்சர் சஷிந்திர ராஜபக்ஷவிடம் கையளித்தேன்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

## காவத்தையில் குழு மோதல் ஆறு பேர் படுகாயம்

இரத்தினபுரி,ஜன.19

இரத்தினபுரி, காவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புங்கிரிய தோட்டத்தில் இரு குழுக்களுக்கிடையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் 6பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

இந்தத் தோட்டத்தின் எல்லைப்புறத்தில் அமர்ந்து தோட்டத் தொழிலாளர்கள் சிலர் மது அருந்திவிட்டு கூச்சலிட்டுக் கொண்டிருந்துள்ளனர். இதனால் அயலவர்கள் அவர்களை அங்கிருந்து செல்லுமாறு கோரியுள்ளனர்.

இதனையடுத்து இரு தரப்புக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.இந்தச் சம்பவத்தில் 5 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மோதல் சம்பவத்தால் புங்கிரிய தோட்டத்தில் அமைந்துள்ள இரு கடைகள், தனியார் பஸ் ஒன்று மற்றும் நான்கு வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தை அடுத்து குறித்த பிரதேசத்துக்கு விரைந்த பொலிஸார், மோதலைக் கட்டுப்படுத்துவதற்காக துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதனால் தோட்டத் தொழிலாளி ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து இரத்தினபுரி பிரதி பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கிணங்க குறித்த தோட்டத்தில் பொலிஸாரும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ச)

## விவேகானந்தர் சிலை உடைப்புக்கு கண்டனம்

மட்டக்களப்பு, ஜன.19

மட்டக்களப்பு, ஆரையம்பதியில் அமைக்கப்பட்டிருந்த சுவாமி விவேகானந்தர் சிலை விஷமிகளால் உடைக்கப்பட்ட சம்பவமானது கண்டிக்கத்தக்க விடயமாகும் என்று இலங்கை - இந்திய வம்சாவளி மக்கள் முன்னணியின் தலைவர் முத்தப்பன் செட்டியார் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சுவாமி விவேகானந்தர் இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் அனைவரையும் தனது ஆன்மிக கருத்துகளால் உள்வாங்கிய பொது நோக்கும் சமூக சிந்தனையும் கொண்ட ஒருவராவார்.

உலக மக்கள் அனைவருக்கும் ஆன்மிக கருத்துகளை விஞ்ஞான ரீதியாக சமூக நோக்குடன் வெளிப்படுத்தியவர் என்ற பெருமையைப் பெற்றுக்கொண்ட சுவாமி விவேகானந்தரின் சிலையை உடைத்து நொறுக்க முற்பட்ட சம்பவமானது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியதொரு கசப்பான நிகழ்வாகும்.

சுவாமி விவேகானந்தரின் ஆன்மிகக் கருத்தும் எப்போதும், எந்தவகையிலும் எந்தவொரு மத நல்லிணக்கக் கோட்பாட்டுக்கும் இடையூறாக அமையவில்லை என்பதை நயவஞ்சகத்தனம் கொண்டவர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்தகால யுத்தத்தின் கசப்பான அனு பவங்களை எதிர்கொண்ட எமது மக்கள் மத நல்லிணக்க கோட்பாட்டின் ஊடாக ஐக்கி யத்தைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும். அதைவிடுத்து பகைமை உணர்வுகளைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகளில் ஒருபோதும் ஈடுபடக் கூடாது- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



மேல் கொத்மலை நீரணையின் நீர் சுரங்கப்பாதைக்குப் பரீட்சார்த்தமாக நீர் விடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மின்சக்தி அமைச்சர் பாட்லி சம்பிக்க ரணவக்க கலந்துகொண்டு மங்கல விளக்கேற்றுகின்றார். அருகில் மேல்கொத்மலைத் திட்டத்தின் அதிகாரிகள் காணப்படுகின்றனர்.

## மீன்பிடிப் படகுகளை நங்கூரமிட நடவடிக்கை

பாலமுனை, ஜன.19

கல்முனை பிரதேச மீனவர்களின் மீன்பிடிப்படகுகளைத் தற்காலிகமாக ஒலுவில் துறைமுகப் பகுதிக்குள் நங்கூரமிடுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கல்முனை பிரதேசத்தில் கடந்த மூன்று நாள்களாக கடல் கொந்தளிப்பு காணப்படுகிறது. எனவே, மீன்பிடிப் படகுகளை நிறுத்தி நங்கூரமிட முடியாமல் இருந் தமையால் மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்தனர். அம்பாறை மாவட்ட மீனவர் சங்க உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸிடம் மேற்படி விடயத்தை தெரிவித்ததன் பலனாக தற்காலிகமாகக் கல்முனை பிரதேச மீன்பிடிப் படகுகளை ஒலுவில் துறைமுகப் பகுதிக்குள் நங்கூரமிடுவதற்கு அனுமதியளிக்கப்பட்டது. (ச)

## சந்தர்ப்பவாதிகளின் குகையாக மாறுகிறது முஸ்லிம் காங்கிரஸ்

கல்முனை, ஜன.19

சந்தர்ப்பவாதிகளின் குகையாக மாறியிருக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை மீட்டெடுக்க இளைஞர்கள் முன்வர வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதித் தலைவர் எஸ். நிஜாமுதீன் தெரிவித்தார்.

முன்பள்ளி ஆசிரியர் மற்றும் தையல்பயிற்சி நெறிகளைப் பூர்த்திசெய்த பயிலுநர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருது பரடைஸ் வரவேற்பு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தான்தோன்றித்தனமாக சரியான முடிவுகளை எடுக்கத்தவறும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று மக்கள் மனங்களிலிருந்து தூரப் போகின்ற நிலையே காணப்படுகின்றது. இவை அனைத்துக்கும் காரணம் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு காத்திரமான பங்களிப்பை வழங்கத் தவறியமையாகும்.

எமது சமூகம் பல்வேறுபட்ட பிரச்சினைகளில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றபோது, முஸ்லிம் முதலமைச்சர் சாத்தியமாகாத வடக்கு, கிழக்கு இணைப்பு என்றெல்லாம் ஊடகங்களுக்கு அறிக்கைகள் விடுவதில் கவனம் செலுத்துகிறார். இதன்மூலம் கட்சியை சரிவிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக மக்களைத் திசை திருப்புகின்ற நாடகத்தை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அண்மைக் காலமாக அரங்கேற்றிவருகிறது. இது ஒருபோதும் இவர்களுக்கு கைகூடப் போவதில்லை - என்றார். (ச)

## அசிட் வீசியவர் விளக்க மறியலில்

மாவனல்லை, ஜன.19

மனைவிக்கு அசிட் வீசி கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவனல்லை நீதிவான் செனிக் விஜேசிங்க நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார்.

மாவனல்லை, ஹெம்மாதகமை நகரில் கடந்த 14ஆம் திகதி வீட்டில் வைத்து மனைவிக்கு அசிட்டை முகத்தில் வீசி கொலை செய்தார் என்று குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த மூன்று பிள்ளைகளின் தாயான இந்தப் பெண் ஸ்தலத்திலேயே உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கணவன் மீதான காதல் மனைவி உயிரைப் பறித்தது

### கஞ்சிக்குடிச்சாறில் சம்பவம்

கஞ்சிகுடிச்சாறு, ஜன.19

வீட்டிலிருந்து சென்ற கணவரை நீண்டநேரமாக காணாததால் பதைபதைத்த மனைவி பிரிவுத் துயரைத் தாங்காமல் நஞ்சருந்தி உயிரை மாய்த்துக்கொண்டார். இந்தச் சம்பவம் திருக்கோயில் கஞ்சிக்குடிச்சாறு பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

குறித்த பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான குளத்தில் மீன்பிடிப்பதற்காகச் சென்ற செல்லத்துரை நடேசபிள்ளை (வயது - 62) என்பவர் குளத்தில் தவறிவீழ்ந்து உயிரிழந்துவிட்டார். இதனை அறியாத மனைவி கணவரை காணவில்லையே என்று கண்ணீரும் கம்பலையுமாக தேடி அலைந்துள்ளார். எங்கு தேடியும் கணவர் கிடைக்கவில்லை. இதனால் பிரிவுத் துயரைத் தாங்க முடியாமல் அந்த வயோதிப மனைவி நஞ்சருந்தி தன் உயிரைத் துறந்துள்ளார்.

அடுத்த நாள் காலை குளத்தில் மிதந்த படி இருந்த கணவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. அதேவேளையில் நஞ்சருந்தி உயிழந்த மனைவியின் சடலமும் அதே வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. பிரிந்துபோன அந்த வயதான தம்பதிகள் பிணவறையில் சடலங்களாக ஒன்றிணைந்தன.

## வான்கதவு மூடப்பட்டது

மேல் கொத்மலை நீர் மின்சார திட்டத்தின் படி இரண்டாவது கட்டத்தில் நீரை தேக்குவதற்காக அதிலுள்ள வான் கதவுகள் கடந்த 12ஆம் திகதி மாலை 5 மணிக்கு மூடப்பட்டன.

அதன்படி நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் கடல் மட்டத்திலிருந்து ஆயிரத்து184 அடியாகத் தற்போது உள்ளது.

## சட்ட விரோதமாக மரம் அரிந்த; ஐவருக்கு ரூ. 1 லட்சம் அபராதம்

புபுதுபுர, ஜன.19

அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் பலகை அரியும் நிலையமொன்றை நடத்திய ஐவருக்கு ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபா அபராதம் விதித்து அநுராதபுரம் மேலதிக மாவட்ட நீதிவான் ருவன்னிக்கா மாரப்பன தீர்ப்பளித்தார்.

பண்டாரநாயக்கா வீதி, விஜயபுர பகுதியைச் சேர்ந்த ஐவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் ஐவரும் சட்ட விரோதமான முறையில் அநுராதபுரம், புபுதுபுர பகுதியில் சட்டவிரோதமாக இந்தநிலையத்தினை நடத்திவந்தபோது உலுக்குளம் பொலிஸ் பிரிவின் விசேட அதிரடிப் படையினரால் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேக்குக் குற்றிகள் 58, வாள், இரண்டு சக்கர உழவு இயந்திரம் உட்பட பல பொருள்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளதோடு தேக்கு குற்றிகள் மற்றும் வாளினை அரச உடமையாக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஸ்ரீ லங்கா இன்ஷுரன்ஸின் புதிய கிளைகள், முல்லைத்தீவு மற்றும் சாவகச்சேரியில்

இயற்கையென்பது வாழ்க்கைக்கான ஓர் கொடை. ஆயினும் வாழ்க்கையென்பது அற்புதங்கள் மிக்க உன்னத கொடை. உங்களது அந்த அற்புதமான வாழ்க்கைக்கு உங்களுக்கே உரிய இயற்கை வளத்துடன் சேர்ந்து நாமும் அக்கறையுடன் எமது பாதுகாப்பின் கூரைகளில் உங்களை அரவணைத்துக் கொள்ள, இதோ 2012 ஜனவரி 19ஆம் திகதியாகிய இன்று முதல், முல்லைத்தீவு மற்றும் சாவகச்சேரியில் எமது புதிய கிளைகளை திறக்கின்றோம்.

அரைநூற்றாண்டுகாலமாக காப்புறுதிச் சேவையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருவதில் பெருமிதம் கொள்ளும் ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸாகிய எமது சாவகச்சேரி கிளையானது ஏ9 வீதி, சாவகச்சேரியில் மு.ப. 9.15 மணிக்கும், முல்லைத்தீவு கிளை, பிரதான வீதி, முல்லைத்தீவில் பி.ப. 3.30 மணிக்கும் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படும். இப் பிரதேச வாழ் மக்கள் அனைவரையும் இத் திறப்பு விழாக்களில் கலந்துகொள்ளுமாறு ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸின் முகாமைத்துவத்தினரும், ஊழியர்களும் அன்புடன் வரவேற்கின்றார்கள்.

AAA RAM RATINGS

AA (lka) FitchRatings

SGS UKAS

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைதீவில் வெடித்தது கலவரம்

**அரசால் கைது செய்யப்பட்ட நீதிபதிக்கு ஆதரவு தெரிவித்தும், அரசின் ஜனநாயக விரோதச் செயலைக் கண்டித்தும் நாடு முழுவதும் நீதிமன்ற ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர்.**

## நீதிபதியைக் கைது செய்ததால் வந்த வினை



மாலே, ஜன.19

மாலைதீவில், அரசுக்கெதிராக அவதூறு பேசினார் என்று கைது செய்யப்பட்ட எதிர்க்கட்சித் தலைவரை, அந்த நாட்டு நீதிபதி விடுதலை செய்தார். அந்த நீதிபதியை இராணுவம் கைது செய்தததால் அங்கு கலவரம் வெடித்துள்ளது.

நீதிபதி அப்துல்லா மொகமட்டை ஏன் நீதிமன்றில் இன்றும் முற்படுத்தவில்லை என்று அந்த நாட்டு உயர் நீதிமன்றம் தேசிய பாதுகாப்புப் படையினரிடம் நேற்றுக் கேள்வி கேட்டிருந்தது.

பாதுகாப்புப் படையினருக்கு அனுப்பிய கடிதத்தில், நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு முன்னர் படையினர் நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

முன்னதாக நீதிபதியை விசாரணைக்கு வருமாறு திங்கட்கிழமை இரவு பொலிஸ் விடுத்த அழைப்பாணையை நீதிமன்றம் நிராகரித்தது. நீதிபதிக்கு அழைப்பாணை அனுப்பும் அதிகாரம் பொலிஸுக்கு இல்லை என்று அது கூறியது.

மாலைதீவின் எதிர்க்கட்சித் தலைவரான முகமது ஜலில் அகமது என்பவர் அந்த நாட்டு அதிபர் முகமது நஷீத் மற்றும் அவரது தலைமையி லான அரசை அவதூறாகப் பேசி தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டி அளித்தார். இது தொடர்பாக முகமது ஜமில் அகமது மீது வழக்கு தொடரப்பட்டது. இதனால் கைது செய்யப்பட்ட அவர் குற்றவியல் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி, முகமது ஜமில் அகமது கைது செய்யப்படுவதற்கான ஆணை எதுவும் பிறப்பிக்கப்படவில்லை எனக் கூறி அவரை விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

இதையடுத்து தலைமை நீதிபதி எதிர்க் கட்சித் தலைவரிடம் லஞ்சம் பெற்று அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கியுளாளார் எனக் கூறி மாலை தீவு இராணுவம் நீதிபதியைத் திடீரெனக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது.

இந்த விவகாரம் மாலைதீவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நீதிபதிக்கு ஆதரவு தெரிவித்தும் அரசின் ஜனநாயக விரோத செயலைக் கண்டித்தும் நாடு முழுவதும் நீதிமன்ற ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர். நீதிபதியை உடனடியாக விடுவிக்கக் கோரி, நேற்று முன்தினம் மாலைதீவு இராணுவத் தலைமையகத்தை நோக்கி நடந்த பேரணியில் பொலிஸார் தலையிட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதனால் பேரணி பெரும் கலவரமாக மாறியது. இதன்போது ஏராளமான பொதுமக்கள் காயமடைந்தனர். மேலும் 200 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். நீதிபதியை விடுவிக்கும் வரை நாடு முழுவதிலும் தமது எதிர்ப்புப் போராட்டம் தொடரும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். (ங-ந)

# ஏமனில் அல்குவைதா; சிக்கியது சிறு நகரம்

**தான் பதவி விலகினால் நாடு அல்–குவைதாவின் கையில் சிக்கும் என அதிபர் சலே ஏற்கனவே எச்சரித் திருந்தார்.**

ஏமன் நாட்டின் தென் பகுதியில் உள்ள ஒரு சிறு நகரை, அல்-குவைதா அமைப்பினர் கைப்பற்றியுள்ளனர் அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யேமனின் அதிபராக இருந்த அலி அப்துல்லாசலே பதவி விலகிய பின் தற்போது இடைக்கால அரசே பொறுப்பில் உள்ளது. இந்த நிலையில் சலே ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் ஆங்காங்கே மோதல்கள் நடந்து வருகின்றன.

கடந்த 23 ஆண்டு கால ஆட்சியில் சலேவும் அவரது அமைச்சர்களும், அதிகாரிகளும் செய்த வன்முறைகளுக்காக அவர்கள் மீது வழக்கு தொடுக்கப்படவேண்டும் எனக் கோரி மக்களும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தலைநகர் சனாவில் இருந்து தெற்கில் 160 கி.மீ. தொலைவில் பைடா மாகாணத்தைச் சேர்ந்த ரட்டா என்ற நகரை அல்-குவைதாவினர் நேற்றுமுன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

தான் பதவி விலகினால் நாடு அல்-குவைதாவின் கையில் சிக்கும் என அதிபர் சலே ஏற்கனவே எச்சரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ங-ந)

# டார்வினின் புதையல்

## தொலைந்த புத்தகம் கிடைத்தது



புத்தகத்தின் ஒரு பக்கம்

பரிணாமக் கோட்பாட்டை உருவாக்கிய சார்ல்ஸ் டார்வினினால் சேகரிக்கப்பட்ட புதை படிமங்கள் அடங்கிய புத்தகம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

160 ஆண்டுகளுக்கு மேலாக காணாமல் போயிருந்த இந்தப் புத்தகம் லண்டனில் உள்ள ரோயல் ஹொலெவே பல்கலைக் கழகத்தின் ஒரு பழைய அலுமாரிக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தூசுபடிந்து காணப்பட்ட இந்த அலுமாரியை வேறு தேவைக்காகத் திறந்தபோது இந்த அரிய புத்தகம் கண்டெடுக்கப்பட்டதாக அந்தப் பல்கலைக் கழகத்தின் மருத்துவர் பொல் கொள்லான்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

சால்ஸ் டார்வினால் 20 வயதில் 5 ஆண்டுகள் தென்னமெரிக்கா சுற்றுப்பயணத்தின் போது இந்தப் புதைபடிமங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவை 1830ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்டவையாகும். எனினும் இந்தப் புத்தகம் 160 ஆண்டுகளுக்கும் மேலாகக் காணாமல் போயிருந்தது. கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் புத்தகத்தில் 314 புதை படிமங்கள் உள்ளன. இதில் சிலி நாட்டுக் கடற்கரையில் இருந்த கண்டெடுக்கப்பட்ட 40 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த தாவரங்களின் படிமங்களும் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (ங-ந)

# வெள்ளை மாளிகையில் திடீர்ப் புகை





வொஷிங்டன், ஜன.19

அமெரிக்க அதிபரின் உத்தியோகபூர்வ வெள்ளை மாளி கையில் நேற்று முன்தினம் திடீரெனப் புகை கிளம்பியது. இதனையடுத்து வெள்ளை மாளிகை பூட்டப்பட்டது

இவ்வாறு நிகழ்ந்ததற்குக் காரணம் மாளிகைக்கு வெளியே கூடியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் வீசிய புகைக் குண்டுதான் என்று அதிகாரிகள் நேற்று அறிவித்தனர்.

அமெரிக்காவில் முதலாளித்துவப் பெருநிறுவனங்களுக்கு எதிராக வெள்ளை மாளிகைக்கு வெளியே ஆயிரக்கணக்கானோர் போராட்டம் நடத்தினர். இவர்களே புகைக் குண்டுகளை வீசினர். (ங)

# அதிவேகப் பிரசவம்



அமெரிக்காவில் வசித்துவரும் இந்தியப் பெண்ணொருவர் அதிவேக ரயிலில் குழந்தை ஒன்றை பிரசவித்துள்ளார். ரபீதா சர்கர் என்பவருக்கே இந்தப் பிரசவம் நிகழ்ந்துள்ளது. இவரும் இவரது கணவர் ஆதித்யா சௌரப்பும் நியூஜெர்சி என்ற இடத்திலிருந்து நியூயோர்க்குக்கு அதிவேக ரயிலில் சென்றுகொண்டிருந்தபோது, ரபிதாவுக்குப் பிரசவ வலி ஏற்பட்டுள்ளது. ரயிலில் பயணித்த பெண் ஊழியர்கள் மற்றும் பெண் பயணிகளின் உதவியோடு அவர் ரயிலில் ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்துள்ளார். (ங-ந)

## பிரச்சினையை தீர்க்க சீனா விருப்பம்

இந்தியாவுடனான எல்லைப் பிரச்சினை குறித்து அமைதியான முறையில் தீர்வு காண விரும்புவதாக சீன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் சீனாவின் பிரதிநிதிகள் இடையில் எல்லைப் பிரச்சினை குறித்து 15ஆவது கட்டப் பேச்சு தற்போது நடந்து வருகிறது. இரண்டாம் நாளான நேற்று முன் தினம் இடம்பெற்ற பேச்சின் போதே சீன அதிகாரி ஒருவரால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. (ங-ந)

# நகரங்கள் நோக்கி நகரும் சீன மக்கள்


சீனாவில் மொத்த மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் நகரங்களுக்கு வந்து விட்டதாக அந்நாட்டு அரசு நேற்று அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

சீனாவில் வேலைவாய்ப்பு, வசதியான வாழ்க்கை உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக கிராமங்கள், சிறு நகரங்களில் இருந்து பெரு நகரங்களுக்கு மக்கள் குடிபெயர்தல் பெருமளவில் நடக்கிறது. 2010 கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 134 கோடிப் பேர். இவர்களில் 66 கோடியே 67 லட்சம் பேர் நகரங்களில் வாழ்ந்தனர். ஆனால், கடந்த வருடத்தின் இறுதியில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி இத் தொகையில் மேலும் இரண்டு கோடி அதிகரித்து 69 கோடியே ஏழு லட்சம் பேர் தற்போது நகரங்களில் வசிக்கின்றனர். இது மொத்த மக்கள் தொகையில், 51.27 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. அதேநேரம், 2010இல் கிராமங்களில் வசித்து வந்த 67 கோடியே 11 லட்சம் பேரில் தற்போது ஒன்றரைக் கோடி பேர் நகரங்களுக்கு இடம் பெயர்ந்து விட்டனர். இதனால், கடந்த வருடக் கணக்கெடுப்பின் படி, கிராமங்களில் தற்போது 65 கோடியே 65 லட்சம் பேர் வசிக்கின்றனர்.

கடந்த முப்பது ஆண்டுகளில், சீனாவில் விவசாய நிலங்கள், தொழிற்சாலைகளாகவும், குடியிருப்புகளாகவும் [illegible] அதிகரித்துள்ளது. (ங-ந)

# மகா ராணிக்கு கப்பல்

**கப்பல் பற்றிய வரை படங்களையும் பிரிட்டன் அரசு வெளியிட்டுள்ளது.**



பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத், ஆட்சிக்கு வந்து அறுபது வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. இந்த வைர விழா நினைவாக அவரது பெயரில் புதிய, பெரிய கப்பலைத் தயாரித்து வழங்க பிரிட்டன் அரசு முடிவு செய்துள்ளது.

இந்தக் கப்பல் தயாரிப்புக்கான செலவுகளுக்காக 'டெய்லி மெயில்' பத்திரிகை மூலமாக ப் பரப்புரையும் தொடங்கியுள்ளது. இளவரசர் சாள்ஸ் மற்றும் இளவரசி ஆனியின் ஆதரவும் இந்தத் திட்டத்துக்குக் கிடைத்துள்ளது. உலகின் மிகப் பெரிய கப்பலாக 600 அடி நீளத்தில் உருவாக உள்ள இந்தக் கப்பலின் கட்டுமா[illegible] சுமார் 80 [illegible] பவுண்ஸ்கள் தேவைப்படுகின்றன எனத் தெரியவருகிறது. ராணி எலிசபெத்துக்கு குடிமக்கள் தங்கள் அன்பையும், மரியாதையையும் காட்டும் வகையில் பணத்தைக் கொட்டுவர் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அதன் மூலம் கப்பலைத் தயாரித்து அரசிக்கு அன்புப் பரிசாக வழங்கவுள்ளனர்.


இந்தக் கப்பலில் அரச குடும்பத்தாரின் பயன்பாட்டுக்காகத் தனி அறைகளும், பெரிய கண்காட்சி அரங்கும் அமைக்கப்பட உள்ளன. மேலும் 220 நபர்கள் தங்கும் வகையில் அறைகளும் கட்டப்பட உள்ளன. வர்த்தகம் மற்றும் தொழில் நிகழ்ச்சிகள் நடைபெறத் தேவையான வசதிகளைக் கொண்டிருப்பதோடு இளைஞர்கள் அறிவியல் கல்வியும், பயிற்சியும் பெற உதவியாகவும் இந்தக் கப்பல் விளங்கவுள்ளது. (ங-ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசலை வீழ்த்தி விட்டு நகலை அனுப்பும் ஈரான்

தெஹ்ரான்,ஜன.19

ஈரான் வான் எல்லைப் பகுதியில், அத்துமீறி நுழைந்த அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானம் ஈரான் ராணுவத்தினரால் சுட்டுவீழ்த்தப் பட்டது. தற்போது அந்த விமானத்தைப் போன்று மாதிரி விமானத்தை அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்க ஈரான் முடிவு செய்துள்ளது.



ஈரான் இஸ்லாமிய குடியரசு தோன்றியதன் 34 ஆவது ஆண்டு விழாவின் போது மாதிரி விமானம் அமெரிக்காவிடம் வழங்கப்படவுள்ளது.

கடந்த டிசெம்பர் 5ஆம் திகதி ஆப்கானிஸ்தான் எல்லையையொட்டி உள்ள ஈரான் ராணுவ முகாம்களை வேவு பார்க்க அமெரிக்கா அனுப்பிய ஆர்-க்யூ-170 என்ற ஆளில்லா உளவு விமானம் ஈரான் ராணுவத்தினரால் சுட்டுவீழ்த்தப்பட்டது. அந்த விமானம் தற்போது ஈரான் வசம் உள்ளது. இதையறிந்த அமெரிக்கா, அந்த உளவு விமானத்தை திருப்பி வழங்குமாறு ஈரானுக்கு கோரிக்கை விடுத்திருந்தது.

இது குறித்து ஈரான் வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:

அமெரிக்கா திருப்பிக் கேட்ட உளவு விமானத்துக்குப் பதிலாக மாதிரி விமானம் ஒன்றை அதேபோன்று தயாரித்துள்ளோம், 30 சென்ரி மீற்றர் நீளமும், 14 சென்ரி மீற்றர் அகலமும் கொண்டதாக அது உருவாக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 5ஆம் திகதி ஈரான் நாட்டின் இஸ்லாமிய குடியரசு தோன்றியதன் 34ஆம் ஆண்டு விழா கொண்டாடப்படவுள்ளது. அப்போது இந்த மாதிரி விமானத்தை, அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கவுள்ளோம். இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## கப்டனுக்கு வீட்டுக்காவல்

ரோம், ஜன.19



ஜிக்லியே தீவுக்கு அருகே பாறையில் மோதிக் கடலில் மூழ்கிய இத்தாலியின் ஆடம்பரக் கப்பலில் பயணித்த 29 பயணிகள் காணாமல் போயுள்ளனர். இவர்களைத் தேடும்பணியில் மீட்பாளர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இதனையடுத்து இந்தச் சம்பவம் குறித்து தீவிர விசாரணை நடத்த வேண்டும் என, ஐ.நா. கூறியுள்ளது.

இந்த நிலையில் விபத்துக்கு காரணமான கப்பல் கப்டனை வீட்டுக்காவலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த விபத்தில் 16 பேர் காணாமல் போனதாக இத்தாலி நிர்வாகம் முன்னர் குறிப்பிட்டிருந்தது. ஆனால் தற்போது 29 பேர் காணாமல் போயுள்ளதாகக் கூறியுள்ளது.

இவர்களில் கப்பல் ஊழியர்கள் 4 பேரும் அமெரிக்கா, ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலிப் பயணிகளும் அடங்குகின்றனர். இதனிடையே விபத்து தொடர்பில் அவசர நிலையை இத்தாலி அரசு பிர கடனம் செய்துள்ளது. இதில் கப்பலில் இருக் கும் எண்ணெய் கசிவதைத் தடுக்க இத்தாலி அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (ந)

## சீனப் பெண்களின் புதிய நிபந்தனை

திருமணம் செய்து கொள்ள சொந்த வீடு இருக்க வேண்டும் என்று பெண்கள் நிபந்தனை விதித்துள்ளதால், சீனாவில் இளைஞர்கள் பலர் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

உலகில் மக்கள் தொகை அதிகம் உள்ள சீனாவில், ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தை என்ற சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்நிலையில் திருமணம் குறித்து பெண்கள் இப்போது பல நிபந்தனைகளை விதிப்பதாக சமீபத்திய புள்ளிவிவரத்தில் தெரிய வந்துள்ளது.

சீனாவில் சமூக சேவகர்கள் சங்கத்தின், மேட்ச் மேக்கிங் சர்வீஸ் குழுவும் பைஹே டொட் கொம் என்ற இணையத்தளமும் இணைந்து 50 ஆயிரத்து 383 பெண்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தி உள்ளன. இதன் விவரங்கள் பத்திரிகைகளில் வெளியாகி உள்ளன.

கருத்துக் கணிப்பின்போது திருமணம், உறவுமுறை தொடர்பான பல கேள்விகள் பெண்களிடம் கேட்கப்பட்டன. அதற்கு, சொந்தமாக ஒரு வீடு வைத்திருந்தால் திருமணம் செய்து கொள்வோம் என்று 70 சதவீதப் பெண்கள் தெரிவித்துள்ளனர்.

இதுபோன்ற நிபந்தனைகளால் திருமணத்துக்குப் பெண் கிடைக்காமல் இளைஞர்கள் பலர் திண்டாடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. (ந)

## அமைச்சர் கைது

இந்தியாவைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவரைக் கடத்திய வழக்கில் நேபாளத்தில், முன்னாள் அமைச்சர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேபாளத்தில், ஆர்யா மருந்து தயாரிப்பகத்தை நடத்தி வந்த ஷங்காய் என்பவர் மர்ம நபர்களால் கடத்தப்பட்டார். இதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பெயரில் நேபாளத்தின் வர்த்தகத் துறை முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஷ்யாம் சுந்தர் குப்தாவை, பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## ஆப்கனில் பனிப் பொழிவு

ஆப்கானிஸ்தானில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. அங்குள்ள படாக்சன் பகுதியில் பனிச்சரிவு ஏற்பட்டு வீடுகளின் மீது வீழ்ந்தது. இதனால் 500 க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து வீழ்ந்தன. இதன் இடிபாடுக்குள் உயிரோடு புதைந்து 24 பேர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டோரைக் காணவில்லை.

படாக்சன் பகுதி மலைப் பிரதேசமாகும். இங்கும் பனிப்பொழிவு அதிகமாக இருப்பதால் பல இடங்கள் பனிக்கட்டியால் மூழ்கிக் கிடக்கின்றன.

அந்தப் பகுதியில் ஏற்பட்ட பனிச்சரிவு காரணமாக 500 க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து வீழ்ந்தன. இதன் இடிபாடுக்குள் உயிரோடு புதைந்து 24 பேர் பலியானார்கள். நூற்றுக்கும் மேற்பட்டோரைக் காணவில்லை. அவர்களில் பலர் உயிரிழந்திருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

பனிப்பொழிவினால் இந்தப் பகுதியில் வீதிகள் துண்டிக்கப்பட்டு விட்டன. எனவே மீட்புக் குழுக்கள் அங்கு செல்ல முடியவில்லை. (ந)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதுப் பிரச்சினையால் இந்தியத் தளபதி வீட்டுக்கு

### மத்திய அரசு அதிரடி முடிவு





டில்லி, ஜன.19
வயதுப் பிரச்சினையில் ராணுவ தளபதிக்கு கட்டாய விடுமுறை அளிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்திய ராணுவ தலைமைத் தளபதியாக ஜெனரல் வி.கே. சிங் பதவியில் உள்ளார். தற்போது அவர் வயதுப் பிரச்சினையில் சிக்கிக் கொண்டுள்ளார்.

ராணுவ ஜெனரல் அலுவலகம் பராமரிக்கும் ஆவணத்தில் வி.கே.சிங் பிறந்த திகதி 1951.05.10 என்றும், ராணுவ செயலக ஆவணத்தில் 1950.05.10 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. அவரது உண்மையான வயது தெரியாத நிலையில் பதவியில் நீடிப்பதால் அவர் பிறப்பிக்கும் உத்தரவுகள் செல்லுமா? என்ற கேள்வி எழுந்தது.

அவருக்கும் ராணுவ அமைச்சகத்துக்கும் இடையே பனிப்போர் நடந்து வருகிறது. இந்த விவகாரம் தொடர்பாக மத்திய அரசை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வி.கே.சிங் மனு தாக்கல் செய்துள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை இந்த மனு விசாரணைக்கு வருகிறது. இந்தப் பிரச்சினை குறித்து நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியுடன் ஆலோசனை நடத்த உள்ளார். ராணுவத் தளபதி வி.கே.சிங் தனது பிறந்த வருடம் 1950 என்பதில் உறுதியாக இருக்கிறார்.

ஆனால் ராணுவ செயலகம் இதை ஏற்க மறுத்து விட்டது. ராணுவ அமைச்சர் ஏ.கே.அந்தோணியும் இதை நிராகரித்து வி.கே.சிங்குக்கு கடிதம் எழுதினார். இந்த விவகாரத்தில் மேலும் சிக்கல் எழாமல் இருக்க வி.கே. சிங்கை கட்டாய விடுமுறையில் செல்லுமாறு உத்தரவிட மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

வயது விவகாரத்தால் அவர் ஓய்வு பெறும் கால எல்லை கடந்த பின்னரும் பதவியில் நீடிக்கிறார். நாடு சுதந்திரம் அடைந்த பின் வயது பிரச்சினையில் ராணுவத் தளபதி சிக்கி இருப்பது இதுவே முதல் முறையாகும். (வ)

# நிவாரணம் கிடைக்கும்வரை கடலுக்குச் செல்லமாட்டோம்

### கடலூர் மீனவர்கள் அறிவிப்பு

கடலூர், ஜன.19
புயலில் சேதம் அடைந்த படகுகளுக்கு முழுமையான நிவாரணம் கிடைக்கும் வரை, மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்லமாட்டோம் என்று, கடலூர் மாவட்ட மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

கடலூர் மாவட்டம் தாண்ட வராயன் சோழகன் பேட்டை - நல்லவாடு வரை 48 கிராமங்களைச் சேர்ந்த, சுமார் ஒரு லட்சம் மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் உள்ளனர்.

கடந்த மாதம் வீசிய புயலில் இவர்களுக்குச் சொந்தமான அதிகமான படகுகள் சேதம் அடைந்தன. புயலால் 82 விசைப் படகுகள், 270 கண்ணாடி இழைப் படகுகள், 729 கட்டு மரங்கள் சேதம் அடைந்ததாக அரசு அறிவித்து உள்ளது. ஆனால் மேலும் பல படகுகள் சேதம் அடைந்து விட்டதாகவும், சேதத்துக்கு அரசு அறிவித்து இருக்கும் நிவாரணத் தொகை போதாது என்றும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

சேதம் அடைந்த அனைத்து படகுகளுக்கும், புதுச்சேரி மாநிலத்தில் நிவாரணம் வழங்கப்பட்டது போல், கடலூரிலும் நிவாரணம் வழங்கப்படும் வரை மீன்பிடித் தொழிலுக்குச் செல்ல மாட்டோம் என்று கடலூர் மாவட்ட மீனவர்கள் அறிவித் துள்ளனர்.

மீனவர்கள் போராட்டம் தொடர்பாக, கடலூர் சார் ஆட்சியாளர் கிரண் குராலா முன்னிலையில், கடந்த திங்கள்கிழமை பேச்சு நடந்தது. மீன்பிடிப் படகு உரிமையாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். இதில் உடன்பாடு எட்டப்படவில்லை. மீனவர்கள் கூறுவது போல் நிவாரணம் வழங்க அரசாணையில் இடமில்லை என்று சார் ஆட்சியாளர் தெரிவித்ததுடன், மீனவர்கள் கோரிக்கைகளை எழுத்து மூலம் அளித்தால், அரசுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறினார். மீனவர்கள் தமது கோரிக்கைகளை எழுதிக் கொடுத்தனர். (வ)

# இந்தியாவின் ரகசியங்களை சொல்லவில்லை

### மறுக்கிறார் மாதுரி குப்தா



திகார் சிறையில் அடைக்கப்பட்ட இவர் மீதான வழக்கு மத்திய புலனாய்வுத் துறை சிறப்பு நீதிமன்றில் நடைபெறுகிறது.

பாகிஸ்தான் உளவு அமைப்புக்கு இந்தியாவின் ரகசியங்கள் எதையும் சொல்லவில்லை என்று மாதுரி குப்தா தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் அமைந்துள்ள இந்திய தூதரகத்தில் தகவல் தொடர்புத் துறையில் செயலராகப் பணியாற்றிய போது அந்த நாட்டு உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.க்கு இந்திய ரகசியங்களைத் தந்தார் என்ற முறைப்பாடு எழுந்ததன் பேரில் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மாதுரி குப்தா கைது செய்யப்பட்டார்.

பின்னர் திகார் சிறையில் அடைக்கப்பட்ட இவர் மீதான வழக்கு மத்திய புலனாய்வுத் துறை சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றது. 21 மாத சிறைவாசத்துக்குப் பின்பு கடந்த 10 ஆம் திகதி டில்லி உயர் நீதிமன்றம் அவருக்கு பிணை வழங்கியது.

இந்த நிலையில் தனியார் தொலைக் காட்சி ஒன்றுக்கு மாதுரி குப்தா அளித்த பேட்டியில், இந்திய ரகசியங்கள் எதையும் வெளியிடவில்லை என்றும் தன் மீது தவறான முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார். (வ)

# தேர்தல் பிரசாரத்தில் 'கொலைவெறி' பாடல்

### உ. பி. தேர்தல் பிரசாரத்தில் கொலைவெறி பாடலை பயன் படுத்த காங். முடிவு

சினிமாவில் நடிகர் தனுஷ் பாடியுள்ள 'கொலைவெறி' பாட்டை உத்தரப் பிரதேச சட்டமன்றத் தேர்தலில் பயன்படுத்த காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது.

உத்தரப் பிரதேச தேர்தலில் கொலைவெறி பாடலை பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளதால் காங்கிரஸ் கட்சி பாடலின் உரிமையை வாங்க நடிகர் தனுஸுடன் காங்கிரஸ் தலைவர்கள் பேச்சு நடத்தி வருகின்றனர் என்று 'ஹிந்தி' பத்திரிகை ஒன்றில் தகவல் வெளியாகி உள்ளது.

முதலில் 'கொலைவெறி' பாடலுக்கான உரிமையை வழங்க தனுஷ் மறுத்ததாகவும் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜ்பப்பர் தனுஸுடன் பேச்சு நடத்தி சம்மதிக்க வைத்தார் எனவும் அந்தத் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து நடிகர் தனுஷ், "கொலைவெறி பாடலின் உரிமையை காங்கிரஸ் வாங்கும் முயற்சி எனக்குத் தெரியாது. சொனி நிறுவனத்திடம் தான் கொலை வெறி பாடல் உரிமை உள்ளது. அவர்களுடன் பேசினார்களா? என்பது தெரியாது" என்று கூறியுள்ளார். (வ)



டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை, சீன மாககண கவுன்சிலர் டாய் பிங்குவோ சந்தித்து பேசினார்.

# 5 வயது நாகபாம்புக்கு புற்றுநோய் அறுவை





கோவை உயிரியல் பூங்காவில் புற்று நோயால் அவதிப்பட்ட நாகப்பாம்பு உடலில் இருந்து அறுவைச்சிகிச்சை மூலம் கட்டி அகற்றப்பட்டது. கோவை மாநகராட்சி உயிரியல் பூங்காவில் நாகப்பாம்பு, கட்டுவிரியன், சாரை, கண்ணாடி விரியன், பச்சைப் பாம்பு, மலைப்பாம்பு, கொம்பேரி மூக்கன் உள்ளிட்ட 10 இற்கும் மேற்பட்ட வகை பாம்புகள் உள்ளன. இதில் 5 வயதான ஒரு நாகப்பாம்புக்கு கடந்த ஓர் ஆண்டாக உடலில் ஒரு கட்டி இருந்தது. நாளுக்கு நாள் கட்டி வளர்ந்து கொண்டே வந்த தால் சாப்பிடுவதிலும், சுவாசிப்பதிலும் பிரச்சினை ஏற்பட்டது. இதனால் அவதிப்பட்டு வந்த பாம்பின் உடலில் இருந்த கட்டியை அகற்ற முடிவு செய்யப்பட்டது. வன உயிரியல் பூங்கா இயக்குநர் டாக்டர் அசோகன் தலைமையில் கடந்த 14 ஆம் திகதி அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. மயக்க ஊசி செலுத்தி ஒரு மணி நேர அறுவைச் சிகிச்சைக்கு பின்னர் 100 கிராம் எடையுள்ள புற்று நோய் கட்டி அகற்றப்பட்டது.

இதுகுறித்து டொக்டர் அசோகன் கூறியதாவது:

பாம்புக்கு புற்றுநோய் தாக்குவது அரிதான ஒன்று. 5 வயதான நாகபாம்புக்கு புற்றுநோய் தாக்கி இருந்தது. மருத்துவ ஆய்வில் தெரியவந்தது. வெளிநாடுகளில்தான் தற்பொழுது இத்தகைய புற்றுநோய் கட்டியை அகற்ற சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. தமிழகத்தில் கோவையில் புற்றுநோய் பாதித்த பாம்புக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது- என்றார். (வ)

# காங்.அமைச்சரின் அமைச்சு பதவிகளை பறித்தார் மம்தா!

### 'கூட்டணி தர்மத்தை திரிணாமுல் காங்கிரஸும் பின்பற்றுமாறு காங்.எச்சரிக்கை'

மேற்கு வங்க கூட்டணி அரசில் காங்கிரஸ் அமைச்சர் வசம் இருந்த இரண்டு அமைச்சுப் பதவி களைப் பிரித்து வேறு ஒரு அமைச்சருக்குக் கொடுத்துள்ளார் முதல்வர் மம்தா. இதனால் காங்கிரஸ் கட்சியினர் அதிருப்தி அடைந்துள்ளனர். இதையடுத்து, "கூட்டணி தர்மத்தை திரிணாமுல் காங்கிரஸும் பின்பற்ற வேண்டும்" என்று காங்கிரஸ் எச்சரித்துள்ளது.

மேற்கு வங்கத்தில் மம்தா பனர்ஜி தலைமையிலான அமைச்சரவையில், திரிணாமுல் கட்சியின் கூட்டணிக் கட்சியான காங்கிரஸும் இடம்பெற்றுள்ளது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஏழு பேர் அமைச்சர்களாக உள்ளனர்.

அண்மைக் காலமாக, காங்கிரஸுக்கும், திரிணாமுல் காங்கிரஸுக்கும் இடையே கருத்து வேறுபாடு அதிகரித்துள்ளது. இந்த நிலையில், காங்கிரஸைச் சேர்ந்த மனோஜ் சக்கரவர்த்தி என்ற அமைச்சரிடம் இருந்த இரண்டு அமைச்சுப் பதவிகளைப் பிரித்து மற்றொரு அமைச்சருக்கு முதல்வர் மம்தா கொடுத்து விட்டார். இதனால், காங்கிரஸ் தரப்பு அதிருப்தி அடைந்துள்ளது.

இதுகுறித்து, காங்கிரஸ் செய்தித்தொடர்பாளர் அபிஷேக் சிங்வி தெரிவித்ததாவது:-

"கூட்டணித் தர்மம் என்பதை காங்கிரஸ் மட்டுமல்லாமல், திரிணாமுல் காங்கிரஸும் பின்பற்ற வேண்டும். வார்த்தைகளால் விமர்சிப்பதன் மூலமும், கடுமையான நடவடிக்கைகளாலும், பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. பேச்சு மூலம், இந்த பிரச்சினைக்கு சுமுக தீர்வு காண முடியும் என நம்புகிறேன்" - என்றார்.(வ)

# ஆந்திராவில் கடும் குளிர் 15 பேர் சாவு

ஆந்திராவில் கடும் குளிர் நிலவி வருகிறது. இதனால் கடந்த 2 நாள்களில் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

கரீம்நகர் மாவட்டத்தில் 5 பேரும், விசாகப்பட்டினம் மற்றும் குண்டூர் மாவட்டங்களில் தலா 4 பேரும் உயிரிழந்துள்ளனர். நல்கொண்டா மற்றும் வாரங்கலில் தலா ஒருவர் உயிரிழந்துள்ளனர்.

கடும் குளிருக்கு முதியவர்களும், பிச்சை எடுப்பவர்களுமே அதிகம் உயிரிழந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# கேரளாவில் வெந்நீர் வீச்சு; தமிழக ஐயப்ப பக்தர் சாவு

தமிழகத்திலிருந்து சபரிமலைக்குச் சென்ற ஐயப்பப் பக்தர் மீது கேரளாவில் தேநீர்க்கடைக்காரர் வெந்நீர் ஊற்றியதில் அவர் பரிதாபமாக உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தமிழகத்தில் கேரளாவுக்கு எதிரான உணர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை- திருவொற்றியூரைச் சேர்ந்தவர் சாந்தவேல். இவர் சபரிமலைக்கு மாலையிட்டுச் சென்றார். கடந்த 8 ஆம் தேதி பம்பை நதி அருகே தேநீர் அருந்தச் சென்றபோது கடைக் காரருக்கும் அவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதில் அந்தக்கடைக்காரர் கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்த வெந்நீரை எடுத்து சாந்தவேல் மீது வீசியுள்ளார்.

இதில் உடல் முழுவதும் வெந்த நிலையில், சாந்தவேல் சிகிச்சைக்காக கோட்டயம் மருத்துவக் கல்லூரியில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சையில் போதிய முன்னேற்றம் ஏதும் இல்லாத நிலையில், சாந்தவேலுவின் மனைவியும் உறவினர்களும் அவரைச் சென்னை கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பயனின்றி கடந்த திங்கட்கிழமை பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து தமிழகத்தில் கேரள அரசு மீது பலத்த விமர்சனம் எழுந்துள்ளது.

இந்த நிலையில், சபரிமலைக்குச் செல்லும் தமிழக ஐயப்பப் பக்தர்களுக்கு முழுப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று கேரள அரசு அறிவித்திருந்தது. எனினும் இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை கேரள அரசு எந்த ஒரு வழக்கும் பதிவு செய்யவில்லை. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஏழையின் செல்வந்தரின் இதயமும்

கந்தல் துணியும் கலங்கிய கண்ணும் - கையில்
வெண் கிண்ணமும் ஏந்திய ஏழை வீதி சுற்றி வருகிறார்.
கலர் காரும் பளிச்சிடும் பங்களாவும் - கையில்
மதுபானக் கிண்ணமும் ஏந்திய வண்ணம் - செல்வந்தர்
உலாவருகின்றார். நட்சத்திரக் ஹோட்டல்களில்
எதற்காக இந்தக் கொண்டாட்டம் ? செல்வந்தர்களே - உம்
செல்வத்தின் அரைவாசியை செறிவாய் வாழும் - உன்
ஏழைகளுக்கு கொடுத்துவிடு! ஏழைகளுக்காக வாழ்ந்தோர்
எத்தனை பேர் இப் பூமியிலே. ஏழைகளின் சிரிப்பில் - புது
இறைவனைக்காணு என்றார் பேரறிஞர் அண்ணா - நீ அவர்
கூறியவற்றை ஏழைக்கே செய்துவிடு - இதனால் உன்
ஊரில் அதிக மழை பெய்து விடும். இதனால் வாடிய பயிர்கள்
எல்லாம் ஒரு நொடியில் செழித்து விடும். அண்ணா
மட்டுமா கூறினார். எம் தலைவர் எம்.ஜி.ஆர். கூடக் கூறினார்.
ஏழைகள் தினம் சிந்தும் வியர்வைகள் தான் முகிலாகிப் பின்பு
வரண்ட பூமியில் திரண்டு வந்து மழையாகப் பெய்து விடும்.
அவர் கூறியது முற்றிலும் உண்மை. இதன் மூலம் ஏழைகளின்
பெருமையை நீ அறிவாய்
கஷ்டப்பட்டுத் தினம் நஷ்டம் அடையும் ஏழைகளை எதிரிகளாக - நீ
நினைக்காமல் அவர்களைத் தெய்வங்களாக நினைத்தால்
பெரும் சூறாவளிக் காற்றுக்கூட உன் காலடியில் அடி பணிந்து
பின்பு தென்றலாகத் தெம்மாங்கு பாடும் இப்பாரினிலே.

**இ.இசைப்பிரியன் (றாம்ஜி),**
**உடுத்துறை.**



# தமிழர் திருநாளான தைப்பொங்கல் இன்று





## பாரம்பரியங்களின்படி கொண்டாடப்படுகின்றது

தமிழர்களின் திருநாளான தைப்பொங்கல் இன்றைய காலத்தில் பாரம்பரியங்களின்படியே கொண்டாடப்படுகின்றது.

பலர், இன்று கொண்டாடப்படும் தைப்பொங்கலில் அந்தப் பழைய பாரம்பரியங்களை - மாற்றிவிட்டார்கள் என்று புலம்புகின்றனர். 'மாற்றம் ஒன்றுதான் உலகில் மாற்றமில்லாதது' என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

உலகத்தின் மாறுதலுக்கேற்ப உலகமயமாக்கலின் விளைவுகளுக்கேற்ப எமது தைப்பொங்கல் மாற்றப்பட்டுவிட்டதே ஒழிய அது அடி நாதத்திலிருந்து மாற்றமடையவில்லை.

புதிய உலகத்துக்கு இசைவாக்கப்பட்டு இன்று புதிய பொங்கலாக இன்றைய தைத்திருநாள் இன்றும் கொண்டாடப்படுகின்றது என்பதே எனது வாதம்.

**பா.நிசாந்தன், யாழ்ப்பாணம்.**

## பாரம்பரியங்களை மீறி கொண்டாடப்படுகின்றது

தமிழர் திருநாளான தைப்பொங்கல் இன்று பாரம்பரியங்களை மீறிக் கொண்டாடப்படுகிறது. தமிழர்களின் பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்டுதான் பண்டிகைகளும், விழாக்களும் கொண்டாடப்படுகின்றன. குறிப்பிடத் தக்கவர்களால் நேர்த்தியாகக் கொண்டாடப்பட்ட போதிலும், பொதுவாகப் பாரம்பரியங்களை மீறியே கொண்டாடப்படுகிறது.

வெடி கொளுத்துவதுதான் தைப்பொங்கல் என்பதாக -அமர்க்களமாக- மாறிவிட்டது. எல்லோரும் சேர்ந்து குடும்பமாக சூரியனையும், விளையும் பூமியையும் பயபக்தியோடு வணங்க வேண்டியதை விடுத்து, உடை- நடை- பாவனை, கைபேசிப் பாவனை சினிமாப் பாடல்களின் கலாட்டாக்கள் என்றாகிவிட்டது. அம்மா மட்டும் பொங்க லோடு, அல்லது அப்பா மட்டும் பொங்கலோடு, அல்லது பிள்ளை மட்டும் பொங்கலோடு, ஒரு சிலர் நித்திரை கணகணப்போடு, ஒரு சிலர் தொலைக்காட்சி களோடு, பாவம் அம்மா, சாணி எடுத்து, மெழுகி, குளிரில் தோய்ந்து பொங்கிவிட்டு, கும்பத்துக்கு முன் படைத்து சூரியனுக்கு பூ இட்டு வணங்கி ஆற்றுகின்ற கரும கைங்கரியத்தை முன்னர் குடும்பத்தினர் பங்கிட்டுப் பகிர்ந்து செய்தனர். இப்போது அந்தப் பாரம்பரியங்கள் வற்றிப்போய், தாம் தாம் எண்ணியவாறு பொங்கலை ஒரு களியாட்டமாக, பக்திமயமின்றி ஏதோ கடமைக்குச் செய்வது போல செய்து முடித்து விடுகிறார்கள்.

தேவார பாராயணமோ, சூரிய வணக்கமோடு கூடிய பாராயணமோ, வேட்டி சால்வை, பாவாடை, சேலை சம்பிரதாயங்கள், பாரம்பரியங்களை மீறியே பெரும்பாலும் கொண்டாடப்படுகிறது.

**கே.எஸ்.சிவஞானராஜா,**
**கொக்குவில்.**

# இளவல் வட்டத்தின் 'கேள்விக்கு என்ன பதில்' பகுதியில் பரிசில் பெற்றோர் விவரம்

IX. 'எமது சமுதாயத்தில் இளம் பெண்களின் உரிமைகள் மதிக்கப்படுகின்றன' என்னும் அணி வெற்றி பெற்றுள்ளது.

**அந்த அணிக்காக வாக்களித்தவர்களில்**
ஜெ.அ.யூட்பிரதாபன்
க.ஜீவன்
செல்வரத்தினம் ஜெயாத்
**சிறந்த ஆக்கம் அனுப்பியவர் -** சி.ஜிக்கா
**சிறந்த கவிதைகளை அனுப்பியவர்-** தியா.

X. 'இளையோரின் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிப்பது குணமே' என்ற அணி வெற்றி பெற்றுள்ளது.

**அந்த அணிக்காக வாக்களித்தவர்களில்**
கந்தஞானமுத்து
தி.துஷானி
ஏ.இந்திரா
**சிறந்த ஆக்கத்தை அனுப்பியவர்** -சா.சிந்துஜா

XI. 'இளம் சமுதாயத்தின் தற்கொலை அதிகரிப்புக்குக் காரணம் தன்னிச்சையான 'தீர்மானங்களே' என்ற அணி வெற்றிபெற்றுள்ளது.

**அந்த அணிக்காக வாக்களித்தவர்களில்**
ஆ.வதனா
சுகிர்தா
எம்.பி.கலா
**சிறந்த ஆக்கத்தை அனுப்பியவர்-** சா.சிந்துஜா
**சிறந்த கவிதை அனுப்பியவர்-** கிருஸ்ணசாமி துர்க்காம்பிகை.

XII. 'பல்கலைக்கழக மாணவருக்கு வழங்கப்படும் தலைமைத்துவப் பயிற்சி தவறானது' என்ற அணி வெற்றிபெற்றுள்ளது.'

**அந்த அணிக்காக வாக்களித்தவர்களில்**
ந.துவாரகா
கரன்
க.கலையரசி
**சிறந்த ஆக்கத்தை அனுப்பியவர் -** சி.கஜிதா
**சிறந்த கவிதை அனுப்பியவர்-** பி. கலையரசி

XIII. 'இன்றைய ஆலயத் திருவிழாக்கள் களியாட்டத்துக்கு வித்திடுகின்றன' என்ற அணி வெற்றிபெற்றுள்ளது.

**அந்த அணிக்காக வாக்களித்தவர்களில்**
இரத்தினம் நர்மதன்- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
வி.கீர்தனா- பட்டினசபை வீதி
வி.விசாகன்- மீசாலை மேற்கு, மீசாலை.
**சிறந்த ஆக்கத்தை அனுப்பியவர்-** க.வதனா, கரவெட்டி.

மேற்குறிப்பிட்ட பெயர் விவரங்களில் மாற்றங்கள் இருப்பின்
**'இளவல்கள் வட்டம்',**
*'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்*
என்னும் முகவரிக்கு உடன் அனுப்பி வைக்கவும்.

**பரிசில் வழங்கல் விரைவில்**

# அமைதி

என்றொரு நாள் வருமென எண்ணியே நாமிருந்தோம்
என்றுமே உனக்கில்லையென எழுதிவிட்டான்
இறைவன் போலும்
பண்ணிய பாவங்களுக்கும் மன்னிப்பு ஏதுமின்றி
ஜென்மங்கள் கடந்து வந்து அனுபவிக்கும் வேளை
தானும்

அச்சங்கள் கொண்டு நாமும் அவஸ்தைகளுடனே
வாழும்
வேளை நீங்கி நாளை விடியலும் வந்திடும் எனவும்
காத்துக் கிடந்து காலங்கள் போய்
ஒருவரை ஒருவர் மாய்த்து அழிந்திடும் வேளை
தானும்

மேலிமையில் மேகங்கள் சூழவும் கீழிமையில் நீரும்
சொரியவும்
பாதைகள் கடந்து பல பாடங்கள் கற்று விட்டோம்
நியாயங்கள் பேசிப்பேசி நீங்கினர் பலர் உலகை
விட்டும்
சோகங்கள் சொல்லிச் சொல்லி சோர்ந்திடும் வேளை
தானும்.

மாயங்கள் செய்து கண்ணன் மாய்த்தான்
கர்ணனையும்
காயங்கள் போக்கி எம்மை காப்பான் நாளையும்
என எண்ணியே நாமும் வாழ எண்ணங்கள் யாவும்
பலிக்க
வேளையும் நெருங்க வேண்டும் என வேண்டிடும்
வேளை தானும்

**தி.வைதேகி,**
A/L 2011



## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**'வைதிஸ் கொலைவெறி' பாடலை தமிழர்கள் தமக்கானெதன சொந்தம்**

| கொண்டாடலாம் | கொண்டாடமுடியாது |
|---|---|
| ☐ | ☐ |

**பெயர்:** ..........................................
**முகவரி:** ..........................................
**அடையாள அட்டை இல..**
..........................................

உங்கள் தீர்ப்புக்களை 23.02.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
*'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

பெயர் :-..........................................
முகவரி :- ..........................................
..........................................
.................... ....................
திகதி கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ ஓர் அற்புதன் என்பது உனக்குத் தெரியுமா?

பூமிதான் நம் வாழ்வு என்பதால், மண்ணை நாம் உடுத்திக் கொள்வதில்லை, சேற்றை வாரிப் பூசிக்கொள்வதில்லை. பூமியில்தான் உணவுகள் விளைகின்றன. அதற்காக மண்ணை அள்ளி நாம் தின்பதில்லை. அது போல, உணர்ச்சிகளே எமது வாழ்வின் பாதைகள். அதற்காக உணர்ச்சி வரும்போதெல்லாம் நாம் வசப்பட வேண்டிய அவசியமில்லை. மனிதன் பொதுவாக ஓர் உணர்ச்சியிலிருந்து இன்னொரு உணர்ச்சிக்குத் தாவுகின்ற சக்தியைப் பெற்றிருக்கிறான். எமது வாழ்வில் எண்ணியது கிடைக்காதபோது, எதிர்பார்த்தது நடக்காதபோது, ஆசை நிறைவேறாதபோது உணர்ச்சிகளும் பிறழ்கின்றன.



ஒரு சிறு கிண்டல் பெரும் சர்ச்சையைக் கொண்டு வரும்; ஒரு மென்மையான உள்ளத்தைக் கூட உசுப்பேற்றி கொந்தளிப்பு வரச் செய்துவிட முடியும். பிறரை உசுப்பேற்றிப் பார்த்தால், பிறரைக் கேலிசெய்து வெறுப்பேற்றிப் பார்த்தால், அதனால் பிரச்சினைகள் வரும். பிறரின் உணர்ச்சியைக் கிளறுதல், தன்னையும், சமூகத்தையும் பாதிக்கும் என்பதை நாம் மறக்கக்கூடாது.

என்னால் முடியாதது பிறரால் முடியும்போது ஏற்படும் நல் உணர்வு ''பாராட்டு''. அதுவே தீய உணர்ச்சியானால் ''பொறாமை''. பொறாமை பகைமைக்கான ஆணிவேர். இது தீய உணர்ச்சி அல்ல நோய். இதனை அகற்ற முயற்சி செய்தல் மிக்க நல்லது. பொறாமை வளர நாம் இடம்கொடுக்கக்கூடாது.

பொறாமையை அழிக்க இரண்டு வழிகள் உண்டு.

1. பொறாமையைப் போட்டியாக மாற்றி வெற்றி பெறுவது அல்லது ஈடுசெய்வது.

2. பொறாமையைக் கண்ணியமாக வெளிப்படுத்துவது.

நிறுவன முதலாளியிடம், ''நான் சீனியர் எனக்கு ஏன் இந்த வாய்ப்பைக் கொடுக்கவில்லை. என்னிடம் என்ன குறை சொல்லுங்கள் நான் திருத்திக்கொள்கிறேன்'' என்பது கண்ணிய வழி. அல்லது யார் மீது பொறாமை வருகிறதோ அவர்களிடம் சென்று ''எனக்குக் கிடைக்க வேண்டியது உங்களுக்குக் கிடைத்திருக்கிறது பரவாயில்லை'' என்பது வேறு ஒரு வழி.

''என்னுடைய இயலாமை,'' அல்லது ''உன்னுடைய திறமை,'' அல்லது ''என் திறமையை மதிக்கவில்லை; பரவாயில்லை. உங்கள் திறமையை நன்றாக பயன்படுத்த வாழ்த்துகள்'' என்று முகத்தில் அடித்தாற்போல் கூறுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இப்படி நாம் அவரிடமோ அல்லது பிறரிடமோ பகிராவிட்டால் பொறாமை ஒரு பெரிய நோயையே கொண்டு வந்து விடும். இன்று நாடுகளுக்கு நாடு போரிடமுற்படுவது கூட இப்படிப்பட்ட செயல்களால்தான். உண்மையாகவே எம்மிடம் திறமை இருந்து, பிறர் வாய்ப்பு பெற்றால், அதை நாம் நல்லமுறையில் எடுத்துக் கொள்ள வேண்டும். திறமையே இல்லாமல், பொய்யாலும், மேலே வருபவனைப் பார்த்து பொறாமை வளர்வது எளிது. அதனை நீ பொறுமையாகத்தான் தீர்க்க வேண்டும். இல்லையெனில் அவன் நல்லவனாகி விடுவான். நீ கெட்டவன் என்ற பெயர் பெற்று விடுவாய் 'பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்' என்பதற்கிணங்க குறுக்கு வழியிலும் பொய்யிலும் மேலே வருபவன் வரலாற்றில் நிலைத்ததாகச் சரித்திரமே இல்லை.

பூமியின் மேற்பரப்பிலுள்ள முட்செடிகளை வெட்டிக் கொண்டிருக்காதே. மாறாக, பூமியின் அடியிலுள்ள தங்கத்தை வெட்டி எடு. நம்மைச் சுற்றி இருக்கிற கயவர்களைப் பெரிதுபடுத்தாதே... அவர்கள் புதரைப் போல காணாமல் போய்விடுவார்கள். நீ உன் உள்ளத்தில் இருக்கின்ற நல்ல சிந்தனையை, பக்குவப்பட்ட வாழ்வை உன் வாழ்வில் நடத்திக்காட்டு.

நீ ஓர் அற்புதன்! பொறாமையை முறியடி! உன் பகைவனையும் நேசி என்று இயேசு சொன்னாரே. இதில் உள்ள ஆழத்தை உண்மையான அன்பினால் மட்டுமே அடைந்து விட முடியும்.

பாலா

# சவால்களை எதிர்கொள்வதற்கு மாணவரை தயார்ப்படுத்துங்கள்

## ஆசிரிய ஆலோசகர் ஆறு. சுபாஸ்கரன்

வவுனியா, ஜன.19

எமது நாட்டின் தேசிய குறிக்கோள்களை அடையத்தக்க வகையில், பாடசாலை என்கின்ற புதிய சூழலுக்குள் இன்று காலடி எடுத்து வைத்துள்ள மாணவர்களுக்கு வழிகாட்டி, எந்தச் சவால்களுக்கும் முகம் கொடுக்கத்தக்க வகையில் நாட்டுக்கு பொருத்தமான நற்பிரஜைகளாக அவர்களை உருவாக்க வேண்டும் என வவுனியா தெற்கு கல்வி வலய வழிகாட்டல் ஆலோசனை ஆசிரிய ஆலோசகர் ஆறு. சுபாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தில் அதிபர் த.பூலோகசிங்கம் தலைமையில் நடைபெற்ற தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சுபாஸ்கரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

குழந்தை தாயின் கருவில் உருவானதில் இருந்து கற்க ஆரம்பிக்கின்றது. அதன் பின் பிறந்ததில் இருந்து குடும்பம், சூழல் ஆகியவற்றில் இருந்து ஐம்புலன்களூடாகவும் கல்வியை கற்றுக் கொள்கின்றது. பல்கலைக்கழகம் வரை முறைசார் கல்வியைப் பெறுகிறது. பிறப்பில் இருந்து இறப்பு வரை கற்றல் நிகழ்ந்து கொண்டே இருக்கும். இதனை வாழ்க்கையின் நீடித்த கல்வி என்பர்.

முறைசார் கல்வியைக் கற்க பெற்றோர்களும், ஆசிரியர்களும் இணைந்து வழிகாட்ட வேண்டும். குடும்பச் சூழல், சமூகச் சூழல் ஆகியவற்றில் கடந்த ஐந்து வருடங்களாக வாழ்ந்து, பல்வேறு அனுபவங்களையும், பழக்கவழக்கங்களையும் கற்றுக் கொண்ட பிள்ளைகள் இன்று பாடசாலைச் சூழல் என்கின்ற புதிய சூழலுக்குள் காலடி எடுத்து வைத்துள்ளனர். இவர்களைச் சமூகமயப்படுத்த வேண்டிய தேவையும், பொறுப்பும் பாடசாலையைச் சேரும்.

எங்களுடைய நாட்டின் தேசிய குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள கலைத்திட்டத்தின் ஊடாகவும், இணைக்கலைத் திட்டத்தின் ஊடாகவும் ஆற்றல் மிக்க, ஆளுமை மிக்க மாணவர் சமூகமாக இவர்களை வளர்க்க வேண்டும். அத்துடன் கலாசாரங்களைப் பேணுபவர்களாகவும், நாட்டுப்பற்று உள்ளவர்களாகவும், மொழிப்பற்று உள்ளவர்களாகவும், உணர்வு உள்ளவர்களாகவும், நல்ல ஒழுக்க விழுமியங்களைப் பேணுபவர்களாகவும் உருவாக்க வேண்டியது எம் அனைவரினதும் கடமை.

எங்களுடைய நாட்டைக் கட்டியெழுப்பப் போகும் எதிர்காலத் தலைவர்களாகிய இவர்களை எந்தச் சவால்களுக்கும் முகம் கொடுக்கக் கூடியவர்களாக வளர்க்க வேண்டும். அப்பொழுது தான் எங்களுடைய நாட்டின் தேசிய குறிக்கோள்களை அடையத் தக்க வகையில் நாட்டுக்கு பொருத்தமான நற்பிரஜைகளாக இவர்களை உருவாக்க முடியும் - என்றார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வவுனியா தெற்கு வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி மோ.தேவசேனா, பிரதி அதிபர் திருமதி லீ.வசந்தகுமார், ஆரம்பக் கல்விப் பகுதித் தலைவர் கிருபாகரன் ஆகியோர் மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து தரம் 2 மாணவர்கள் தரம் ஒன்று மாணவர்களை பூச்செண்டு கொடுத்து வரவேற்றனர். தொடர்ந்து மாணவர்களை வரவேற்று அதிபர் த.பூலோகசிங்கம், பிரதம விருந்தினர் ஆகியோர் உரையாற்றினர்.

(எ-421)



கைதடி பராசக்தி பாலர் பகல் இல்லத்தில் கல்வி பயின்று தரம் ஒன்றிற்குச் சென்ற மாணவர்களால் வெளியிடப்பட்ட மாணவர் ஆக்கச் சஞ்சிகையுடன் மாணவர்களும் ஆசிரியர்களும். (எ)

# நிரந்தர சமாதானத்தை உருவாக்க திட்டங்களை தயார்ப்படுத்துங்கள்

## கலாநிதி ஆறு. திருமுருகன்

யாழ்ப்பாணம், ஜன.19

நிரந்தரமான அமைதி சமாதானத்தை உருவாக்குவதற்கு நல்ல திட்டங்களை உருவாக்குங்கள் என தெல்லிப்பழை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 118 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு பம்பலப்பிட்டியில் கடந்த 8 ஆம் திகதி மாலை 5 மணிக்கு நடைபெற்ற முத்திரை வெளியீட்டு நிகழ்வின் போது மேற்கண்டவாறு ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்;

வடக்கு கிழக்குப் பகுதியில் காணாமற் போன தந்தை, சகோதரர்கள் பற்றிய மிகுந்த வேதனையோடு பல மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள். எனது தந்தை திரும்பி வருவாரா என்று பிள்ளைகள் ஏங்கும் பரிதாபம் நிலவுகிறது. இந்த நிலை தொடரக் கூடாது.

பல வருடங்களாக சிறையில் உள்ள கைதிகளை சமாதான சூழலை உருவாக்குவதற்கு அவர்களுக்கு மன்னிப்பு வழங்கி குடும்பத்துடன் வாழ வழி செய்யுங்கள். எமது சமூகம் விரக்தியுள்ள சமூகமாக தொடர்ந்து வாழ்வது வேதனைக்குரியது.

விரக்தியுள்ள சிறுவர்களை மாற்றி அமைப்பதற்கு முன் வாருங்கள். ஒரு நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதற்குத் தகுந்த சூழலை உருவாக்குவதற்கு சிரேஷ்ட அமைச்சர்களும் கல்விமான்களும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

எமது பாடசாலை இசுறு பாடசாலையாக பிரகடனம் செய்யப்பட்டு சுமார் 350 லட்சம் ரூபா செலவில் பெரிய வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கல்லூரியின் வரலாற்றில் இது ஒரு மறுமலர்ச்சிக் காலம் எனலாம்.

இதற்காக உழைத்தவர்கள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம் என்றார்.

(எ-36)

# புதிய நிர்வாகிகள் தெரிவு

தென்மராட்சி, ஜன.19

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலய இளைஞர் கழகம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் யே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக இளைஞர் நாடாளுமன்ற தென்மராட்சி உறுப்பினர் எஸ். ரி.விமல், மாவட்ட சம்மேளன அமைப்பாளர் ச.மதியழகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவர்- பி.பிந்துஷன், செயலாளர்-பா. செந்தமிழன், பொருளாளர் ர.லுவேக், அமைப்பாளர்- கு.கஜீபன், விளையாட்டு து.டிலக்ஸன், கலாசாரம் மு.கவித்திரன், தொழில் முயற்சி தா.சாந்தரூபி, ஊடகம் சி.ஷலக்ஸனா, தேசிய சேவை- த.வினுஜா, கல்வி- செ.மயூரிகா, பொறுப்பாசிரியர் வை.பிரேம்குமார்.

(எ-207)

# பொங்கல் பொதியும் ஊக்குவிப்புப் பணமும் வழங்கல்

தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், அதன் உறுப்பினர்கள், பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பொங்கல் பொதியை வழங்கிச் சிறப்பித்தது.

இந்த மாதம் 13, 14 ஆம் திகதிகளில் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், சங்கத்தின் தலைவர், செயலாளர், இயக்குநர் சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அத்துடன் பொங்கலை முன்னிட்டு சங்க உறுப்பினர்களுக்கு விஷேட கொடுப்பனவாக இலாப ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சங்க உறுப்பினர்கள் ஆர்வத்துடன் வந்து அன்பளிப்பை வாங்கிச் சென்றதுடன் மேன்மேலும் இப்படிப்பட்ட நிகழ்வுகள் தொடர வேண்டும் எனவும் கேட்டுள்ளனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021-2280065
தொலைநகல்: 021-2280066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377,
021-2262395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021-2270323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 0212263206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 0214901519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 0212270399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலெக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 0232223311

## பிரபாகரனிடம் தவறேதும் இல்லை

கொழும்பு வந்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கிருஷ்ணாவிடம், 13 பிளஸ் தீர்வைத் தமிழர்களுக்குதான் முன்வைப்பார் என்று மீண்டும் ஒரு தடவை சொல்லித் திருப்பி விட்டார் இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அதை நம்பினாரோ இல்லையோ கிருஷ்ணாவின் வருகையின் பெறுபேறு அத்துடன் முடிந்துவிட்டது.

இந்த முறையாவது இந்தியா ஏதாவது செய்துவிடாதா என்ற ஏக்கத்துடன் காத்திருந்த மக்களுக்கு மீண்டும் ஏமாற்றமும் சலிப்பும் மட்டுமே மிஞ்சியது. கிருஷ்ணாவுக்கு 13 பிளஸ் கீதையை ஓதிய கையுடனேயே, அன்று மாலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்த இருந்த பேச்சைக் கைவிட்டது அரசு. ஓர் அரசியல் நாகரிகம் கருதிக்கூட, அன்றைய தினம் பேச்சு நடக்குமா இல்லையா என்ற தகவலைக் கூட்டமைப்புக்கு அரசோ அமைச்சர் பீரிஸோ அறிவிக்கவில்லை.

நாடாளுமன்றக் கூட்டத் தொடர் முடிந்த பின்னர் வழக்கம்போலப் பேச்சு நடக்கும் இடத்துக்குச் சென்று காத்திருந்து விட்டுத் திரும்பினர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினர். முன்னதாக, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நிராகரித்தும் விமர்சித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிக்கை விட்டதால் அரசு கோபமடைந்து பேச்சை நிறுத்திவிட்டதாக கொழும்பு ஊடகங்கள் மூலம் அரசு தகவல்களைக் கசியவிட்டது.

அதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பெயர்களைத் தரும் வரைக்கும் அதனுடனான பேச்சை இடைநிறுத்தப் போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன ஊடகங்களுக்குத் தெரிவித்தார். பேச்சுக் குழுவிலும் ஒருவராக இருக்கும் சஜின் வாஸ் இப்படிக் கூறுவது, ஜனாதிபதியே நேரில் கூறுவதற்கு ஒப்பானது. ஏனெனில் பேச்சுக் குழுவில் உள்ள மஹிந்தவின் மிக நெருங்கிய [உளவாளி என்றுகூடச் சொல்லலாம்] நபர் அவர்.

''இரும்பு நெகிழ்ந்தால் கொல்லன் .... தூக்கித் தூக்கி அடிப்பானாம்'' என்பதுபோல், போரில் தோற்றுவிட்டதால் பேச்சுக்கு வரமாட்டோம் என்றுகூடத் தகவல் அனுப்பாமல், தமிழர் பிரதிநிதிகளைக் காத்திருக்க வைத்து திருப்பி அனுப்பி அவமானப்படுத்தியிருக்கிறது அரசு.

இது ஏதோ திடீரென நிகழ்ந்தது அல்ல. தமிழர்களுக்கு எதையும் கொடுக்க முடியாது என்ற அரசின் பிடிவாதத்தை தமிழர்களுக்கும் கூட்டமைப்புக்கும் வெளிப்படுத்தும் நோக்கம் கொண்ட அரசின் நடவடிக்கையே இது.

இதைத்தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் எப்போதுமே - திரும்பத் திரும்ப - கூறிவந்தார். ''சிங்களத் தலைமைகள் ஒருபோதும் தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தரமாட்டா'' என்பதை அவர் ஆணித்தரமாக நம்பினார்; கூறிவந்தார்.

''பிரபாகரன் அரசியல் தீர்வில் ஒருபோதும் நாட்டம் கொண்டிருக்கவில்லை, வன்முறை வழியிலேயே நம்பிக்கை வைத்திருந்து செயற்பட்டார். அதனால்தான் தமிழினத்துக்கு இன்றைய நிலை வந்தது'' என்று விமர்சிப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் காலம் இப்போது பதில் சொல்கிறது.

சிங்களத் தலைவர்கள் ஒருபோதும் தமிழர்களுக்குத் தீர்வைத் தரமாட்டார்கள் என்ற பிரபாகரனின் நம்பிக்கை அவர் போர்க் களத்தில் இருந்து அகன்ற பின்னரும்கூட, காலம் மெய்ப்பித்து வருகிறது. எனவே அவர் களத்தில் இருந்த காலம் முழுவதும் அவர் போரை முதல் தெரிவாக வைத்திருந்ததில் தவறேதும் இருக்க முடியாது.

கூட்டமைப்பினர் மட்டுமல்ல, டக்ளஸ் தேவானந்தா முதல் சகல தமிழ் அரசியல் தலைமைகளும் உணர வேண்டிய மிக முக்கிய விடயம் இதுதான். இந்த அடிப்படை உண்மையின் அடிப்படையில் கட்டமைக்கப்படும் போராட்டங்களும் முயற்சிகளும்தான் தமிழருக்கு விடுதலையை - சுதந்திரத்தை - வென்று தரமுடியும்.

# இலங்கை மற்றொரு சிங்கப்பூராக மாறுமா?

தமிழில்: வீ.எஸ்.ரீ.

“ சிங்கப்பூரின் புகழுக்கான முதலாவது காரணம், மாசுமறுவற்ற, லஞ்சம், ஊழல் எதுவுமற்ற சிறப்பான அரசியல் நிர்வாகம். இரண்டாவது காரணம், சட்டமும் ஒழுங்கும் எந்தவொரு தலையீடுமின்றி முறைப்படி உரிய வகையில் செயற்படுத்தப்படும் நிலை. மூன்றாவது காரணம் சிங்கப்பூரில் வாழும் சகலரதும் அர்ப்பணிப்பு உணர்வுடனான செயற்பாடுகள்.

இலங்கையை மற்றொரு சிங்கப்பூராக மாற்றி அமைப்பது எமது குறிக்கோள்'' இது அடிக்கடி இந்த நாட்டின் அரச உயர் தலைவர்கள் மேடையில் முழங்கிவரும் "வாய்ச் சவடால்".

அப்படிப்பட்ட நிலையில் தனிப்பட்ட பயணமாக சிங்கப்பூருக்குச் சென்று திரும்பியிருக்கும் சிங்கள ஊடகவியலாளர் ஒருவரின் அனுபவப் பகிர்வு இது.

''இலங்கை மற்றொரு சிங்கப்பூர் ஆக இயலுமா?''

''சிங்கப்பூரின் புகழுக்கும் அதன் மகிமைக்கும் என்ன காரணம்?''

இந்த இரண்டாவது கேள்விக்கான விடையை முதலில் பார்க்கலாம்.

சிங்கப்பூரின் புகழுக்கான முதலாவது காரணம், மாசுமறுவற்ற, லஞ்சம், ஊழல் எதுவுமற்ற சிறப்பான அரசியல் நிர்வாகம்.

இரண்டாவது காரணம், சட்டமும் ஒழுங்கும் எந்தவொரு தலையீடுமின்றி முறைப்படி உரிய வகையில் செயற்படுத்தப்படும் நிலை.

மூன்றாவது காரணம், சிங்கப்பூரில் வாழும் சகலரதும் அர்ப்பணிப்பு உணர்வுடனான செயற்பாடுகள்.

இந்தப் பதிலை நான் சொல்லவில்லை. "சிங்கப்பூரின் புகழுக்கு என்ன காரணம்'' என்று நான் கேட்ட கேள்விக்கு தனது கைவிரல்களை ஒவ்வொன்றாக மடக்கிக் கணக்கிட்டவாறு அந்த வாடகைக் கார் சாரதி தெரிவித்த பதில். பதிலளிக்கும்போது சாரதியின் முகத்தில் பெருமை பரவியிருந்தது.

ஒரு நாள் மாலை, எட்டு மாடிகள் கொண்ட கட்டடத்தொடர் ஒன்றின் மேல்தளத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் ஆகாயத் தோட்டத்தைப் பார்வையிடச் சென்றேன். நான் தங்கியிருந்த விடுதியிலிருந்து அங்கு செல்ல அமர்த்திய வாடகைக் காரில் சென்று கொண்டிருந்தபோதே சாரதியும் நானும் உரையாடிக் கொண்டோம். சாரதியின் பதில் எனக்கு வியப்பை ஏற்படுத்தியது.

ஒரு வகையில் அந்தச் சாரதி கூறிய சிங்கப்பூரின் மகிமைக்கான காரணம் தெளிவான ஒன்றுதான். முதலாளித்துவ ஜனநாயக முறைக்கான உதாரணமாக சில விமர்சகர்கள் சிங்கப்பூரைக் குறிப்பிடுவதுண்டு. அதேபோன்று சிங்கப்பூர் மக்கள் சமூகமும் குறைந்ததல்ல. உலகத்திலுள்ள ஏனைய மக்கள் சமூகத்துக்கு முன்னுதாரணமாக அடையாளப்படுத்த அதற்கு முழுத் தகுதியும் உள்ளது என்பதை நான் அங்கு தங்கியிருந்த ஒரு சில நாள்களில் புரிந்து கொண்டேன்.

உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்து அங்கு தங்கி வாழும் மக்களை உள்ளடக்கிய அந்தச் சின்னஞ்சிறிய நாடு, ஒழுக்கம், கட்டுப்பாட்டால் சர்வதேசத்திலும் புகழ் நாட்டியுள்ளது. பரந்த சுயாதீனமான திட்டமிடல்களால் தன்னை உயர்த்திக் கொண்டுள்ளது.

''1970களிலேயே சிங்கப்பூர் உலக அரங்கில் தன்னை வெளிக்காட்ட ஆரம்பித்தது. நாட்டின் பிரதமரான 'லீகுவான்யுகே'யின் நிர்வாகத்தில் எந்தவொரு ஊழல், லஞ்ச செயற்பாடுகளுக்கும் இடமிருக்கவில்லை. இதனால் நாடு துரித வளர்ச்சி கண்டது''

அந்த வாடகைக் கார் சாரதி தெளிவான உறுதியான குரலில் பேசினார். ''சட்டம் எங்கும் எவருக்கும் சமமானதே'' என அந்தக் காரின் உட்புறக் கண்ணாடியில் பொறிக்கப்பட்டிருந்த வாசகம் அந்த நாட்டின் சட்டம் ஒழுங்கு பேணப்படும் நிலையை எனது கண் முன்னால் நிரூபித்தது.

அது அந்த நாட்டின் வளர்ச்சிக்காக, உயர்ச்சிக்காக அர்ப்பணிப்பு உணர்வுடன் செயற்படும் அரசியல்வாதிகளினால் உருவாக்கப்பட்ட பழக்க வழக்கமாகும்.

லட்சக்கணக்கான அதி நவீன மோட்டார் வாகனங்கள் இரவு பகலென்ற பேதம் எதுவுமின்றி தினமும் பயணிக்கும் சிங்கப்பூரின் அதிவேக பெருந்தெருக்களில் ஒரு தடவையா



வானுயர்ந்த கோபுரங்களால் மட்டும் இலங்கை சிங்கப்பூராகிவிடாது.

வது வாகன 'ஹோர்ண்' ஒலியை நான் கேட்டதில்லை. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாதையைக் குறுக்காக எவராவது ஒருவர் கடக்க முயன்றதை நான் கண்டதில்லை. சத்தம் போட்டு பாதசாரிகளைக் கூவியழைத்து பொருள்கள் விற்ற நடைபாதை வியாபாரிகள் எவரையும் நான் கண்டதில்லை.

அவதானத்துடன் தேடிப் பார்த்தும் ஒரு பிச்சைக்காரரைக் கூடக் கண்ணால் காணவில்லை. நடைபாதையில் நடந்து செல்ல நேர்ந்த எந்தவொரு சந்தர்ப்பத்திலும், நடைபாதை ஓரத்தில் நிலத்தில் ஒரு சிறு துண்டுக் காகிதம் வீசி எறியப்பட்டிருந்ததை நான் கண்டதில்லை.

மனிதர்கள் ஒவரோடு ஒருவர் உரத்த குரலில் வாக்குவாதப்படுவதை அந்த நாட்டில் தவறான பழக்கமாகக் கருதுகின்றனர். சாதாரண இலங்கையர் சிங்கப்பூர் கடைகளில் பொருள்களைக் கொள்வனவு செய்யச் செல்லும்போது சிரமத்துக்கு உள்ளாக நேரிடும். சிங்கப்பூரின் நாணயப் பெறுமதி, இலங்கையின் நாணயப் பெறுமதியைவிட அதிகம் என்பதே இதற்குக் காரணம்.

ஆனாலும் என்னால் மற்றொரு விடயத்தைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. அது சிங்கப்பூரில் வயதானவர்கள் தமது வாழ்க்கையைக் கழிப்பதற்குச் சிரமப்படவேண்டியுள்ளது என்பதேயாகும். ஏனெனில் வயதானவர்கள்கூட எப்படியும் ஏதாவது தொழில் ஒன்றைச் செய்யவேண்டிய நிலை இருக்கிறது. ஆனாலும் உழைக்க வேண்டுமென்ற உண்மையான உணர்வுடன் அவர்கள் இயங்குகின்றனர்.

பௌதீக அபிவிருத்தி குறித்த அக்கறைக்கு மேலாக ஆத்மார்த்த ரீதியிலான வாழ்வுமுறை குறித்த விருப்பு சிங்கப்பூர் மக்களிடம் போதியளவு இல்லையா? என்று மனம் சிந்திக்கத் தலைப்பட்டது. இது குறித்தும் அந்த வாடகைக் கார்ச் சாரதியிடம் வாய்விட்டுக் கேட்டேன்.

''மதம் என்பது ஒவ்வொருவரது தனிப்பட்ட விருப்புக்கு ஏற்றதொன்றல்லவா? அரசு, மதம் தொடர்பாக எந்த வகையிலும் தலையிடுவதில்லை. மத விடயத்தில் சுதந்திரம் எமக்குண்டு. பௌத்த மதப் பிரிவுகள்கூட ஒன்றிரண்டல்ல, பலவுண்டு'' என்றார்அந்தச் சாரதி.

நான் பயணித்த அந்த வாடகைக் காரின் சாரதி இருக்கைக்கு முன்புறம் வித்தியாசமான தோற்றத்தில் அமைந்த பளிங்கிலான புத்தர் உருவச் சிலையொன்று தொங்கவிடப்பட்டிருந்தது. அது அவர் பின்பற்றும் மதத்துக்கான கடவுளின் உருவம் என விளக்கம் தந்தார். நான் அவதானித்த வகையில் சிங்கப்பூரின் சகல வாடகைக் காரோட்டிகளின் பேச்சில் ஒரு சாந்தமும் பணிவும் கலந்திருந்ததை உணர முடிந்தது. பயணமுடிவில் 'மீற்றர்' காட்டும் தொகைக்கான அச்சிட்ட ரசீது பயணிகளுக்கு வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட பயணத்தின் போது ஏற்படும், ஏற்பட்ட அசௌகரியங்கள் குறித்து முறையிடுவதற்காக முறைப்பாட்டுத் தொலைபேசி இலக்கமும் அந்தப் பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எமது நாட்டில் இத்தகைய நாகரீகமான, பண்பாடான நடைமுறை செயற்படுத்தப்பட இன்னமும் பல ஆண்டுகள் காலம் செல்லும் எனச் சிந்திப்பதில் தவறேதும் இருக்கமுடியாது. எமது இந்தப் பண்பாட்டுப் பின்னடைவுக்கான காரணம் நாம் மேற்குறிப்பிட்ட சிங்கப்பூர் மக்களது சீரான ஒழுங்கான, கலாசார பண்பாட்டுப் பழக்கவழக்கங்களுக்கு முற்றிலும் எதிர்

(15ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கு நாமே உதவி எம்மை வளம்படுத்துவோம்

மருத்துவர் யூடி.ரமேஷ் ஜெயக்குமார்

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற கிளிநொச்சி மாவட்ட மாணவர்களினால், 1998ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது, 'யாழ். பல்கலைக் கழக கிளிநொச்சி மாணவர் கல்வி வளர்ச்சி நிதியம்'.

இந்தக் காலப் பகுதி கொடிய போர் நடந்த காலம், வன்னிக்கான தரைப்பாதைகள் யாவும் தடைப்பட மாணவர்கள், ஆகாய கடல் மார்க்கமாகப் பல சிரமங்களுக்கு மத்தியில் தமது பயணங்களை மேற்கொண்டனர். பெற்றோர்கள் இருக்கும் இடமே, பல மாணவருக்குத் தெரியவில்லை. வருடக் கணக்கில் அவர்களுக்கு பெற்றோர்களுடனான தொடர்புகள் இருக்கவில்லை. தமது கல்வியைத் தொடர்வதற்கு பொருளாதார சுமைகளை, மனச்சுமைகளை சுமந்திருந்த நேரம், பல மாணவர்கள் ஒரு வேளை உணவுக்கே வழி தெரியாது விழித்திருந்த காலப் பகுதி அப்போது கல்வி கற்ற நல்லுள்ளம் படைத்த யாழ் பல்கலைக்கழக, கிளிநொச்சி மாணவர்களினதும், சில விரிவுரையாளர்களினதும் அயராத முயற்சியினால் கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியம் 1997இல் ஆரம்பிக்கப்பட்டது.

ஒன்றியத்தின் மிக முக்கிய நோக்கம் கல்விக்குப் பின், தமது மாவட்டத்தில் பணியாற்றி மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதாகும். இந்த நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட ஒன்றியம், மாணவர்களை மாவட்ட சமூகப் பற்றோடு நெறிப்படுத்துவதற்காக ஒன்றிய செயற்கூட்டங்களில் பின்வரும் சத்தியப் பிரமாணத்தை உறுதியுரையாக எடுத்தது.

''பசுமை நிறைந்த எமது மாவட்டம் போரால் சிதைந்திருக்கும் இந்த வேளை நாளைய உதயத்தில் புதுப் பொலிவூட்ட இன்றே எமது கரங்களை இணைக்கின்றோம்''

மாணர்கள், ஒன்றிய நிர்வாக வழிகாட்டலில் சிரமதானம், இரத்த தானம், இலவச கல்விச் செயற்பாடுகள், அரங்க செயற்பாடுகள் போன்ற பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டார்கள். பேராசிரியர். துரைராஜா ஞாபகார்த்தமாக வருடாவருடம் இரத்தானம் செய்தார்கள். கிளிநொச்சி மாணவர் ஒன்றியத்தின் சமூக நற்பணிகள், செயற்பாடுகளால் ஈர்க்கப்பட்ட பல்கலைக்கழக மூதவை 1998 ஆம் ஆண்டு இதனைப் பல்லைக்கழக விதிகளுக்கு அமைய, பதிவு செய்து ஒன்றியத்தின் செயற்பாடுகளை சட்ட ரீதியாக செய்வதற்கு உதவியது. அப்போது பல்கலைக்கழக உபவேந்தராக பணியாற்றிய பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை இந்த ஒன்றியத்தின் செயற்பாடுகளுக்குப் பெரிதும் உதவினார்.

***கல்வி வளர்ச்சி நிதியம்***

காலஞ்சென்ற சிவதமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆசீர்வாதத்துடன், அவரது தியாக சிந்தையினால் இந்த நிதியத்துக்காக தந்துதவிய 10,000 ரூபா பணத்தைக் கொண்டு, யாழ் பல்கலைக்கழக மக்கள் வங்கியில் 14.02.1998 அன்று இந்தக் கல்வி நிதியத்துக்கான சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கப்பட்து. 15.02.1998 அன்று உதயன் பத்திரிகையில், யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் கிளிநொச்சி மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்த கட்டுரை, மாணவர் ஒன்றியத்தால் வெளியிடப்பட்டது. இந்தக் கட்டுரை அந்தக் காலத்தில் யாழ். குடாநாட்டு மக்களுக்கு வன்னி மாணவர்களின் உண்மை நிலைமையை விரிவாக எடுத்துக்காட்டுவதற்கு வழி செய்தது.

தொடர்ந்து மாணவர் ஒன்றியச் செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைய முதலாவது நிதி சேகரிப்பு நிகழ்வாக யாழ். திருமறைக் கலாமன்றத்தின் உதவியுடன் 07.03.1998 அன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 'ஜெனோவா' நாடகம் மேடையேற்றப்பட்டது. இதற்கான நுழைவுச் சீட்டுகளை அப்போது சகல பீடங்களிலும் கல்வி கற்ற மாணவர்கள் கடைகள், வீடுகள், கிராமங்கள் என்று தமது கல்விவேளை தவிர்ந்த நேரங்களில் விற்றுப் பணம் சேர்த்தார்கள். இதன் மூலம் ஒரு லட்சம் ரூபா பணம் கிடைத்தது. தொடர்ந்து எமது நிலைமைகளை அறிந்து கொண்ட வெளிநாட்டு நலன் விரும்பிகள், பல உதவிகளைச் செய்தார்கள். குறிப்பாக ஆஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக் கழக தமிழ்ச் சங்கம், இந்த நிதியத்துக்காக 2 லட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியது.

31.04.1999 அன்று அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு ஊடாக மேலும் ஒரு லட்சம் ரூபா சேர்க்கப்பட்டது. இவ்வாறாக ஒவ்வொரு வருடமும் குறைந்தது மூன்று நிதி சேகரிப்புச் செயற்பாடுகள் மூலம் சேர்க்கப்பட்ட நிதி ஒன்றியத்தின் பெயரிலான கணக்கில் இடப்பட்டது. அப்போது மொத்தமாக சேர்க்கப்பட்ட 8 லட்சம் ரூபாய், யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கியில் நிரந்தர வைப்பிலிடப்பட்டது. அந்தப் பணத்தின் மாத வட்டியைக் கொண்டு தேவைப்படும் மாணவர்களுக்கு உதவலாம் என ஒன்றியம் தீர்மானம் எடுத்தது.



இந்த நிதியை யாழ் பல்கலைக்கழக நிதிப்பிரிவின் ஊடாகக் கொடுப்பதற்கும், இந்த நிதியம் நீண்ட காலம் நிலைத்திருக்கும் நோக்கத்துடனும் இதற்கான தனியான யாப்பு விதிகள் உருவாக்கப்பட்டன. இதற்கு அப்போது பல்கலைக்கழக காசாளராக இருந்த கனகரட்டினம், உதவிப் பதிவாளராக இருந்த ஜெயக்குமார் ஆகியோர் மிகுந்த பயனுடைய ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கினார்கள். இந்த யாப்பு விதிகளின்படி,

01.நிதியத்தில் பயன் பெறும் மாணவர்களை தெரிவு செய்து பல்கலைக்கழக நிர்வாகத்துக்குத் தெரிவிக்கும் பொறுப்பு - கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியத்திற்கு உரியது.

02.பல்கலைக்கழக, நிதிக்கிளை மாதா மாதம் இந்த மாணவர்களுக்கு இந்த உதவியை வழங்கும்.

03.இந்த நிதியம் தெரிவு செய்யும் ஒரு மாணவனுக்கு ஒரு வருடம் மட்டுமே உதவி செய்யும். இந்த விதிமுறைகளுக்கு அமைய இந்தக் கொடுப்பனவுகள் கொடுக்கப்படும்.

இந்த நிதியத்தின் ஆரம்ப அங்குரார்ப்பண நிகழ்வு, 25.05.1999 அன்று எமது ஒன்றிய காவலர் பேராசிரியர். அ.நவரெட்ணராஜா தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்குச் சகலபீட பீடாதிபதிகளும், அப்போது யாழ். அரச அதிபராக இருந்த க. சண்முகநாதன், பேராயர். வண. தோமஸ் சவுந்திரநாயம் ஆண்டகை உட்படப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

தொடர்ந்து வந்த புதிய மாணவர் ஒன்றியங்களினால் ஒவ்வொரு வருடமும், நிதி சேகரிக்கப்பட்டு, இந்த நிதியத்தின் நிரந்தர சேமிப்பில் பத்து லட்சம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டது. இந்த நிதியத்தின் ஊடாக 2006ஆம் ஆண்டு வரை யாழ். - பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் பயன்பெற்றனர். பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் பல்கலைக்கழகத்தில் இயங்கிய சகல மாவட்ட ஒன்றியங்களும் கலைக்கப்பட்டன. அதன்பின் இந்த நிதியத்தின் ஊடான கொடுப்பனவுகளும் நிறுத்தப்பட்டன.

கடந்த இரண்டு வருடங்களாக, யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள நிர்வாகிகளுடன் கலந்துரையாடியதற்கு இணங்க 2012 ஜனவரி மாதம் முதல் இந்த நிதயம் மீண்டும் யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி மாணவர்களுக்கு உதவுவதற்கு முன்வந்துள்ளது. முன்னாள் மாணவர் ஒன்றிய பெரும் பொருளாளர் ரதிதரன் , பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், கிளிநொச்சி மாணவர்கள் ஆகியோர் தமது பங்களிப்புகளை நல்கியுள்ளனர். இது வரை கொடுக்கப்படாமல் வட்டியாக உள்ள பணத்தையும் நிரந்தர வைப்பில் இடுவதன் மூலம் இந்த நிதியங்களுக்கு ஆயுள் உள்ளவரை உள்ள பணத்தின் பெறுமதியை கூட்டலாம்.

இதனைப் பல்கலைக்கழக நிர்வாகம் செய்யும் என முன்னாள் மாணவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இவ்வாறான நற்காரியங்களுக்காக மாணவர்களை அவர்கள் கல்வி கற்கும் காலத்திலேயே பயிற்றுவிப்பது மிகப் பயனுடையதாக அமையும்.

தலைமைத்துவம், பொறுப்புணர்ச்சி, சமூக சிந்தனை, பிறர்நலம் பேணல் போன்ற நல்ல காரியங்கள் குறைந்து வருகின்ற இந்தக்காலத்தில் இன்றைய மாணவர்களின் நிகழ்கால, எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து கவலையை விடுத்து மாணவர்களை சமூக சிந்தனையுடன் உருவாக்குவதற்கு இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவைப்பது பொருத்தமாக அமையும்.

ஒரு சில மாணவர்களின் நற்சிந்தனையால் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிதியம் நீண்டு நிலைக்க வேண்டும் என்பதே இதற்காக அயராது உழைத்தவர்களின் எதிர்பார்ப்பாகும். இதன் மூலம் நன்மை பெறப் போகும் மாணவர்களுக்கு இந்த நிதியம் எவ்வாறு ஆரம்பிக்கப்பட்டது என்ற செய்தியை இந்தக் கட்டுரை எடுத்துரைக்கும்.

இந்த நிதியத்துக்கு உதவியளித்து, இதனை ஆரம்பிப்பதற்கு வழிகாட்டிய யாவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள். வள்ளுவர் கூற்றுப்படி காலத்தினால் செய்த நன்மை சிறிது எனினும் ஞாலத்தில் மானப்பெரிதாகும். ✱

# இலங்கை மற்றொரு சிங்கப்பூராக மாறுமா?

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறையான போக்கில் செயற்படுதலே ஆகும். அந்தச் சிங்கப்பூர் வாடகைக் காரோட்டி விரல் மடித்துக் காரணம் கற்பித்த விதத்தில் இதனைக் கூறுவதானால் எமது பண்பாட்டுப் பின்னடைவுக்கான காரணங்கள் பலவுண்டு.

முதலாவது காரணம் ஊழல் மலிந்த அரசியல் செயற்பாடுகள். இரண்டாவது, எந்தவொரு துறையிலும் சட்டமும் ஒழுங்கும் முறைப்படி பேணப்படாமை. மூன்றாவது, நாட்டின் உயர்மட்டத்தில் உள்ளவர்கள் முதல் கீழ் மட்டத்தில் உள்ளவர்கள்வரை அர்ப்பணிப்பு உணர்வுடனும் நேர்மையுடனும் செயற்படாமை.

ஆகாயத்திலிருந்து நோக்கும்போது பச்சை நிற மரகதக் கல் போன்று அழகுறத் தோற்றமளிக்கும் இலங்கைத் தீவுக்கு, சுதந்திரம் பெற்ற நாள் முதல் பொய்யும் புரட்டும் மிக்க ஏமாற்று அரசியலே சொத்தாகி விட்டது. அதிலிருந்து மீள முடியாது தத்தளிக்கிறது. இலங்கை இன்று இந்த நாட்டின் தேர்தல் நடைமுறை எந்த அளவுக்குச் சீர்கெட்டுப் போயுள்ளது என்பதை நாம் அறிவோம். அது உண்மையான ஜனநாயக நடைமுறையில் அமைந்த ஒன்றல்ல. அதிகார அரசியல் ஆசையால் வந்தது. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒருவரை ஒருவர் நாகரீகமற்ற வார்த்தைகளால் விமர்சிப்பதைக் கண்டு முகம் சுழிக்கிறோம்.

சிங்கப்பூரில் எத்தகைய அரசியல் நடைமுறை உள்ளது என்பது குறித்து விவரிப்பதில் எவ்வித பயனும் இல்லை. ஆசியாவை நடுநிலைப்படுத்தி உருவாக்கப்பட்ட உலக வர்த்தக சந்தையில் தென்கொரியா, சீனா, வியட்நாம், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்குச் சமமான நிலையை சிங்கப்பூரும் வகிக்கும் விதத்தில் சுதந்திர வர்த்தக நடைமுறையில் சிங்கப்பூரும் இணைந்துள்ளது.

நவீன தொழில்நுட்ப ரீதியில் மின்பொருள்களை உற்பத்தி செய்வதற்குப் புதிய நவீன கல்விமுறையைச் சிங்கப்பூர் கடைப் பிடித்து வருகிறது. அதேசமயம் நேரடி வரிக் கொள்கையை நடைமுறைப் படுத்துவதன் மூலம் இந்திய முதலீட்டாளர்களுக்கும் தனது வர்த்தகச் சந்தை வாய்ப்பை சிங்கப்பூர் அரசு வழங்கியுள்ளது.

உலகின் வர்த்தக மையந் தொடரான முஸ்தாபா வர்த்தக மையத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான இந்தியர்கள் தொழில் செய்கின்றனர். சிங்கப்பூர் அரசு இவ்விதம் சகல வர்த்தகச் செயற்பாடுகளுக்கும் ஒரு சீரமைந்த வகையில் வசதி வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் சிங்கப்பூரின் வெளிநாட்டுச் செலாவணியைப் பெருமளவில் தேடிக்கொள்கிறது.

சிறந்த பொருளாதார நடைமுறையின் கீழ் இந்த நாட்டின் பெரும்பாலான வர்த்தக நடவடிக்கைகளில் சிங்கப்பூர் அரசின் அமைச்சர்களே சம்பந்தப்பட்டுள்ளனர். அவர்களது உறவினர்கள் பலர் பெரும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் நாட்டின் எதிர்காலப் பயணத்துக்கு குறிக்கோள்களுடனான செயற்பாடுகள் அவசியமானவை என சிங்கப்பூர் பொது மக்களுக்கு எடுத்துக்கூறி வருபவர்களும் அத்தகைய அரச உயர்மட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளே. அந்த அளவுக்கு அரசின் சட்ட திட்டங்களுக்கு, அபிவிருத்திக்கு மதிப்பளித்து, அவற்றைப் பின்பற்றிச் செயற்பட அவர்கள் எப்போதுமே பின் நிற்பதில்லை.

கொழும்பு வலயத்தில் அமைந்துள்ள அரச திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக் கட்டடங்களைச் சூழ எந்த அளவுக்கு வெற்று நிலம் அமைந்திருக்கிறது என்பதை எவராவது எண்ணிப் பார்க்கின்றார்களா? அத்தகைய வெற்று நிலங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களோ, அமைச்சுகளின் செயலாளர்களோ, நகர சபைகளோ, அல்லது அவற்றில் கடமையாற்றும் அரச ஊழியர்களோ அது குறித்து ஏதாவது அக்கறை செலுத்துகிறார்களா?

அது போன்றே கிராம மட்ட அரச நிறுவனங்கள் செயற்படும் கட்டடங்களைச் சுற்றியுள்ள வெற்று நிலத்தை ஏதாவது ஒரு வகையில் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்த எவராவது அக்கறை காட்டுகிறார்களா? இல்லையே.

அரச திணைக்களம் ஒன்றில் கடமையாற்றும் கீழ்மட்ட ஊழியர் ஒருவரிடம் ஒரு முறை எனது இந்த ஆதங்கத்தைப் பகிர்ந்து கொண்டேன். அவர் சிரித்தபடியே இந்தக் கட்டடத்தைச் சூழவுள்ள வெற்று நிலத்தில் சிறுதானியப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள நாம் விரும்புகிறோம்தான். ஆனாலும் அதற்கான முயற்சியும் முன்னெடுப்பும் மேல் மட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டியதுதானே நியாயமும் பொருத்தமும் ஆகும் எனப் பதிலளித்தார்.

இந்தியாவில் தற்போது இத்தகைய விழிப்புணர்வு பெருமளவில் தலை தூக்கியுள்ளது. ஆனால் நாம் இன்றும் எமது அதே பழைய பாணியிலேயே எமது வாழ்க்கை நடைமுறையை நகர்த்திச் செல்கிறோம். அதில் திருப்திப் பட்டுக் கொள்கிறோம். இந்த லட்சணத்தில் இலங்கையை மற்றொரு சிங்கப்பூராக உருவாக்கிக் காட்டுகிறோம் என்ற அரசியல்வாதிகளின் 'கயிறு' கள்வேறு. நாம் யதார்த்தத்தைப் புரிந்து செயற்பட இன்னும் எத்தனை ஆண்டுகள் காலம் செல்லப்போகிறது என்ற கேள்வி என்றுமே விடைகாண இயலாத வினாவாக புரியாத புதிராகத்தான் இருக்கும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ப்பொருள் காண்பது அறிவு

தந்தியை விட வேகமாகப் போகக் கூடியது எது? என்று ஒருவர் கேட்டார். ''வதந்தி'' என்றார் இன்னொருவர். அவர் அப்படிச் சொன்னதில் தப்பு ஒன்றுமில்லை.

வதந்தி வேகமாகப் பரவுவதற்கு என்ன காரணம்? ஒன்றுக்கு இரண்டாக மிகைப்படுத்திச் சொல்கின்ற மனித சுபாவம்தான் ஒரு காரணம். சொல்வதை அப்படியே நம்புவது இன்னொரு காரணம். ''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு'' என்றார் வள்ளுவர். யார் எதைச் சொன்னாலும் அதை அப்படியே நம்பிவிடுவதா? அறிவு வேலை செய்ய வேண்டும். அதில் எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டும். முக்கியமாகப் பொறுப்பான பதவியில் உள்ளவர்களுக்கு இது மிகவும் அவசியமான ஒன்று.

ஒரு நாட்டில் சாதாரண ஆள் ஒருவன் இருந்தான். அவனிடம் ஒரு கழுதை இருந்தது. அந்தக் கழுதையை மிகவும் பிரியத்துடன் வளர்த்தான். அவனுக்கு அது நெருக்கமான நண்பனைப் போன்று இருந்தது.

அந்தக் கழுதைக்கு ' கந்தர்வ சேனன்' என்று பெயர் வைத்தான். அந்தப் பேரைச் சொல்லித்தான் அதை அவன் கூப்பிடுவான். அவ்வளவு பிரியமாக வளர்த்த அந்தக் கழுதை, ஒரு நாள் திடீர் என்று இறந்து விட்டது. எப்படி இருக்கும் அவனுக்கு? மிகவும் சங்கடப்பட்டான். சாப்பிடக்கூடப் பிடிக்கவில்லை அவனுக்கு. முகத்தை 'உம்' என்று வைத்துக்கொண்டு மிகவும் கவலையோடு இருந்தான். அந்த நேரம் பார்த்து அவனுக்கு வேண்டப்பட்ட நண்பன் ஒருத்தன் அந்தப்பக்கமாக வந்தான். அவன் இவனைப் பார்த்து ''ஏன் இப்படி உட்கார்ந்து இருக்கிறாய்?'' என்று கேட்டான்.

கந்தர்வசேனன் இறந்து விட்டதாகக் கூறி குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தான். ''கந்தர்வசேனன் யார்?'' என்று கேட்டார் மற்றவர். இவன் இப்படிக் கேட்டவுடனே அவன் இன்னும் சத்தம் போட்டு அழ ஆரம்பித்தான். அவன் அழும் வேகத்தைப் பார்த்ததும் ''சரி, கந்தர்வசேனன் முக்கியமான ஒரு பெரிய மனிதன் போல் இருக்கிறது'' என்று நண்பன் முடிவு செய்துவிட்டான் தனது நண்பனின் துக்கத்தைத் தானும் பகிர்ந்து கொள்வோம் என்று நினைத்தான். உடனே தலையை மொட்டையடித்துக் கொண்டான்.

மீசையை எடுத்தான் கறுப்பு உடை அணிந்தான். கந்தர்வசேனன் இறந்த செய்தி காற்றாகப் பரவ ஆரம்பித்துவிட்டது. ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் இந்த செய்தியைக் கேட்டதும் தலையை மொட்டையடித்துக் கொண்டு கறுப்புத் துணியை உடுத்திக் கொண்டார்கள்.

ஒரே நாளில் நகரம் முழுவதும் துக்கத்தில் மூழ்கிவிட்டது. எங்கே பார்த்தாலும் மொட்டைத் தலையும் கறுப்புத்துணியும்தான். அந்த நாட்டு அமைச்சர் இதைப் பார்த்தார். சனங்கள் எல்லாம் துக்கத்துடன் இருக்கிறார்களே என்று நினைத்து சில பேரைக் கூப்பிட்டு ''என்ன விசயம்?'' என்று கேட்டார்.

''கந்தர்வசேனன் இறந்துவிட்டார் அதுதான் இப்படி துக்கம் அனுஷ்டிக்கிறோம்'' என்றார்கள். அவராவது கொஞ்சம் யோசிக்க வேண்டுமல்லவா? கந்தர்வசேனன் என்று கூறுகிறீர்களே, யார் அது என்று விசாரிக்கலாமே? விசாரிக்கவில்லை.

''மக்கள் துயரத்தில் தாமும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தார். அவரும் மொட்டை அடித்துக் கொண்டு துக்கம் அனுஷ்டிக்க ஆரம்பித்தார். அமைச்சர் இப்படி இருக்கிறார். என்கின்ற செய்தி அரசருக்கு எட்டியது. அரசரும் மொட்டை போட்டுக் கொண்டு துக்கம் அனுஷ்டிக்க ஆரம்பித்தார்.

அன்று இரவு ராஜா மொட்டைத் தலையோடு அந்தப்புறத்துக்கு வந்தார் ராஜா முகத்தை 'உம்' என்று வைத்திருந்தார். ராணி ''என்ன விசயம்? உங்கள் துக்கத்துக்கு என்ன காரணம்?'' என்று கேட்டார்.

ராஜா கவலையோடு ''கந்தர்வசேனன் இறந்து விட்டாராம், சனங்கள் எல்லாம் வருத்தத்தில் இருக்கிறார்கள்; அதனால்தான் நானும் அவர்களின் துக்கத்தில் பங்கெடுத்துக் கொள்கிறேன். ஒரு ராஜாவின் கடமை இல்லையா இது?'' என்றார்.

''அது சரி, கந்தர்வசேனன் யார்? உங்கள் அப்பாவா? அண்ணாவா? எதற்காக மொட்டை அடித்தீர்கள்?'' என்று கேட்டார் ராணி. அதன் பின்தான் ராஜா யோசிக்க ஆரம்பித்தார். ஆமாம்! அதுவும் சரி தான் என்று நினைத்து அமைச்சரைக் கூப்பிட்டு விவரம் கேட்டார். அவரும் அதன்பின்தான் யோசிக்க ஆரம்பித்தார். உடனே சனங்களைக் கூப்பிட்டு விசாரித்தார். ஒவ்வொருத்தராக விசாரித்துக் கொண்டே போனார்கள். கடைசியாக அந்த ஆளிடம் போய்ச் சேர்ந்தார்கள். அவரிடம் ''கந்தர்வசேனன் யார்?'' என்று கேட்டார்கள். அதற்கு அவர் ''என்னுடைய கழுதை'' என்றார்.

ராஜாவும் மந்திரியும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார்கள். மற்றவர்கள் கூறும் எல்லாவற்றையும் கண்ணை மூடிக் கொண்டு நம்ப ஆரம்பித்தால் இப்படித்தான் முடியும்.



ஸ்ரீ சிவானந்தர் சொன்ன குட்டிக் கதை இது. இந்தக் காலத்தில் சில பேர் கூறும் விடயம் பொய் போன்று இருக்கும். ஏதோ சொல்கிறார் என்று நினைப்போம். ஆனால் அதிலும் உண்மை இருக்கும்.

ஒருத்தர் ''100பேர் ஒரே குடையில் வந்தோம்; ஒரு சொட்டுத் தண்ணி கூட எங்கள் மேல் படவில்லை என்றார்''. ''அது எப்படி?'' என்று கேட்ட போது, '' அப்போது மழையே பெய்யவில்லையே'' என்றார்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# அழுது தன்னை அறிமுகப்படுத்திய உலவிக்குளம் சித்திவிநாயகர்



இன்றைக்கு 237 வருடங்களுக்கு முன்னர் (1775) அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த சிதம்பரராமர் வடமராட்சி கிழக்கில் உள்ள மருதங்கேணியில் வைக்கோலை கொள்வனவு செய்து மாட்டு வண்டியில் ஏற்றி வந்தார். அந்த வைக்கோல் பாரத்துக்கு உள்ளே ஒரு பேளைக்குள் இருந்தபடி விநாயகப் பெருமானும் எழுந்தருளி வந்து விட்டார். பிள்ளையாரின் பேரருள் சிதம்பரராமர் பால் இறங்கியது. பிள்ளையார் சிறுபிள்ளைபோல் அழுது தன்னை அறிமுகம் செய்து அவருக்குத் தரிசனம் கொடுத்தார். ஆரம்பத்தில் சிதம்பரராமரும் அவரின் குடும்பத்தினரும் விளக்கேற்றி தாம் அறிந்தவாறு பூசை செய்தனர்.

மாட்டு வண்டியில் வைக்கோல் பாரத்தோடு பேளையுள் வந்த பிள்ளையாரை பிரதிஷ்டை செய்து அமைக்கப்பட்ட ஆலயமே அச்சுவேலி தெற்கு உலவிக்குளம் சித்திவிநாயகர் ஆலயம். யாழ்ப்பாணம் - பருத்தித்துறை நெடுஞ்சாலையில் வல்லைச் சந்தியை கடந்து ஆவரங்கால் நோக்கி வரும்போது பிரதான வீதிக்கு மேற்கே வீதியில் இருந்து கூப்பிடு தூரத்தில் அழகான மூடு சாந்து முகப்புடன் கூடிய ஆலயதரிசனம் கிடைக்கும். உலவிக்குளம் என்ற தோம்புப் பெயர் கொண்ட வயலில் பிள்ளையாரை பிரதிஷ்டை செய்து கொட்டில் அமைத்துக் கோயிலாக வழிபட்டமையால் உலவிக்குளம் பிள்ளையார் என்ற பெயர் வழங்கி வருகின்றது.

ஆரம்பத்தில் உலவிக்குளம் வயலில் உள்ள அலரிமரப்புதர் அருகே இருந்த அரச மரத்தடியில் கொட்டிலாக இருந்த ஆலயம் காலப்போக்கில் சுண்ணாம்பு கொண்டு நிரந்தரமான கட்டடமாக மாறியது மடாலயத்தில் பூசை செய்வதற்கு ஒரு சைவக் குருக்கள் குடும்பமும் ஆலயச் சூழலில் குடியமர்த்தப்பட்டது. மாதவையர் சொக்கையர் என்பவர்களும் அவரின் பரம்பரையினரும் ஆலயபூசை கிரியைகளை முறைப்படி செய்து வந்தனர். சிதம்பரராமர் பரம்பரையினர் திருவிளக்கேற்றும் பணியையும் கோயில் நிர்வாகத்தையும் நடத்தி வந்தனர்.

> உலவிக்குளம் என்ற பெயர் கொண்ட வயலில் பிள்ளையாரை பிரதிஷ்டை செய்து கொட்டில் அமைத்து கோயிலாக வழிபட்டமையால் உலவிக்குளம் பிள்ளையார் என்ற பெயர் வழங்கி வருகின்றது.

உலவிக்குளம் சித்தி விநாயகருக்கு சதுர்த்தி மற்றும் விசேட கிரியைகளை விசேட காலங்களில் சிறப்பான அபிஷேகங்களை மேற்கொள்வதற்கு பிராமணக் குருக்கள்மாரை அழைக்கும் வழக்கம் வரலாயிற்று. காலப்போக்கில் பிராமணர் குருக்கள்மார் ஆலய பூசகர்களாகவும் ஆரம்பகாலத்தில் பூசை செய்த சைவக்குருமாரின் பரம்பரையினர் பரிசாரகர்களாகவும் பணியாற்றி வந்தனர்.

ஆலய நிர்வாகத்தை சிதம்பரராமரின் பின்னர் அவரின் பரம்பரை வாரிசுகளான சரவணை, சிதம்பரப்பிள்ளை, நாரயணபிள்ளை ஆறுமுகம், சரவணமுத்து; விநாயகம்பிள்ளை ஆகியோர் வழிவழியாக நடத்தி வந்தனர். பின்னர் இ.இரசாவிதானையார் ஆலய நிர்வாகத்தைப் பொறுப்பேற்று பழைய சுண்ணாம்புக் கல்லாலான கட்டடத்தை அகற்றி வைரக்கல்லால் திருப்பணி வேலைகளையும் மேற்கொண்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது. இராசா விதானையாருக்குப் பின்னர் அவரின் சகோதரன் இ.குமாரவேலு விதானையார் ஆலய நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நடத்தியதோடு நித்திய நைமித்தியக் கிரியைகளைளும் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு உதவினார். ஊர் பொது மக்களின் ஒத்துழைப்புடன் புதிய சித்திரத்தேரையும் உருவாக்கினார். புதிய சித்திரத்தேரை பிரபல சிற்பாச்சாரி கந்தசாமி தலைமையிலான குழுவினர் வடிவமைத்தனர்.

இந்தக் குழுவில் புதுவை இரத்தினதுரை உட்பட இளம் தலைமுறை சிற்பாச்சாரிகளும் உள்ளடங்கி இருந்தனர்.

1942ஆம் ஆண்டு ஆலய உற்சவத்தில் இடம்பெற்ற வாணவேடிக்கை ஒன்றின்போது (ஐந்தாம் திருவிழா) ஆலயத்தின் ஒரு பகுதியில் தீப்பிடித்து விட்டது. தீ அணைக்கப்பட்டது. அடுத்த நாள் ஆலயத்தில் தீ பிடித்து எரிந்த பகுதி புனரமைப்புச் செய்யப்பட்டது ஒரே தினத்தில் ஐந்து திருவிழாக்களும் நடத்தப்பட்டு உரிய காலத்தில் தேர் தீர்த்தத் திருவிழாக்களும் நடத்தப்பட்டமை விநாயகரின் அருள் வியாபகத்தினால் ஆகும்.

1955 ஆம் ஆண்டு ஆலய பிரமாண அளவுக்கு அமைய மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த மூல விக்கிரகம் மாற்றப்பட்டு புதிய விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஆலயத்தின் தர்ம கார்த்தாகவாக இருந்த இ.குமாரவடிவேலு விதானையாரும் பிரதம பூசகராக இருந்த ஆகம வித்தகர் சிவஸ்ரீ. ச.குமாரசுவாமி குருக்களும் இணைந்து இதனை மேற்கொண்டனர். இந்த வகையில் அழுது தன்னை அறிமுகம் செய்த மூலவிக்கிரகம் மாடத்தில் தாபகம் செய்யப்பட்டு பூசை வழிபாடு செய்யப்பட்டு வருகின்றது.

1967 ஆம் ஆண்டு ஆலயப்பிரவேசத்தை தொடர்ந்து ஏற்பட்ட அசம்பாவிதத்தை அடுத்து ஆலயத்தில் நித்திய பூசைகள் மட்டும் நடைபெற்ற நிலையில், நைமித்திய கிரியைகள் தடைப்பட்டன. ஆலய முன் கதவுகள் மூடப்பட்டு உட்பிரகார வழிபாட்டுக்கு முழுமையாகத் தடை விதிக்கப்பட்டிருந்தது. பூசகர்கள் மட்டும் உள்ளே சென்று நித்திய பூசையை மேற்கொண்டு வந்தனர். இந்த வகையில் 18 வருடங்கள் பிள்ளையார் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

18 வருடங்களின் பின்னர் தமிழ்த் தேசியம் மற்றும் இன விடுதலை உணர்வு மேலோங்கியிருந்த காலப் பகுதியில் இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்ட கருத்துமாற்றம் விடுதலைப் போராளிகளின் வழிப்படுத்தலுக்கு அமைய ஆலயமுன்றலில் நடைபெற்ற ஆலய வழிபாடு தொடர்பான கருத்துப் பரிமாறலில் ஆலயம் அடியவர்களின் வழிபாட்டுக்கு திறந்துவிடப்படல், ஆலயத் திருப்பணியை முழுமையாக மேற்கொள்ளல் என்ற தீர்மானத்துடன் ஆலய பரிபாலான சபையின் தலைவராக கு.விக்கினராசா (விக்கினம்) தெரிவு செய்யப்பட்டார். ஆலயம் அடியவர்களின் வழிபாட்டுக்கு திறந்து விடப்பட்டது.

ஊர் பொதுமக்கள் வழிபடுவோர் மற்றும் பேராளிகளின் முழுமையான ஆதரவுடன் தெரிவான விக்கினராசா தலைமையிலான பரி

**ஞானி**

பாலான சபையினர் தீர்மானத்துக்கு அனைவரும் கைகொடுத்து உதவினர். திருப்பணி சேவைகளில் ஒவ்வொரு பகுதியையும் தனிப்பட்ட சிலரும் தனித்தனி குழுவினரும் தாம் செய்து முடிப்பதாகப் பொறுப்பேற்றனர். திருப்பணி வேளைகளில் ஒவ்வொரு ஊரும் திரண்டு ஒரு மனதாக திருப்பணி வேலைகளுக்கு நிதி உதவியையும்; சிரமதான அடிப்படையில் உடல் உழைப்பையும் வழங்கி உதவினர். உலவிக்குளத்தான் அருள் வியாபகத்தால் திட்டமிட்ட கால வரையறைக்குள்ளே திருப்பலி வேலைகள் முழுமையாக முடிவடைந்தது. 1986-09.14 ஆம் திகதி மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலவுகளை ஈடுசெய்ய அரசு திணிக்கிறது வரிச் சுமையை

கொழும்பு,ஜன.19

அரசு அத்தியாவசிய பண்டங்கள் சிலவற்றுக்கான இறக்குமதி தீர்வையை அவசரமாக அதிகரித்து, மக்கள் மீது வரிச் சுமையை திணித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க குற்றஞ் சாட்டியுள்ளார்.

அரசின் செலவுகளை ஈடுசெய்யும் நோக்கில் சாதாரண மக்களின் மீது வரிச் சுமை திணிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.



அதிகளவான அமைச்சர்கள் மற்றும் ஆலோசகர்களைப் பராமரிக்கும் காரணத்தினால் அரசு அதிக செலவுகளை எதிர்நோக்கி வருகின்றது

இந்த நடவடிக்கையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் கூறினார்.

அதிகளவான அமைச்சர்கள் மற்றும் ஆலோசகர்களைப் பராமரிக்கும் காரணத்தினால் அரசு அதிக செலவுகளை எதிர்நோக்கி வருகின்றது என்று அவர் தெரிவித்தார்.

இந்தச் செலவுகளை ஈடு செய்ய அத்தியாவசிய பொருள்களின் விலைகளை உயர்த்துவது முறையற்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## இலங்கைக் கடலில் சீனா ஆய்வு; திடீரென நிராகரித்தது கொழும்பு

கொழும்பு,ஜன.19

இலங்கைக் கடலில் மூழ்கிய சீனக் கப்பல்களைக் கண்டறிந்து ஆய்வு செய்ய சீனத் தொல்பொருள் விஞ்ஞானக் கல்லூரியினால் முன் வைக்கப்பட்ட கோரிக்கையை இலங்கைத் தொல்பொருள் ஆய்வு மையம் நிராகரித்துள்ளது.

இலங்கையை அண்மித்த கடல் பிரதேசங்களில் அகழ்வாராய்ச்சி நடத்துவது தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தொல்பொருள் ஆய்வாளர் நாயகம் செனரத்திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் இலங்கையின் பல கடல் பகுதிகளில் அகழ்வாராய்ச்சி யில் ஈடுபடுவது குறித்து சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பேச்சு நடத்தப் பட்டு வந்தது.

இலங்கையின் பல கடல் பகுதிகளில் அகழ்வாராய்ச்சியில் ஈடுபடுவது குறித்து சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பேச்சு நடத்தப் பட்டுவந்தது.

இந்த ஒப்பந்தத்தின் சில சரத்துக்கள் தொடர்பில் இலங்கை அதிருப்தி வெளியிட்டுள்ளது.

அகழ்வாராச்சியில் கிடைக்கப்பெறும் பொருள்களில் ஒரு பகுதியை எடுத்துச் செல்லல், அகழ்வாராய்ச்சிக்காக இலங்கைக் கடற்படை கப்பல்களைப் பயன்படுத்தல் போன்ற நிபந்தனைகளுக்கு இலங்கை எதிர்ப்பை வெளியிட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)


## புதையல் தோண்டியோர் பதுளையில் கைது

பதுளை,ஜன.19

பதுளை - பசறை இரண்டாம் கட்டை பகுதியில் புதையல் தோண்ட முயற்சித்த 7 சந்தேகநபர்கள் நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் இரத்தினபுரி, கஹவத்தை, பதுளை மற்றும் பசறை ஆகிய பகுதி களைச் சேர்ந்தவர்கள் என்று பதுளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தநபர்கள் பதுளை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)




பட்டதாரிகளை அரசின் நிரந்தர சேவையில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கோரி இணைந்த மருத்துவம் சார் தொழில் சங்கத்தினர் சுகாதார அமைச்சுக்கு முன்னாள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## 'சீபா' ஒப்பந்தம் குறித்து மார்ச் மாதம் பேச்சு

கொழும்பு, ஜன.19

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் கைச்சாத்திடப்பட உள்ள சீபா ஒப்பந்தம் குறித்து எதிர்வரும் மார்ச் மாதம் பேச்சு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பேச்சில் இரு நாடுகளினதும் வர்த்தக விவகார அமைச்சர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக சீபா ஒப்பந்தம் குறித்து இரண்டு நாடுகளும்பேச்சு நடத்தி வருவதாக இந்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவித்துள்ளார்.

உள்ளூர் வர்த்தகர்களின் எதிர்ப்புக் காரணமாக ஒப்பந்தம் கைச்சாத்திடுவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இந்தியாவுடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் இலங்கை உள்ளூர் உற்பத்தியாளர்களும், சிறு வர்த்தகர்களும் அதிகளவில் பாதிக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும், இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்று இந்தியா தெரிவித்துள்ளது. (ச)

## விபத்தில் மாணவர்கள் காயம்



கொழும்பு,ஜன.19

கல்கிசையில் நேற்றுப் புதன்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை மாணவர்கள் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

பாடசாலைக்கு மாணவர்களை ஏற்றிச்செல்லும் வானும் பஸ்ஸும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ச)

## தனியார் பல்கலைகளை உருவாக்க சட்டமூலம் விரிவுரையாளர்கள் கடும் எதிர்ப்பு

கொழும்பு,ஜன. 19

தனியார் பல்கலைக்கழக உத்தேச சட்ட மூலத்துக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

சட்ட மூலத்துக்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாடு முழுவதும் அடையாள வேலை நிறுத்தப் போராட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

சட்ட மூலத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கல்வித்துறையில் மாற்றங்களை மேற்கொள்ளும்போது அனைத்துத் தரப்பினரின் இணக்கப்பாடு மிகவும் அவசியமானது

தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவது தொடர்பில் சகல விரிவுரையாளர்களின் கருத்துக்களும் கோரப்படவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கல்வித்துறையில் மாற்றங்களை மேற்கொள்ளும் போது அனைத்துத் தரப்பினரின் இணக்கப்பாடும் மிகவும் அவசியமானது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (மற்றொரு செய்தி 6 ஆம் பக்கத்தில்) (ச)

## சுகாதாரப் பரிசோதர் எனக் கூறி பணம் பறிக்கும் வியாபாரம்

கொழும்பு,ஜன.19

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் என்று கூறிக் கொண்டு வர்த்தக நிலையங்களில் பணம் சேகரிக்கும் வியாபாரம் தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கண்டி, குருநாகல் மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் இருந்து அதிக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அந்தச் சங்கத்தின் செயலாளர் செனரத் பண்டார தெரிவித்தார்.

இந்த வியாபாரத்தில் ஈடுபடும் நபர்களைக் கைது செய்து சட்டத்தின்முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ச)

## லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணையாளர்களுக்கு இன்னும் ஏன் கொடுப்பனவு வழங்கவில்லை

### விளக்கம் கேட்கிறது நீதிமன்றம்

கொழும்பு, ஜன.19

முன்னாள் லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணையாளர்கள் இருவருக்கு நாடாளுமன்றினால் அனுமதிக்கப்பட்ட விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படாமை குறித்து விளக்கமளிக்குமாறு சட்டமா அதிபருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் லஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணையாளர்கள் இருவர் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பிரதம நிதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க உள்ளிட்ட மூன்று நீதிபதிகள் குழு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

முன்னாள் ஆணையாளர்களுக்கு 2007 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக விசேட கொடுப்பனவு வழங்குமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளபோதும் திறைசேரியினால் கொடுப்பனவு இன்னும் வழங்கப்படவில்லை.

2007 ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்டத்தின் ஊடாக தமக்கு விசேட கொடுப்பனவு வழங்குமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ள போதும் திறைசேரியினால் கொடுப்பனவு இன்னும்வழங்கப்படவில்லை என்று ஆணையாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தக் கொடுப்பனவு வழங்கப்படாமை தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என்று குறித்த இரு முன்னாள் ஆணையாளர்களும் தமது மனுவில் தெரிவித்துள்ளனர்.

இந்த மனுவைப் பரிசீலித்த உயர்நீதிமன்றம் இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் ஜூன் மாதம் 24 ஆம் திகதி விளக்கமளிக்குமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டது. (ச)

## இடம்பெயர்ந்தவர்கள் முஸ்லிம்கள் மட்டுமல்லர்

கொழும்பு,ஜன.19

நீண்ட கால போரினால் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மாத்திரம் இலங்கையில் இடம்பெயர்ந்தவர்கள் அல்லர் என்று கொழும்பிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் தூதரகம் தெரிவித்துள்ளது.

''வடக்கில் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கு யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனமே தடையாக உள்ளது. இதற்கெதிராக அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் வழக்குத் தாக்கல் செய்யும்'' என்று கைத்தொழில் முதலீட்டு அமைச்சர் றிசாட் பதியுதீன் அண்மையில் தெரிவித்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் குறித்த வழிகாட்டல் தத்துவங்களுக்கு அமைய இலங்கையில் இடம்பெயர்ந்தோருக்கான பாதுகாப்பு, மனிதாபிமான உதவி என்பவற்றை வழங்கும் பிரதான பொறுப்பு அரசுக்கு உரியது.

சுமார் 20 வருடங்களுக்கு மேலாக உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கு உதவும் அரசின் முயற்சிகளுக்கு யூ.என்.எச்.சி.ஆர். ஆதரவளித்து வருகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற நீண்ட கால போரினால் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மாத்திரம் இடம்பெயரவில்லை என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும்- என்று தெரிவிப்பட்டுள்ளது. (ச)

## ரணிலிடம் மனு கையளிப்பு

கொழும்பு,ஜன.19

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கம் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் மனு ஒன்றைக் கையளித்துள்ளது.

சிறிகொத்தா கட்சி தலைமையகத்தில் வைத்து நேற்று புதன்கிழமை இந்த மனு கையளிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் நிலவும் பிரச்சினைகள் குறித்து தெளிவுபடுத்தும் வகையில் இந்த மனு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்றில் விவாதித்து ஒரு வாரத்துக்குள் தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக ரணில் விக்கிரமசிங்க மாணவர் சங்கத்திடம் உறுதியளித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

SUZUKI Way of Life!


SUZUKI MARUTI
Count on us

# சுசூக்கி மற்றும் சுசூக்கி மாருதி

# இலவச

## சேவை நிலையம்

# யாழ் மண்ணில்




CAMERON PALE & MEDINA

# 2012 ஜனவரி 21, 22

## றோயல் லுப்ரிகேஷன் சேவை நிலையம்
## K.K.S. வீதி சுன்னாகம், யாழ்ப்பாணம்

- AMW சேவை நிலையத்தில் பயிற்சி பெற்ற நிபுணர்கள் மூலம் உங்கள் வாகனங்களுக்கான இலவச மதிப்பீடு
- விசேட சலுகையின் மூலம் உங்கள் சுசூக்கி மாருதி வாகனங்களை மாற்றிக் கொள்ளலாம்
- அசல் சுசூக்கி மற்றும் சுசூக்கி மாருதி உதிரிப்பாகங்களை அதே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்

பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள் - 0212 241090, 0213 217771, 0776 013568

* நிபந்தனைக்கு உட்படும்

AMW bringing the world to you
An Al-Futtaim group company

அசோசியேட்டட் மோட்டர்வேய்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்

E mail : sales@amwltd.com

Hotline No. : 011 7609609
Also call for genuine spare parts

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




| நகரம் | வானிலை | பகல் | இரவு | காற்று |
|---|---|---|---|---|
| யாழ் | | 28⁰c | 21⁰c | |
| மன் | | 28⁰c | 21⁰c | |
| வவு | | 29⁰c | 27⁰c | |
| முல் | | 27⁰c | 23⁰c | |
| கிளி | | 27⁰c | 23⁰c | |

முதல் மூன்று மாவட்டங்களிலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும். முல்லைத்தீவு, கிளிநொச்சியில் வானம் தெளிவாக இருக்கும்.

### பரிசில் வழங்கல்

தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த 40 பாடசாலைகளில் தரம் ஒன்று வகுப்பில் புதிதாக இணைந்த மாணவர்களுக்கு சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கியினர் விசேட பரிசில்களை வழங்கியுள்ளனர். கால்கோள் விழாவில் 500 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. வங்கியால் சிறுவர் சேமிப்புக் கணக்கான 'ஹப்பன் புந்தி' கணக்குக்கு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (ந-207)

## க.பொ.த உயர்தரப் பெறுபேறு

**யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரி**

வேலாயுதம் அபிரா- 3ஏ, சீனித்தம்பி சுதர்சன்- 2ஏ பி, யோகன் அபிநயா - 2ஏ பி, சிங்கரத்தினம் கனீபா- 2ஏ பி, தம்பிராசா வைஷ்ணவன்- ஏ2 பி, இராஜீதரன் றிஸ்வினா- ஏ 2பி, தர்மலிங்கம் அசோக்- ஏ பி சி, மகேஸ்வரன் கீர்த்தனா- ஏ 2சி, சிவகுருநாதன் குருநீலன்- 3பி, இராமலிங்கம் சுமித்தா- 2பி சி, பாலகிருஷ்ணன் சந்திரிகா- 2பிசி, சிங்கரத்தினம் நிறோஜ்- பி 2சி, தேவதாஸ் மாருதி - பி 2சி, செல்வநாதன் சிந்துசா- பி சி எஸ், செல்வக்குமரன் பிரசாந்தினி- 2சி எஸ், சபாரத்தினம் பிரசீலன்- 2சிஎஸ்.

## தனியார் பஸ்களில் பற்றுச்சீட்டு வழங்கக் கோரிக்கை

நவாலி,ஜன.19

தனியார் சிற்றூர்திகளில் பயணம் செய்வோருக்கு அறவிடும் கட்டணங்களுக்குப் பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினரால் பணிக்கப்பட்டிருந்தும் சில சிற்றூர்திகளில் பற்றுச்சீட்டு வழங்கப்படாமல் முன்னர் அறவிடப்பட்ட அதிக கட்டணத்தையே இன்றும் அறவிடுகின்றார்கள் என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மானிப்பாயிலிருந்து சண்டிலிப்பாய்க்குச் செல்வதற்கு 7 ரூபா கட்டணமாகத் தற்போது அறவிடப்பட்டு பற்றுச்சீட்டும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். ஆனால் சில சிற்றூர்திகளில் பற்றுச்சீட்டு வழங்கும் புத்தகத்தை கையில் வைத்திருந்தும் பற்றுச்சீட்டு வழங்காமல் நீண்ட காலமாக 10 ரூபா பெறப்படுகின்றது.

''இது பற்றி நடத்துநரிடம் கேட்டால் ஏதோ சாக்குப் போக்குச் சொல்கின்றார்கள். மேலும் இது பற்றி கடமை யிலிருக்கும் நேரக் கணிப்பாளரிடம் கேட்ட போதும் அவரது அலுவலகத்தில் பயணிகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள குறைந்த கட்டண விவரங்களைக் காண்பிக்கிறார் என்று தெரிவித்தார் அச்சுவேலியில் இருந்து தொழிலுக்காக நாளாந்தம் யாழ்.நகர் வந்து செல்லும் கிருஷ்ணமூர்த்தி. இப்படியானவர்கள் மீது சங்கத்தின் மூலம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பயணிகள் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-100)

# அரச அலுவலகங்களில் 'ரை' இனிக் கட்டாயம்

வலி வடக்கு, ஜன. 19

யாழ்.மாவட்டத்தில் பணியாற்றும் அரச அலுவலர்கள், இனிமேல் முழுக்கை சட்டை அணிந்து 'ரை' கட்டி அலுவலகத்துக்கு வருவதற்கான நடவடிக்கைகளை யாழ்.அரச அதிபர் மேற்கொண்டுள்ளார்.

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரச அதிபர் காரியாலயங்களில் கடமையாற்றும் பதவி நிலை அலுவலர்கள் மற்றும் மத்திய தர அலுவர்கள் ஆகியோருக்கு சீருடைகள் சம்பந்தமான சுற்றறிக்கை ஒன்று யாழ். மாவட்ட அரச அதிபரினால் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் அரச பதவி நிலை அலுவலர்கள் அரச பிரமாணக் குறிப்பின்படி கழுத்துப்பட்டி 'ரை' முழுக் காற்சட்டை சேட் அணிய வேண்டும். இல்லையேல் யுனிக் கொலர்ச் சேட்டுடன் முழுக் காற்சட்டை அணிய வேண்டும் என்பது விதியாகும். இந்த நடைமுறை யாழ். மாவட்டத்தில் பின்பற்றப்படுவதில்லை.

அமைச்சர்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் கலந்துகொள்ளும் கூட்டங்களில் மட்டும் இந்த நடைமுறை உரிய பதவி நிலை அலுவர்கள் மேற்கொள்ளப் படுகின்றபோதிலும் நாளாந்தக் கடமையின்போது இது பின்பற்றப்படுவதில்லை.

இந்த நிலையில் தற்போது இதனை சீர்செய்யும் முகமாக யாழ். மாவட்ட அரசஅதிபர்பதவிநிலைஅலுவலர்கள் மற்றும் இடைத்தர முகாமைத்துவ அலுவலர்களின் சீருடை விடயத்தில் அக்கறை காட்டுகிறார்.

இந்த நடைமுறை பின்பற்றப்படுமாக இருந்தால் கூடியளவுக்கு பொது மக்கள் அரச அலுவலகங்களில் அலுவலர்களைத் தெரியாது ஏமாற்றம் அடையும் நிலைமை தவிர்க்கப்படும் அத்துடன் ஊழியர்கள் மத்தியில் ஓர் ஒழுங்கும் கூடக் காணப்பட முடியும் என முப்பது வருடங்களுக்கு முன்னர் அரச கடமையில் இணைந்து கொண்டவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

தற்போது அதிகாரி யார்? சிற்றூழியர் யார்? என்று தெரியாத நிலையில் பல இடங்களில் பொதுமக்கள் ஏமாற்றப்பட்டும் கஸ்டங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.(ந- 86)

## நாடாளுமன்ற செயலாளராக காஞ்சன ?

கொழும்பு, ஜன.19

நாடாளுமன்றச்செயலாளர் நாயகப் பதவிக்கு சட்டத்தரணி காஞ்சன ரத்வத்தையை நியமிப்பதற்கு அரசு ஆலோசித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது நாடாளுமன்றச் செயலாளர் நாயகமாக பதவி வகித்துவரும் தம்மிக்க கித்துல்கொட அடுத்த மாதம் பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார் . இதனால் அவரது இடத்துக்கு காஞ்சன ரத்வத்தையை நியமிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

செயலாளர் நாயகம் பதவிக்கு ஜனாதிபதியினால் சிபார்சு செய்யப்படும் பெயர் பின்னர் நாடாளுமன்றச் சபை மூலம் அங்கிகரிக்கப்படுவது வழமையாகும்.

இதற்கமைய எதிர்வரும் தினங்களில் நாடாளுமன்றச் சபை கூடி இது தொடர்பான தீர்மானமொன்றை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சட்டத்தரணியான காஞ்சன ரத்வத்தை இலங்கை தர நிர்ணய நிறுவனம் மற்றும் கப்பல் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் தலைவராகச் செயலாற்றி வருகிறார். அவர் சில காலம் மின் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றியுள்ளார். (த-22)

உங்கள் கல்வித்தகைமையை அதிகரித்திட
BE A 'CERTIFIED MEDICAL ASSISTANT'
பயிற்சி நெறி ஆரம்பம் : 21/01/2012
A pathway for Nursing/Medical Field
கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்.
மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி (பிரிவு-06
CMA US Curriculum
Lava Hospitals
வேலைவாய்ப்புடனான கற்கை நெறி.
What's Next ?



உங்கள் வாழ்வு மேம்பட கற்பீர்
(O/L ஏதாவது நான்கு பாடங்களில் சித்தியுடன் கற்கலாம்.)
MBBS வைத்திய விரிவுரையாளர்களால் பிரபல வைத்தியசாலையில் செயல்முறையுடன் கற்பிக்கப்பட்டு தொழில் வழங்கப்படும் மருத்துவ பயிற்சி நெறி.
City & Guilds Qualified
பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன
Knowledge Universe
College of Business and IT
Tel: 0776458253 |# 75,Temple Road,Jaffna | www.kugroup.info

வேலை ஆள்கள் தேவை
யாழ் நகரில் இயங்கும் நிறுவனத்திற்கு கோண் பிஸ்கட் தயாரிப்பவர்கள், பொதி செய்பவர்கள், உதவியாளர்கள் ஆகியோர் தேவை
T.P. : 077 6374544 (13211)(45-6-9)

தவறிவிட்டது
கைதடி தெற்கு, கைதடி எனும் முகவரியை சேர்ந்த கணேசன் மனோகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (752234353V) கடந்த 12.12.2011 அன்று வள்ளிபுனத்திற்கும் விசுவமடுவிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள 077 6276123 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் (13260)(45-6-9)

கடை வாடகைக்கு விடப்படும்
இல. 615 பரந்தன் வீதி தருமபுரம், தருமபுரம் மகா வித்தியாலயத்திற்கு அருகில் 16 X 32 அடியில் 2 கடைகளும் 11 X 32 அடியில் ஒரு கடையும் கொண்ட கடைத் தொகுதி வாடகைக்கு விடப்படும். அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு முன்னுரிமை
தொடர்புகளுக்கு: 077 0579536 (13099(45-9-6)


வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி
பழைய இசூசு லொறி உடற்கோப்பு விற்பனை
எது சங்கத்தின் இசூசு லொறியின் கழற்றிய பழைய உடற்கோப்பு உள்ளது தேவையானவர்கள் சுய விண்ணப் படிவத்தில் தங்கள் கேள்விக் கோரிக்கைகளைக் கீழ்க்காண் முகவரிக்கு அனுப்ப லாம். மேலதிக விவரங்களுக்கு 0213213020 தொலைபேசிக்குத் தொடர்பு கொள்ளவும். விண்ணப்ப முடிவு திகதி: 27.01.2012 ஆகும்.
பொதுமுகாமையாளர்,
வலி.கிழக்கு தென்பகுதி
ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.
2012.01.16 (சி/7860)(2-6-9)

45 ஆம் நாள் நினைவஞ்சலி




தோற்றம்
05★12★1993
மறைவு
06★12★2011
நேசராசா
மீரா
வாழவென்று நினைத்து ஓடிச்சென்றாயம்மா
அன்பு மகனைப் பெற்றெடுத்தாயம்மா
உன் கணவன் சொல் கேட்டு உறவுகளை வெறுத்தாயம்மா
உன் பிஞ்சுமுகம் நெஞ்சினிலே நிலை கொள்ளுதம்மா
உன் பிரிவு தாங்காமல் உறவுகள் கலங்குதம்மா
நாற்பத்தைந்து நாள் ஓடிச் சென்றதம்மா
உன் மரணத்தின் மர்மம் புரியலையம்மா
உன் பிரிவால் துயருற்றிருக்கும் தந்தை, சகோதரர்கள், உறவினர்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
கிருஸ்ணர் கோயிலடி,
சுதுமலை தெற்கு, சாவற்கட்டு. நேசராசா (தேவன் - தந்தை)
(13183)(2-6-9)

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஓராண்டு நினைவஞ்சலி
மலர்வு
07 ★ 04 ★ 1946
உதிர்வு
31 ★ 12 ★ 2010



சின்னத்துரை கமலநாதன்
திதி: ஏகாதசி (19.01.2012)
அன்னைபோல் எமைக் காத்த அன்புத் தெய்வமே
ஓராண்டென்ன பல்லாயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உம் நினைவுகள் எம்மை விட்டகலாது
அரியாலை. குடும்பத்தினர்.
(13131)(2-6-9)

வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்
மண்மகிழ : 07-01-1955
கண் நெகிழ : 10-12-2011
அமரர்
இராசதுரை சுகுமார்
(பாபு)



கார்த்திகைத் தீபமதில் கணக்கிட்டான் காலனுனக்கு என்றும் நீ கார்த்திகைத் தீபமாய் எம்முடனே.
கடந்த 10.12.2011 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தந்தையின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (19.01.2012) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந் திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அல்லாரை வடக்கு,
மீசாலை. (13208)(6,9,10) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** கணவன், மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும் நாள். எதிர்பாராத சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கலாம். எதிர்ப்புகளை வெற்றிகரமாகச் சமாளிப்பீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். வெளியூர் பயணங்கள் செல்லும் சிலருக்கு உதவிகரமாக இருப்பீர்கள்.

**இடபம்:** அயலாரின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். உறவினர்கள் வகையில் ஏற்பட்ட மனக்கசப்புகள் தீர்ந்து பாசம் அதிகரிக்கும். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். சுயநலமின்றி சில பொது விடயங்களில் ஈடுபடுவீர்கள். மாலை நேரத்தில் வீட்டுக்குத் தேவையான பொருள் ஒன்றை வாங்குவீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

**மிதுனம்:** வீட்டில் சில மாற்றங்களைச் செய்யமுற்படுவீர்கள். முக்கியமான கோயில்களுக்குச் சென்று வழிபாடு நடத்தலாம். வேலையாள்களால் சிறு தொல்லைகளுக்கு ஆள்படலாம். வயிறு தொடர்பான உபாதைகளைத் தவிர்க்க உணவில் கவனம் அவசியம். சில வேலைகளை அதிக சிரமப்பட்டு முடிக்க நேரிடலாம்.

**கடகம்:** உறவினர்கள் தொடர்பான விவகாரங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். எந்த வேலையையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்துச் செய்ய வேண்டும். வெளியூர் பயணங்களுக்காக கணிசமான செலவு செய்யலாம். வர்த்தகர்கள் கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கை அவசியம். நன்றி மறந்தவர்களை நினைத்து கவலை அடைவீர்கள்.

**சிங்கம்:** எந்தப் பணியையும் தாமதமின்றி, சுறுசுறுப்பாகச் செய்து முடிப்பீர்கள். சேமிப்பில் நாட்டம் செல்லும். வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். நண்பர்கள் மூலம் நல்ல வாய்ப்புகள் தேடி வரலாம். விடாமுயற்சி ஒன்றுக்கு வெற்றி கிடைக்கலாம். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றுக்காக அலைவதால் படபடப்பு, பதற்றம் உண்டாகும்.

**கன்னி:** மனக்குழப்பங்கள் அதிகரிக்கலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் சம்பவங்கள் நடக்கலாம். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம்.

**துலாம்:** புகழ், கௌரவம் அதிகரிக்கும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். உறவினர்கள் உங்களிடம் அன்பாக நடந்து கொள்வர். குழந்தைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். சூரிய வழிபாட்டின் மூலம் சுகம், சந்தோஷம் கூடும்.

**விருச்சிகம்:** நீங்களே சிரமத்தில் இருக்கும்போது, சிலர் உங்களிடம் உதவி கேட்டு தொந்தரவு கொடுக்கலாம். உடல் நலம் பற்றிய கவலைகள் அதிகரிக்கும். விருந்தினர்கள் வருகையால் நீங்கள் திட்டமிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல் போகலாம்.

**தனுசு:** பொருளாதார நிலைமையில் மேம்பாடு காணப்படும். யாருடைய பணமாவது உங்களின் கைகளில் புரளலாம். வீட்டில் வசதி, வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். பெண்கள் பெற்றோர் வழியில் உதவிகளைப் பெறலாம். பெண்கள், உறவினர்கள் தொடர்பான விடயம் பற்றி சிலருடன் விவாதிப்பீர்கள். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

**மகரம்:** வியாபாரிகள் வளமான சூழ்நிலையைக் காண்பர். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். கடனுதவி, பொருள் உதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. உங்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த ஒருவரைச் சந்திப்பீர்கள். உங்களுக்கு வேண்டிய ஒன்றை சாதிப்பதற்காக மற்றவர்களை நச்சரிப்பீர்கள்.

**கும்பம்:** தடைபட்ட காரியம் ஒன்று இன்று வெற்றிகரமாக நடக்கலாம். வியாபார நிமித்தம் சிலர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். புதிய முதலீடுகள் பற்றிய சிந்தனைகள் அதிகரிக்கும். பெண்கள் குடும்பத்தினரின் பாராட்டைப் பெறுவர். சில வேலைக்காக நீங்கள் மட்டுமின்றி, மற்றவர்களையும் கூட்டிக் கொண்டு அலையலாம். நாவன்மை கூடும்.

**மீனம்:** குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். உங்களுக்கு வேண்டிய ஒருவர் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம். பொருள் ஒன்றை வாங்க கணிசமான பணத்தைச் செலவிடலாம். சிலருக்காக வெளியிடங்களில் நீண்ட நேரம் காத்திருக்கலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரைத் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு, அது முடியாமல் போகலாம்.

**நாளை**

தை 06 வெள்ளிக்கிழமை 20.01.2012
திதி:துவாதசி மா. 05.23 வரை
நட்சத்திரம்: கேட்டை மா. 05.54 வரை
சுபநேரம்: 06.35 - 08.05 வரை,
ராகு காலம்: 11.05- 12.35 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 3 | 9 | | 2 | 5 | | 6 |
| 9 | 1 | | | 3 | | | | |
| | 7 | | 1 | | 4 | 8 | 9 | |
| | | | | | 5 | | 6 | |
| 1 | | 8 | | | | 2 | | 7 |
| | 2 | | 7 | | | | | |
| | 6 | 1 | 4 | | 8 | | 2 | |
| | | | | 1 | | | 8 | 9 |
| 5 | | 9 | 2 | | 3 | 4 | | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்



## குருக்கட்டு இளையதம்பி செல்வத்துரை

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், கல்விக் கந்தோர், யாழ்ப்பானம், கொழும்பு, வவுனியா, மன்னார், காலி, யாழ்ப்பாணக் கச்சேரி, சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் காரியாலயம்)

துன்னாலை, குடவத்தையைப் பிறப்பிடமாகவும், சரசாலை தெற்கை புகுந்த இடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய இளையதம்பி செல்வத்துரை (16.01.2012) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராஜா வாத்தியார் - லக்ஸ்மி அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், உமாதேவியின் (முன்னாள் ஆசிரியை, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) பாசமிகு கணவரும், ஸ்ரீஸ்கந்தராஜா, தேவவதனி, மலர்விழி, குகன், உருத்திரப்பிரியா, ரதிப்பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தராணி, நாகதேவன், நாகேஸ்வரன், ரவிதாஸன் ஆகியோரின் அன்பு மாமனும், சரண்யா, ராஜ்வட்ஷன், தாட்சாயினி, மயூரி, ஷாம்பவி, சேந்தன், உமையாள், லக்ஸ்மி, சுரேஸ்பாபு, நிஸாந்தன், சகத்திரன், பிரியன், பிரசாந்தி ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், ஏரம்பமூர்த்தி, சின்னத்துரை ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிளை- செல்லம்மா, கமலாதேவி மற்றும் பொன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (18.01.2012) கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (19.01.2012) வியாழக்கிழமை தகனக்கிரியைக்காக கல்சிசை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(சி/2915 (6-9- 45)


# இன்று முதல் கிளிநொச்சி நகரிலும் CSC

கிளிநொச்சி நகரில் கொழும்பை தலைமையகமாகக் கொண்ட சிஎஸ்சி-ஏசியன் கொம்ப்யூட்டர்ஸின் கிளை நிறுவனம் இன்று (வியாழன்) காலை 9.00 மணி சுபநேரத்தில் ஆரம்பிக்கப்படுகின்றது என்பதை கல்வியாளர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் அறியத்தருகின்றோம். இக்கல்வி நிலையத்தால் வழங்கப்படும் அனைத்து பாடநெறிகளுக்கும் 65% தொடக்கம் 75% வரையான கட்டணக்கழிவு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். Certificate & Diploma Courses

MS Office Application
Tally Accounting
Desktop Publishing
Hardware & Networking
Java Programming
Office Automation
Web Programming
Internet & E-mail

25 வருட

Video Production
Digital Pre-Press
Web Animation
Digital Film Making
Cartoon Animation
3D Studio Max
Professional Graphic Design
Adobe Application

100% Practical Training

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

45, அம்மன் கோவில் வீதி
ஆனந்தபுரம், கிளிநொச்சி
T.P - 021-2285644



**கடை விற்பனைக்கு உண்டு**

கொக்குவில்
சந்திக்கு அருகில்
கே.கே.எஸ். றோட்.
தொடர்பு:
077 9985766,
021 2240306

**வாடகைக்கு**

அலுமினிய
பொடி றக்
(கன்ரர்) நாளாந்த.
மாதாந்த வாடகைக்கு
விடப்படும்
10/7 தினம்
T.P.: 07 78448146


# ஆத்மசாந்தி கிரியைகளும் மதியபோசன நிகழ்வும்



03.01.2012 இல்
சிவபதமடைந்த இணுவில்
நாதஸ்வர வித்துவான்
**கோவிந்தசாமி**
**வாகீஸ்வரன்** அவர்களின்
ஆத்மசாந்திக் கிரியைகளும்,
மதியபோசன நிகழ்வும் இன்று
(19.01.2012) வியாழக்கிழமை
அன்னாரின் கந்தசாமி கோயிலடி இணுவில்
இல்லத்தில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வுகளில் கலந்து மதிய போசனத்திலும்
பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள்
யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தசாமி கோயிலடி,
இணுவில் மேற்கு, இணுவில். குடும்பத்தினர்.

(13132)(2-6-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுங்கியிருக்கும் பச்சைக் குழி

**யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் காங்கேசன்துறை வவுனியா வரையான புகையிரதப் பாதை புனரமைக்கப்படும் சமயத்திலாவது இந்த டெங்கு உண்டாக்கக் கூடிய கழிவுக் குழிகளுக்கும் தீர்வு உரியவர்களினால் எட்டப்படுமா ?**


யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்கு முன்னால் உள்ள கழிவு அகற்றும் மிகப் பெரிய குழி அந்தப் பகுதியில் வாழும் பொது மக்களுக்குப் பெரும் இடையூறு விளைவிப்பதாக உள்ளது. இதிலிருந்து விடிவு கிடைக்குமா? என அந்தப் பகுதிப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில்டெங்கு ஒழிப்பு நடவடிக்கை விரைவு படுத்தப்பட்டுள்ள இந்த வேளையில் டெங்கு அபாயம் கூடிய பகுதியாக இந்தப் பகுதி காணப்படுகின்றது.

பொதுமக்கள் அதிகம் செறிந்து வாழும் இந்தப் பகுதியில், குறிப்பாக புகையிரத நிலையச் சுற்றாடலில் இந்தக் கழிவு அகற்றும் குழிகளால் டெங்கு அபாயம் பெரிதும் காணப்படுவதுடன் அதனையிட்டு யாரும் கவனம் செலுத்துவதாகவும் தெரியவில்லை.

யாழ்ப்பாணம் மாநகர சபையோ அன்றி சுகாதாரத் திணைக்களமோ கூட இதனையிட்டு கவனம் செலுத்துவதாக இல்லை. குறிப்பாக புகையிரதத் திணைக்களத்துக்குச் சொந்தமான பகுதியில் பற்றைகள் நிறைந்த இடத்திலும் இந்தக் குழிகள் காணப்படுகின்றன.



அழுக்குப் பொருள்கள் கழிவு பிளாஸ்ரிக் பொருள்கள் என்பவற்றைக் கொண்டதாக இந்தக் குழிகளில் நீர் நிறைந்தும் காணப்படுகின்றது. பார்வைக்கு இந்தக்குழிகள் இருக்கும் இடம் யாருக்கும் தெரியாதவாறு கட்டுகள் உடைக்கப்பட்டு நிலத்துடன் நிலமாகக் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் காங்கேசன்துறை வவுனியா வரையான புகையிரதப் பாதை புனரமைக்கும் பணிகள் நடைபெறும் சமயத்திலாவது இந்த டெங்கு உண்டாக்கக் கூடிய கழிவுக் குழிகளுக்கும் தீர்வு உரியவர்களினால் எட்டப்படுமா ? என அந்தப் பகுதியில் வாழும் மக்கள் கவலையுடன் கேட்கின்றனர். (ந-86)

## வீதி புனரமைப்பு

கொழும்புத்துறை, ஜன. 19

கொழும்புத்துறை ஆனந்தன் வடலி வீதியை 'காப்பெற்' வீதியாகப் புனரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஆரம்பக் கட்டப் பணியாக அளவீட்டுக் குறியீடுகள் இடப்பட்டு வருகின்றன.

கொழும்புத்துறை துண்டிச் சந்தியில் இருந்து செம்மணி வீதியில் எப்போதுமே அதிகளவான வாகனப் போக்குவரத்து இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (ந-135)

## மெய்யுணர்வைப் பெறுதலும் மனித மேம்பாடும்

மனிதப் பிறவி என்பது ஆதர்சத்தை நிலைநாட்டத் தேவையானது. இன்றைய மனிதன் உள்ளுறையும் தெய்வீகத்தை மறந்துவிட்டு வாழ்க்கை நடத்துகிறான். மனித உயர்குணம் மறக்கப்பட்டு மிருக வாழ்க்கை வாழ்கிறான். ஏனெனில் அவனுள் கோபம், காமம், லோபம், பேராசை போன்ற தீய குணங்கள் நிறைந்திருக்கின்றன. மனித வாழ்க்கை என்பது மிகவும் விலைமதிப்பானது.

உள்ளுறை தெய்வீகம் அதனையும் விட உயர்ந்தது. இன்றைய மனித சமுதாயம் சில கடினமான காலத்தைக் கடந்து கொண்டிருக்கிறது. ஏனெனில் உள்ளுறை தெய்வீகத்தின் புனிதத்துவம் புரிந்து கொள்ளப்படாததுதான் காரணம்.



**சாயி சிந்தனை**

# பெரிய புராணம் காட்டும் வாழ்வியல் கருத்தரங்கும் கலந்துரையாடலும்

சுன்னாகம்,ஜன.19

பெரியபுராணம் காட்டும் வாழ்வியல் என்ற தலைப்பில் அமைந்த கருத்தரங்கும் கருத்தாடலும் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் (தியாகி அறக் கட்டளை முன்பாக) யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

சுதுமலை புகழ் கல்வி நிறுவன ஆதரவுடன் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் தொடக்கவுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் வழங்குவார்.

'திருநாவுக்கரசு நாயனார் புராணக் கட்டமைப்பு' என்ற தலைப்பில் யாழ். பல் கலைக் கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் சுகந்தினி ஸ்ரீமுரளிதரனும் 'திருநாவுக்கரசு நாயனாரின் சமயப் பணிகள்' என்ற தலைப்பில் மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியர் ந.சத்தியவேந்தனும் கருத்துரை வழங்குவர்.

சபையோரின் கருத்துக்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், சரவணை நாகேஸ்வரி வித்தியாலய ஆசிரியர் கு. பாலசண்முகன், சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் ஆகியோர் கருத்தாடல் இணைப்பாளர்களாகக் கலந்து கொள்வர்.

இளைய சமூகத்தினருக்குச் சமயக் கருத்துக்கள் மீதான ஆர்வத்தை ஊட்டும் வகையிலும், உயர்தரம் மற்றும் பட்டப்படிப்புக்களைத் தொடரும் மாணவர்களுக்கு பொருத்தமான வகையிலும் இந்தக் கருத்தரங்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாக இதன் ஒழுங்கமைப்பாளர்களான பேராசிரியர் அ.சண்முகதாஸ், விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோர் அறிவித்துள்ளனர். (ந-38)

## "நுளம்பை ஒழிக்க வாருங்கள்"

தென்மராட்சி, ஜன.19

தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தை அனுஷ்டிக்க மக்களின் பங்களிப்புக்கு ஒலிபெருக்கி மூலம் சாவகச்சேரி நகர சபையினர் அழைப்பு விடுத்தனர். நேற்றும் நாளையும் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதாரப் பகுதியினர், பொலிஸார், நகர சபையினர் ஆகியோர் இணைந்து தேசிய நுளம்பு ஒழிப்பு வார செயற்பாடுகளை மேற்கொள்ள இன்று வீடு வீடாக வருகை தரவுள்ளனர். இந்தச் செயற்பாட்டுக்கு பங்களிக்குமாறே இந்த அழைப்பு விடுக்கப்பட்டது. (ந-207)


## கண்ணீர் அஞ்சலி



எமது கோயிலின் முன்னாள் பிரதமகுரு காலஞ்சென்ற சுவாமிநாத குமாரசாமிக் குருக்களது மருமகள்


**நித்தியானந்த சர்மா சரோஜினிதேவி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய நீர்வேலி கந்தப்பெருமானை வேண்டுகின்றோம்.

நீர்வேலி கந்தசுவாமி கோயில் பரிபாலனசபை

(13210)(6,9,45)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் விநாசித்தம்பி சோமசுந்தரம்**

(கோட்டடிச் சந்தி முன்னாள் பிரபல மரக்காலை உரிமையாளரும், ஸ்தாபகர் சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.)

அன்னை மடியில்: 09.04.1940 சிவனடியில்: 19.01.2006

திதி: அபரபக்க ஏகாதசி 19.01.2012

ஆசையாய் எம்மைப் பெற்று வளர்த்து, சிறப்பாய்
அறிவும், பண்பும் புகட்டி, வளமுடன்
வாழ வைத்த எங்கள் அப்பாவே!
தெய்வத்துள் நீங்கள் நிறைந்து விட்டாலும்
வையத்துள் வாழும் நாங்கள் நித்தமும்
நினைந்தே வாழ்வோம் அப்பா!
தெய்வம் போல் துணையாய் நின்று
நாளெல்லாம் எங்களைக் காப்பீர்கள் அப்பா!
எங்கள் தெய்வத்தின் ஆத்மா
சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்
நிமலன் திருவடியில் நீங்கள்
சேர்ந்து வாழ வேண்டுகின்றோம்.

D 1/1, சென்ரல் றோட், கொழும்பு - 12,
119, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்

(13257)(2-6-9)

## பெண் வேலையாள்கள் தேவை

551/1A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் புதிதாக இயங்கவுள்ள புத்தகக் கடைக்கும், அழகு நிலையத்திற்கும் பெண் வேலையாள்கள் தேவை

தொடர்பு: 0776200727, 077 717 9494

## சிங்கள வகுப்புக்கள்

பல்கலைக்கழக மாணவர்கள், உத்தியோகத்தர்கள், உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான சிங்கள வகுப்புக்கான புதிய பிரிவு ஆரம்பமாகின்றது.

ஆசிரியர் : K.R.சூரி

நேரம் : 3 P.m - 4.30 P.m சனி, ஞாயிறு

யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனம்
இல. 92/1, சேர். பொன். இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
(பல்கலைக்கழக கலட்டிச் சந்திக் அருகில்)
T.P. 021 5670345 Email: Jtiedu @ gmail. Com

## விசேட பொதுக் கூட்டம் - 2012

சாவகச்சேரி கால்நடை
வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்
(வ/து)

காலம்:
28.01.2012 சனிக்கிழமை
காலை 9.30 மணி

இடம்:
தென்மராட்சி பிரதேச செயலக
கேட்போர் மண்டபம்

அங்கத்தவர்கள் அனைவரும்
வருகை தரவும்

செ. சுப்பிரமணியம்
செயலாளர்

[illegible]
தலைவர்

## நன்றி கூறுகின்றோம்



எங்களின் நன்மை கருதி 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரதேச சபையினால் பணிக்கப்பட்ட சந்தை மேற்பார்வையாளர்

**தே.பகீரதன்**

சந்தையின் நிர்வாக நடவடிக்கைகளை சரியான முறையிலும், ஒழுங்காகவும் மேற்கொண்டமைக்காக அவர்களுக்கு நன்றி கூறுவதுடன், அவருடைய பணி மேலும் தொடரவேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மருதனார் மடம்
பொதுச்சந்தை வியாபாரிகள்.

(13258) (6,9,10)

## Vacancies

நல்லூர், யாழ்.நகர், சாவகச்சேரி, நெல்லியடி கிளைகளில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- Assist. Centre Manager - Male/ Female
- Course Counselor - Female
- Customer Relation Officer - Female
- English Language Lecturer - Male / Female
- Multimedia & Tally Lecturer - Male / Female
- Accounts Assistant - Male / Female

நேரடியாக, தபால், இமெயில் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்

**ASIAN COMPUTER EDUCATION**

#2G, Stanley Road, Jaffna.

e-mail : asianedu@dialogsl.net


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாடு ஏல விற்பனைக்கு

இடம்: தனங்களப்பு, அறுகுவெளி
காலம்: ஏற்கனவே அறிவித்ததன் பிரகாரம் ஒவ்வொரு வியாழக்கிழமையும், திங்கட் கிழமையும், மு.ப.10 மணி

சிற்றம்பலம் துரைராஜா
தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.

(13264) (45-6-9)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்
# பொது அறிவித்தல் 2012

மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம்,
பண்டத்தரிப்பு பட்டினம்,
பண்டத்தரிப்பு கிராமம்

### 01.ஆதனவரி பற்றிய அறிவித்தல் - 2012

வரியிறுப்பாளர்களுக்கு,

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 141வது பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி தற்போதைய வருடாந்த மதிப்பீட்டின் (10%) 2012ஆம் ஆண்டுக்கான ஆதனவரி செலுத்தப்பட வேண்டும். ஆண்டு முழுவதற்கு முரிய ஆதனவரியை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோருக்கு அவ்வருடத் திற்கான மொத்த வரியில் 10% கழிவும் ஒவ்வொரு கந்தாயங்களுக்குரிய வரியை அந்தந்தக்கந்தாயத்தின் முதல் மாத இறுதிநாளுக்கு முன் செலுத்துவோருக்கு 05% கழிவும் வழங்கப்படும்.

ஆதன வரி மார்ச் 31, ஜூன் 30, செப்ரெம்பர் 30, டிசெம்பர் 31ஆம் திகதி களுக்கு முன்பும் செலுத்தப்படல் வேண்டும்.

தவறின் வசிப்பிடங்கள், வெற்றுக்காணிகளுக்கு 15% உம் வியாபார நோக்கங் களுக்காக பாவிக்கப்படும் ஆதனங்களுக்கு 20% உம் விறாந்து கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரியை 31.01.2012 ஆம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் நிலுவையின்றி செலுத்தி வரிக் கழிவுகளை பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். மேலும் எமது சபை எல்லைக்குள் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து சோலைவரிப் பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களு டன் தொடர்பு கொண்டு பெயர்மாற்றத்தினை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

### 02. துவிச்சக்கர வண்டி, வளர்ப்பு நாய் உரிமம் பெறல் -2012

2012ஆம் ஆண்டு துவிச்சக்கர வண்டி, வளர்ப்பு நாய்களுக்கான உரிமத்தை பங்குனி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### 03. வீடமைப்பு நகர அபிவிருத்தி கட்டளைச்சட்ட பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்

03.01 வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச,தனியார் கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள், குழாய்க் கிணறுகள், கிணறுகள் என்பவற்றை அமைத்தல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் போன்றன சட்டத் தின்படி தண்டனைக்குரிய குற்றம் என்பதனை அறியத்தருகிறேன். எனவே வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து சபையின் முன்னனுமதி பெறப்படாது கட்டப்படும் கட்டடங் களுக்குக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

03.02 ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும்.

03.03 அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடித்தவர்கள் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச்சான்றிதழை பெற்றுக்கொள் ளல் வேண்டும்.

### 04. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் -2012

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2012 ஆம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தை பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2012 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தினை பெற்று வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கிறேன். உரிமப்பத்திரம் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

### 05. படவரைஞராகப் பதிவு செய்தல் -2012

2012ஆம் ஆண்டு பட வரைஞராக பதிவுசெய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2012 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை செய்து கொள்ள அல்லது புதுப்பிக்க முடியும்.

### 06. சூழல் பாதுகாப்பு உரிமம் -2012

மத்திய சூழல் அதிகாரசபைத் தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல்பாதுகாப்புச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு பிரதேசசபைக்கு வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையின் நிர்வாகப் பாதுகாப்பு பிரதேசத்தில் 1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.01.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் விதந்துரைக்கப் பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை / தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்க வேண்டிய பொறுப்பு பிரதேசசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2012 ஆம் ஆண்டு தொழிலை நடத்த அனுமதிக்கப் படமாட்டார்கள் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

### 07.விளம்பரங்களை அமைத்தல்

எமது சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பொது வீதிகள், பொது இடங்கள், வர்த்தகநிலையங்களில் பொருத்தப்படும், காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்காக 31.03.2012ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களைச் செலுத்தி சபையின் அனுமதியைப்பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு அனுமதி பெறப் படாத முகவர்கள்/ வர்த்தக நிலைய உரிமையாளர்கள், நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் 01.04.2012க்குப் பின்னர் அகற்று வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகிறேன்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய். (சி/7861) (2-6-9)

அ.ஜெயநேசன், தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை.

## 2007இல் களவாடியவருக்கு இரண்டு வருட கடூழிய சிறை

யாழ்ப்பாணம், ஜன.19

கடந்த 2007ஆம் ஆண்டு கொக்குவில் செம்பியன் ஒழுங்கையில் நடைபெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த மூவரில் இரண்டாவது சந்தேக நபருக்கு இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டு சம்பியன் ஒழுங்கையில் வீடு புகுந்து நகைகள் மற்றும் மூன்று லட்சத்து 18ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை களவாடிய சம்பவம் தொடர்பான நிலுவையில் இருந்த வழக்கு யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று பேரும் பிணை அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இரண்டாவது சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் அத்து மீறி வீடு புகுந்ததற்காக ஒரு வருடமும், அங்கிருந்த நகைகள், பணத்தை திருடியமைக்காக ஒரு வருடமுமாக இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனை நீதிவான் விதித்தார்.

இந்தத் தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்க முடியும் எனவும்; மூன்றாவது சந்தேக நபரை அடுத்த மாதம் 28ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். அத்துடன் முதலாவது சந்தேக நபருக்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. (10-4)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



17.12.2011 அன்று கொழும்பு ஜோன் டீ சில்வா ஞாபகார்த்த கலையரங்கில் நடைபெற்ற அரச விருது வழங்கும் விழாவில் இலக்கியத்திற்காக கலாபூஷண விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட எம் மதிப்பிற்குரிய

**கே. ஆர். டேவிட்**

அவர்களை வாழ்த்தி அவர் மேலும் பல சிறப்புக்களைப் பெற்றிட ஆசிக்கின்றோம்.

வாழ்த்துவோர்
வி. எல்விஸ் பிறஸ்லி
இரவீந்திரன் - கவுந்தினி, உமேஸ் - மரீனா.

## Computer Express
Institute of Information Technology

**A/L பரீட்சை முடிவுகள்.....???**
**O/L பரீட்சை முடிவுகளுக்கு காத்திருக்கும் மாணவர்களே !!!**
அடுத்த காலடிகளை வெற்றிப்பாதையில் நகர்த்துங்கள்

| | | |
|---|---|---|
| * Dip. in MicroSoft Office. | 3Months | 2000/= |
| * Dip. in web page Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Graphic Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Desk top publishing. | 4Months | 2000/= |
| * Dip. in Hardware Engineering. | 3Months | 2000/= |
| * Dip. in Auto CAD. | 3Months | 2000/= |
| * Dip.in Programming Language | 3Months | 2000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3Months | 3000/= |
| * Dip. in Computer Science | 4Months | 2500/= |
| * Honours Dip. in computer science | 5Months | 2500/= |

புத்தாண்டில் ஓர் புதிய பரிணாமம்
Certificate in Multi IT
புதிய பிரிவுகள் ஆரம்பம்.

Diploma in Computerized Accounting
1 week/3Months Course புதிய பிரிவுகள் ஆரம்பம்.
C,C++,Java,Java Script,VB,Html, ஆகிய Programming Language
University of Madras Bsc

Batch I 20-01-2012:- 9 am or 3Pm Batch II 21-01-2012:- 9 am or 3Pm
Batch III 22-01-2012:- 9 am or 3Pm Batch Iv 25-01-2012:- 9 am or 3Pm

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி தே.நாகதேவன்
அவர்களின் அன்புத் தந்தை

**இளையதம்பி செல்வத்துரை**

அவர்கள் (16.01.2012) அன்று மரணமடைந்த செய்தி கேட்டு துயரடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர் அவை, கல்விசாரா ஊழியர்கள்,
யா/ வரணி ம.வி. (13262) (7-9-45)

## விண்ணக வாழ்வில்

13 ஆம் வருட நினைவலைகள் | 3 ஆம் வருட நினைவலைகள்



அமரர்
சுவாம்பிள்ளை அருளானந்தம்



திருமதி
அருளானந்தம் மரியம்மா

12 ★ 10 ★ 1926 மண்ணில் 25 ★ 05 ★ 1929
19 ★ 01 ★ 1999 விண்ணில் 21 ★ 01 ★ 2009

பெருவாழ்வு தந்த எம் அன்புத் தெய்வங்களை
நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

"ஞானவாசம்",
இல. 111, அம்பலவாணர் வீதி,
உடுவில்.

இவர்களின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(13264) (6-9-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானைச் சம்பியன் சரஸ்வதி மகா வித்தி.




வலி வடக்கு, ஜன. 19

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 15 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் நூற்றாண்டு விழா வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக் கொண்டது.

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகியதும் இரு அணிகளும் வேகமாக மோதிக் கொண்டன. எனினும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி சற்றுத் தளர்வுற்ற நிலையில் மைதானத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் கை மேலோங்கியிருந்தது.

**அராலி சரஸ்வதி மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.**

முதல் பாதி ஆட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் 8: 3 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னணியில் நின்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் புது வேகத்துடன் களிமிறங்கி மோதிக்கொண்ட போதிலும் மீண்டும் பலப் பரீட்சையில் சரஸ்வதி வித்தியாலயத்தின் கை மேலோங்கியது.

இரண்டாம் பாதி ஆட்டம், சரஸ்வதி மகா வித்தியாலயம் 6:4 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னணியில் இருந்த வேளையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் 14:7 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. (ம-86)

## தாச்சிப் போட்டியில் பங்குபற்றலாம்

யாழ்ப்பாணம், ஜன.19

தென்மராட்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே தாச்சிச் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தக் கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக் கழகம் தீர்மானித்துள்ளது.

இந்தப் போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் கழகங்களை பதிவு செய்யுமாறு விளையாட்டு அவைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (ம-288-ரி)

## கிரிக்கெட் இறுதியாட்டம்

கொழும்புத்துறை, ஜன.19

அரியாலை சனசமூக நிலையத்தின் விளையாட்டு மைதான பார்வையாளர் அரங்கத் திறப்பு விழாவை முன்னிட்டு நடத் தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் லீக் ஆட்டங்களில் அபாரமாக ஆடிய கொக்குவில் லெவன் ஸ்ரார் அணியும் அரியாலை சன சமூக நிலைய அணியும் இறுதிப் போட்டியில் மோதவுள்ளன. இரு அணிகளும் பலமானவை என்பதால் பரபரப்புக்கு பஞ்சமிருக்காது.

தொடர்ந்து குருநகர் பாடும் மீன் விளையாட் டுக் கழகத்தை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனிஸ் அணி மோதவுள்ளது. இது சிநேக பூர்வ ஆட்டமாக இடம்பெறவுள்ளது. (ம-135)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஜன. 19

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 17, 19 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

காலையில் இடம் பெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

17 வயதுப் பிரிவு.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

இணுவில் மத்திய கல்லூரி எதிர் அராலி சரஸ்வதி வித்தியாலயம்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் இளவாலை புனிய ஹென்றியரசர் கல்லூரி.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

(ம-86)

## ஆண்களுக்கான கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்.மாவட்டக் கரபந்தாட்டச் சங்கம் நடத்தும் தேசத்தின் மகுடத்துக்கான ஆண்கள் மட்டும் பங்குகொள்ளும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 7.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள், தங்களது பதிவை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு மைதானத்துக்கு வருகை தந்து மேற்கொள்ள முடியும் என சங்கத்தின் செயலாளர் கி.மனோகரன் தெரிவித்துள்ளார். (த-23)

## முல்லைத்தீவு வலயத்தின் போட்டிகள்

முல்லைத்தீவு, ஜன.19

முல்லைத்தீவுக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டு, மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன என முல்லைத்தீவுக் கல்வி வலய உடற்கல்விப் பணிப்பாளர் மைக்கல் தெரிவித்தார். (த-23)

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
04.02.1944



உதிர்வு
19.01.2008

அமரர்
இராசப்பு
அருமைநாயகம்



இனிமையாக வாழ்ந்த எங்களை
இடையில் விட்டுச் சென்றது ஏன்?
காலங்கள் ஆண்டானாலும் கவலை மாறவில்லை
பொன்னான நம் பொழுதுகள்
மண்ணாவது ஏனோ?
பண்பான பிள்ளைகளாய் வளர்த்தவரே
பாதியில் விட்டுச் சென்றது ஏனோ?
கூண்டுக்கிளிகள் போல் காத்தவரே
காணாமல் போனது ஏனோ?
மனையாளை விட்டுப் பிரியாதவரே
மண்ணிற்குள் சென்றது ஏனோ?
மனையாளின் மனதில் வாழ்பவரே
மீண்டும் வருவாயோ?
பேரப்பிள்ளைகள் உம் மடியில் தவழ்ந்தனரே
அவர்கள் உன்னைத் தேடுகின்றார்கள்
மருமக்கள் மாமனாரின் முகம் காணாமல் வாடுகின்றார்கள்
மறுபடியும் வருவாயோ?
எங்கள் வாழ்வின் அத்திவாரமே
கட்டடம் கட்டுவித்து உயிர் கொடுப்பாயா?
மீண்டும் பூமிக்கு எம் தந்தையாவீரா?

(12655) (2-6-9)

மேரி இல்லம், கரவெட்டி வடக்கு, வதிரி. - தகவல்: அ.றொபின்சன் (மகன்).



ரியல் பேபி மல்டி சொய்ஸ்

19.01.2012 வியாழக்கிழமை காலை 8.30 - 9.00 மணியளவில் ரியல் பேபி மல்டி சொய்ஸ் ஸ்தாபனம் யாழ்.சாலை, ஆனைக்கோட்டைச் சந்தியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. எங்குமே கண்டிராத வகையில் ஒரே இடத்தில் குழந்தைகள், தாய்மார்களுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளும் வகையில் எமது ஸ்தாபனம் ஆரம்பிப்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

Dr. S.சிறிபவானந்தராஜா
(பிரதிப் பணிப்பாளர் யாழ்.போதனா வைத்தியசாலை)
அவர்களால் ஆரம்பித்துவைக்கப்படும் என்பதனையும் மிக மிக மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.
அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் அத்தருணம் வருகை தந்து எமது திறப்பு விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வே.இராசா (டயஸ்)
இல.505, யாழ்.சாலை, ஆனைக்கோட்டை. T.P.0774897796

(13281)(2-6-9)

INVITING IMPORTERS FOR HERBAL BEAUTY PRODUCTS

One of South India's best known names in the beauty, health and wellness industry, Anoo's, a 30 year old brand based in Hyderabad, India has presence in 11 Indian cities with 16 facilities and 1 facility in the USA. Anoo's range of hair and skin care products for men and women is completely herbal and has a strong base in the Ayuverdic tradtions that are now being noticed and sought-after the world over.

**Anoo's is looking for importers/traders in Sri Lanka to market and distribute their naturals product range.**

**Requirements: Experience in the FMCG line (preferably cosmetics), strong distribution network, good infrastructure and willing to invest.**

For more details, please visit: Stall No. 74, FIEO India Pavilion at Jaffna International Trade Fair (JITF),
Opp. Subramaniyam park, Mainstreet adj. Durayappah Stadium, Jaffna, Sri Lanka. Date: 20th, 21st & 22nd January.
Timing: 10:00 am – 6:00 pm


Anoo's Since 1982 Naturals FOR MEN & WOMEN

For details contact: Call: +94 771069921, +91 98660 22112. E-mail: naturals100@gmail.com, www.anoos.com

JWT Mindset 0053 2012

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முன்னிலை வகிக்கின்றது பாகிஸ்தான்





பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களைத் தவிர ஏனையோர் பெரிய அளவில் சோபிக்காததால் நேற்றைய ஆட்ட நேர நிறைவில் 7 இலக்குகளை இழந்து 288 ஓட்டங்களை பாகிஸ்தான் அணி பெற்றுக் கொண்டுள்ளது. இதன் மூலம் இங்கிலாந்து அணியை விட 96 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் டுபாயில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அஜ்மலின் சிறப்பான சுழற் பந்து வீச்சை சமாளிக்க முடியாத இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 192 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. ப்ரையர் ஆட்டமிழக்காமல் 70, ஸ்வான் 34, மோர்கன் 24 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சயிட் அஜ்மல் 55 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் ஆட்டநேர நிறைவில் இலக்கு நஷ்டமின்றி 42 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் ஹபீஸ் 22, உமர் 18 ஓட்டங்களுடன் இருந்தனர்.

நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் ஆரம்பமானது இருவரும் மிகச் சிறப்பாக இங்கிலாந்தின் பந்து வீச்சுக்களை பந்தாடினர். சிறப்பாக ஆடிய ஹபீஸ் தனது 7 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். முதலாவது இலக்குக்காக 114 ஓட்டங்களை இருவரும் பகிர்ந்த நிலையில் தௌபீக் உமர் 58 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய அஷர் அலி ஒரு ஓட்டத்துடனும், ஆரம்பம் முதல் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய மொஹமட் ஹபீஸ் 88 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

யுனிஸ்கான், மிஷ்பா இடையே சிறிய இணைப்பாட்டம் பகிரப்பட பாகிஸ்தான் அணி 200 ஓட்டங்களைத் தாண்டியது. யுனிஸ்கான் 37, அஷாட் சபக் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 231 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்தது.

இதன் பின்னர் இணைந்த அணித்தலைவர் மிஷ்பா உல் ஹக், அட்னாட் அக்மல் இருவரும் சிறப்பான நிலைக்கு பாகிஸ்தானை வழிப்படுத்திச் சென்றனர். மிகச் சிறந்த நிதானமான துடுப்பாட்டத்தின் மூலம் ஆறாவது இலக்குக்காக 52 ஓட்டங்களை இருவரும் பகிர்ந்த நிலையில் மிஷ்பா 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த அப்துர் ரஹுமான் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நேற்றைய ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

பாகிஸ்தான் அணி 104.3 பந்து பரிமாற்றங்களில் 7 இலக்குகளை மாத்திரம் இழந்து 288 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் அட்னாட் அக்மல் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளார். பந்து வீச்சில் அண்டர்ஸன், புரோட், ஸ்வான் தலா 2 இலக்குகளை கைப்பற்றினர். (15)



## சர்சையை கிளப்பிய அஜ்மல்

டுபாயில் நடந்து வரும் பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்டில் இங்கிலாந்து 192 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறியது. பாகிஸ்தான் தரப்பில் பந்து வீசிய சுழற் பந்து வீச்சாளர் சயிட் அஜ்மல் 7 இலக்குகளை கைப்பற்றினார்.

இந்த ஆட்டத்தின் போது சயிட் அஜ்மல் பந்துவீச்சு சர்ச்சைக்குரிய முறையில் இருந்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஐ.சி.சி.யின் விதிமுறைகள் மீறி 15 டிகிரிக்கு மேலாக அவரது கை வளைவதாக குற்றம்சுமத்தப்பட்டது. இந்த பந்துவீச்சு 'தூஸ்ரா' என்று கூறப்படுகிறது.

இது குறித்து அஜ்மல் கூறுகையில், கடந்த 2009 ஆம் ஆண்டும் எனது பந்து வீச்சு குறித்து சர்ச்சை எழுந்தது. தற்போது மீண்டும் அதே நிலை ஏற்பட்டுள்ளது. தவறுகள் ஏதும் இருந்தால் அதனை நடுவர்கள் பார்த்து கொள்வார்கள் என்றார். (15)

## இவர்கள் திருந்த மாட்டார்கள்

இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற மூன்று டெஸ்ட் ஆட்டங்களிலும் இந்திய அணி தோல்வியடைந்தது. இரு அணிகள் மோதும் நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் அடிலெய்டில் எதிர்வரும் 24 ஆம் திகதி தொடங்குகிறது. இதனால் வீரர்கள் இரு பிரிவுகளாக நேற்று முன்தினம் அடிலெய்டு வந்து சேர்ந்தனர்.

இந்த ஆட்டத்துக்கான பயிற்சியை வீரர்கள் 21 ஆம் திகதி தொடங்குவார்கள் என்று கூறப்படுகிறது. இதனால் நேற்று முன்தினம் மைதானத்தில் ஹெல்மெட், கிரிக்கெட் மட்டை போன்ற எவ்வித பாதுகாப்பு உபகரணங்களும் இல்லாமல் பந்தை எறியச் சொல்லி சேவாக் ஏனோதானோ என்று பயிற்சியில் சிறிது நேரம் ஈடுபட்டதாக தெரிகிறது.

கடந்த மூன்று ஆட்டங்களின் 6 இன்னிங்சில் 5 முறை 'போல்டான' டிராவிட், இரண்டு மணி நேரம் வரை பயிற்சி செய்தார். மேலும் அவர் தீவிர பயிற்சியில் ஈடுபட்டார்.

பயிற்சியாளர் பிளட்சர் மூன்று டெஸ்டில் பங்கேற்காத ரோகித் சர்மாவுக்கு அதிக ஆலோசனைகள் வழங்கினார். அடிலெய்டு ஆட்டத்தில் விளையாட அணித் தலைவர் தோனிக்கு தடை இருப்பதால், வேறு வழியின்றி சகா களமிறங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இவரும் நேற்று முன்தினம் துடுப்பாட்ட பயிற்சி செய்தார். (15)

## ஏமாற்றி விட்டோம்

ஆஸ்திரேலிய தொடரில், ஒட்டுமொத்த இந்தியர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற தவறிவிட்டோம், என்று இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கம்பீர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியா சென்ற இந்திய அணி நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை, 0-3 என்று இழந்தது. இது குறித்து கம்பீர் கூறியதாவது:

தரவரிசையில் முதலிடத்தை பிடிக்க வேண்டும் என்றால், தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும். இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற அந்நிய மண்ணிலும் வெற்றி பெற வேண்டும். இதற்கு துடுப்பாட்டம் மிக முக்கியம். தொடர்ந்து நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும்.

டெஸ்ட் தொடரை வெல்வது தான் மகிழ்ச்சி தரும். இது சச்சின் 100 ஆவது சதம் அடிக்கும் போது ஏற்படும் உற்சாகத்தை விட, அதிக மகிழ்ச்சியை அளிக்கும். சச்சின் 100 ஆவது சதம் அடித்து, அணி வெற்றி பெறவில்லை என்றால் அது திருப்தியாக இருக்காது. ஒட்டுமொத்தத்தில் தனிநபரின் சாதனையை விட, தொடரின் வெற்றியே முக்கியம்.

ஆஸ்திரேலிய தொடரில் இந்திய ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன். இந்தியா திரும்பும் போது இதற்கான விளைவுகளை சந்திக்கத் தயாராக உள்ளோம். தற்போது, எங்களை விமர்சிக்க அவர்களுக்கு வாய்ப்பு தந்துள்ளோம். மொத்தத்தில் இங்கு சிறப்பான கிரிக்கெட்டை வெளிப்படுத்தவில்லை.

விளையாடும் 11 வீரர்கள் தான் களத்தில் திறமையை வெளிப்படுத்த வேண்டும். அணித் தலைவராக இருப்பவர் எந்த விளைவையும் ஏற்படுத்தி விடப் போவதில்லை. இதற்காக அணித்தலைவர் டோனியை மட்டுமல்ல, வேறெந்த தனிப்பட்ட வீரரையும் குற்றம் சுமத்த முடியாது. இதே தான் சேவாக்கிற்கும். வெற்றி இவரை மட்டும் சார்ந்திருக்காது. ஒட்டுமொத்த அணியும் நன்றாக விளையாட வேண்டும்.


அனைவரும் பொறுப்பு:

அணியின் வெற்றிக்கு சிறந்த தொடக்கம் தேவை. புதிய பந்தில் இவர்கள் கொடுக்கும் தொடக்கம் தான், மற்ற வீரர்களின் துடுப்பாட்டத்துக்கு உதவியாக அமையும். கடந்த ஆட்டங்களில் தொடக்கம் சரியில்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதே நேரம், தொடக்கம் மற்றும் மத்திய வரிசை வீரர்களை மட்டும் குற்றம் சுமத்த முடியாது. ஒட்டுமொத்த வீரர்களும் தான் இதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

வெற்றிக்கு முயற்சிப்போம்:

பொதுவாக ஆஸ்திரேலிய தொடர் சவாலானது. இந்தத் தொடரில் இன்னும் நிறைய ஆட்டங்கள் மீதமுள்ளன. அடுத்து அடிலெய்டில் சிறப்பாக செயல்பட்டால், பின்னர் 'ரி-20', ஒருநாள் தொடரில் சாதிக்க உதவிகரமாக அமையும். இந்திய ரசிகர்களின் முகத்தில் எப்படியும் புன்னகையை கொண்டு வருவோம் என்ற நம்பிக்கை உள்ளது. இதற்காக அடிலெய்டில் வெற்றி பெற முயற்சிப்போம் - என்றார். (15)





## காதலியை கரம் பிடிக்கும் சகீர்

இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர் சகீர்கான் தனது நீண்ட நாள் தோழியும், பொலிவுட் நடிகையுமான இஷா சர்வானியை திருமணம் செய்யவுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் முத்தரப்புத் தொடர் முடிந்தவுடன் மார்ச் மாதத்திலோ அல்லது ஒக்டோபர் மாதத்திலோ அவர்களது திருமணம் நடைபெறும் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இஷா சர்வானியை சகீர்கான் கடந்த 2005 ஆம் ஆண்டு சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**MMC** Matrix Maths Centre
Group Classes
(கணித வகுப்புகள்) 6-O/L வரை
கூழாவடி, ஆனைக்கோட்டை
(பூங்கா முன்பாக)
தொடர்புக்கு:
0777008142 / 0777750678

## சந்தேக நபர் விடுதலை

நல்லூரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் மூன்று மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற களவு தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் நான்காவது நபர் சுற்றவாளி என மன்றினால் இனங்கானப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்பு பட்டனர் எனநான்கு பேர்கைது செய்யப்பட்டு அவர்களில் மூவர் கடந்த வருடம் விடுதலை செய்யப்பட்டனர்.

நான்காவது சந்தேக நபரான கோப்பாயைச் சேர்ந்த குடும்பஸ்தர் குற்றத்தை ஏற்க மறுத்ததனால் அது தொடர் விசாரணைக்கு விடப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே விசாரணையின் போது அவர் சுற்றவாளியாக மன்றினால் இணங்காணப்பட்டு விடுதலையானார்.(த-4)

af **ALLIANCE FRANCAISE DE JAFFNA**
The Only Official French Language Centre in Jaffna

*Learn French the French Way*

யாழ்ப்பாணத்தில் French Embassy ஆல் ஆங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு மொழி பயிலும் மையமான Alliance Francaise de Jaffna இன் ஊடாக French மொழி வகுப்புக்கள் நடத்தப்படு கின்றன.

6 மாதத்தில் முதலாவது உள்ளக பரீட்சைக்கு தோற்றலாம்.
வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri - Nallur Road, Jaffina Phone: 021 2228093
E-mail: alliance jaffina@yahoo. com
(றக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)
மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம். (13219) (2-6)

**பகிரங்கக் கலந்துரையாடல்**

உயர் கல்வியில் எதிர்நோக்கும் சமகால நெருக்கடிகளும்
பல்கலைக்கழக புதுமுக மாணவர்களும்
தலைமை:
பேராசிரியர்: ப. சிவநாதன்
(பதில் பீடாதிபதி, கலைப்பீடம்)
2011 க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளும்
Z- புள்ளி கணிப்பீட்டு முறையும்
ஆரம்ப உரை:
கலாநிதி செ. அறிவழகன்
(கணித புள்ளிவிவரவியல்துறை)-
தனியார் பல்கலைக்கழக சட்ட முலம்
ஆரம்ப உரை:
கு .குருபரன் (சட்டத்துறை)
காலம்: 20.01.2012 வெள்ளிக்கிழமை
நேரம்: பிற்பகல் 3.30 மணி
இடம்: கைலாசபதி கலையரங்கு, யாழ். பல்கலைக்கழகம்
அனைவரையும் வரவேற்கின்றோம்.
குறிப்பு: க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும்
யாழ். பல்கலைக்கழக அசிரியர் சங்கம்
யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம். (13266) (6-45-22)

**வான் விற்பனைக்கு**
நல்ல
நிலையிலுள்ள
செல் மொடல்
வெள்ளை நிற வான்
விற்பனைக்கு
உண்டு.
தொடர்பு:
0776158977

**சிங்கள வகுப்புகள்**
பாடசாலை மானவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. பேச, எழுத, வாசிக்க அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.
ஆரம்பம் 21.01.2012, சனிக்கிழமை
பிரிவு-i, 2-3. பிரிவு-ii, 3-4. பிரிவு-iii, 4-5.
ஒரு பிரிவில் 9 மாணவர்களே அனுமதிக்கப்படுவர், இன்றே பதிவுகளுக்கு முந்துங்கள். (Duration : 4 Months)
NORTH LEAD EDUCATIONAL CENTER
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, 0772533390, Fax : 222 4460.

**விற்பனையாளர் தேவை**
இலத்திரனியல் பொருள்கள் விற்பனையில் முன் அனுபவ முள்ள சிங்களம் தெரிந்த விற்பனையாளர் தேவை.
உடன் நேரில் வரவும்.
மீடியா எலக்ரோ மாட்
1-I, 1-H, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். T.P:-021 222 4566

**திசைகாட்டியில் பதவிவெற்றிடம்**
திசைகாட்டி கிளிநொச்சிக் கிளையில் பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ளது.
வரவேற்பாளர்: (தற்காலிகம்)- பெண்.
வன்னிப் பகுதியைச் சேர்ந்த க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்தவர்கள். வயது- 24-42 வரை.
அலுவலக உதவியாளர்: (அமைய அடிப்படை) -ஆண்.
வன்னிப் பகுதியைச் சேர்ந்த க.பொ.த சாதாரணதரத்தில் சித்தியடைந்தவர்கள். வயது- 24-42 வரை.
நேர்முகத் தேர்வு- 21.01.2012.
பிற்பகல் 2 மணிக்கு.
தலைமைக் காரியாலயம்.
திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
யாழ். நகரில் இருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை.

**உடனடி வேலைவாய்ப்பு**
பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
★ குடிசார் இயந்திரவியலாளர் (Civil Engineer) குடிசார் இயந்திரவியல் பட்டதாரி அல்லது தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா மற்றும் குறைந்தது ஐந்து வருட முன் அனுபவம்.
★ படவரைஞர் (Draughtsman) தொழில்நுட்பக் கல்லூரி தகைமைச் சான்றிதழ் மற்றும் கட்டுமானத் துறையில் முன்னனுபவம் விரும்பத்தக்கது.
★ உதவி கணிய அளவையியலாளர் (Asst. Quantity Surveyor) கணிய அளவையியல் பட்டதாரி அல்லது தொழில்நுட்பக் கல்லூரி தகைமைச் சான்றிதழ்.
★ உழவு இயந்திர இயக்குநர் (Tractor Operator) செல்லுபடியாகும் வாகன சாரதி அனுமதிப் பத்திரம்.
★ கனரக வாகன சாரதி (Tipper Driver) செல்லுபடியாகும் கனரக வாகன சாரதி அனுமதிப் பத்திரம்.
தகுதியுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை 27.01.2012 ஆம் திகதிக்கு முன்பாக எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
தாபன பிரிவு
யூரோவில்
45, காட்டுக் கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
euroville@dialognet.lk (C/7863)

# ஏகாந்தமாய் சென்று ஆண்டுகள் எட்டில்...

அமரர்

## சின்னத்துரை ரஜனன்

| அகிலத்தில் | அக்கினியில் |
|---|---|
| 30 | 17 |
| 10 | 01 |
| 1975 | 2004 |




எண்ணில் அடங்கா நினைவுகளுடன்
எட்டு ஆண்டுகளாய் எமை
ஏங்கித் தவிக்கவிட்டு
எங்கு தான் சென்றாயோ
ஏங்கித் தவிக்கும் ஏகாந்த நினைவுகளுடன்

பெற்றோர்: திரு. திருமதி சின்னத்துரை லோகேஸ்வரி
சகோதரர்கள்: ரமணன் குடும்பம் (கனடா)
ரமணி குடும்பம் (பிரான்ஸ்)
ரஜனி குடும்பம் (கனடா)

லோகஸ்தான்
பிரதான வீதி,
சுன்னாகம்.

# மரண அறிவித்தல்

## ரட்ணதுரை - தயாபரன்



சுழிபுரம், கம்பனையைப் பிறப்பிடமாகவும் London, Stanmor ஐ வதிவிடமாகவும் கொண்ட ரட்ணதுரை தயாபரன் 11.01.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ரட்ணதுரை (ஆசிரியர்) மற்றும் கமலாசினி (கனடா) தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும் இம்மானுவேற்பிள்ளை - (சின்னமணி, All Ceylon Distributors, Colombo & Jaffna), சோதிமலர் தம்பதியரின் மருமகனும் அன்ரனெற்றின் (உதயகுமாரி) அன்புக் கணவரும் ஏட்றியன், அன்ட்றியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ர.முரளிதரனின் அன்புச் சகோதரனும் திருமதி சாந்தி முரளிதரனின் அன்பு மைத்துனரும், அனுஸ்கா, றொசான் ஆகியோரின் சித்தப்பாவும் கெனடி இம்மானுவேற்பிள்ளை (UK), அன்ரனெற் இம்மானுவேற்பிள்ளை, ஆன்பிராங், போஜினி றோச் (A.S), றெஜீனா, தனஞ்சியன், கனியூட் (UK), விக்டோறியா (வேளாயினி), சதீஸ்குமார் (UK) ஆகியோரின் மைத்துனரும் விவியன் (UK), பிறண்டன் (A.S), யொனாத்தன் (A.S), நெத்தானியேல், பிரவீன், யோசுவா எறின், சுபாசினி (A.S), அடோனியா, யெசிக்கா, அம்பிரிதா, ஜெறமயா (UK) ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.01.2012) வியாழக்கிழமை மு.ப 11.00 மணிக்கு St. John Fisher, Imperial Close, North Harrow, Haz 7LW எனும் முகவரியில் இறுதித் திருப்பலி நிறைவேற்றப்பட்டு பின்னர் மதியம் ஒரு மணிக்கு Carpenters park Cemetary, Oxhey lane, Watfoed, WD 195 RL எனும் முகவரியில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு**
உதயம் - பிரித்தானியா
T.P:- 442084160030
முரளிதரன் - கனடா
T.P:- 0019052097012.

தகவல்
T. இம்மானுவேற்பிள்ளை
(மாமன்)
T.P:- 0112434674.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

நயினாதீவு

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருக்கோயில்

*அதி சுந்தர நவதள, நவகலச மஹா இராஜகோபுர சகித புனராவர்த்தன அஷ்டபந்தன*

*உத்தமோத்தம த்ரயத்திரும்சத் (33) குண்ட மஹாயாக பிரதிஷ்டா*

## மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்திவிழா

*(தை மாதம் 15ஆம் நாள், ( 29.01.2012) ஞாயிற்றுக்கிழமை 9.01 - 10.44)*

**கிரியாரம்பம்**

தை மாதம் 5ஆம் நாள் (19.01.2012) வியாழக்கிழமை காலை 9.21 நிமிடத்துக்கு மேல் கிரியாரம்பம்

**யாகாரம்பம்**

*தை மாதம் 9ஆம் நாள் (23.01.2012) திங்கட்கிழமை இரவு மஹாயாகாரம்பம்*

**எண்ணெய்க் காப்பு**

25.01.2012 புதன்கிழமை காலை 8 மணிமுதல் 27.01.2012 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிவரை

*மஹாகும்பாபிஷேகம் தை மாதம் 15ஆம் நாள் (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி 01 நிமிடம் முதல் 10 மணி 44 நிமிடத்திற்குள் மஹாகும்பாபிஷேகம் நடைபெற எம்பிராட்டி திருவருள் பாலித்துள்ளாள்.*

பிரதிஷ்டா பிரதம சிவாச்சார்யார்

ஸாகித்ய சிரோன்மணி, வித்யா கல்பநிதி

**சிவஸ்ரீ.வை.மு.ப.முத்துகுமாரசாமி சிவாச்சார்யார்**

ஆதீன பிரதம சிவாச்சார்யார்.

*01.01.2012*

தொ.பே: 021 321 3024, 021 320 7785

அறங்காவலர் சபை

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்**

**குறிப்பு:**

*அடியார்களின் நலன் கருதி நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபி அன்னதான சபையினரால் 20.01.2012 தொடக்கம் 07.02.2012 (தைப் பூசம்) வரை சிறப்பான முறையில் அன்னதானம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தாக சாந்தி நிலையத்தினரால் குடிநீர் சேவையும், நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கத்தினரால் மோட்டார் படகுச் சேவையும், தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர், இலங்கை போக்குவரத்துச் சபையினரால் பேருந்து சேவையும், நயினாதீவு பாடசாலைச் சாரணரால் சாரணர் சேவை போன்ற அனைத்துச் சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.*

*(மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து வரும் முதல் நிகழ்வான தைப்பூச நிகழ்வு வழமைபோல் வெகு சிறப்பான முறையில் இடம்பெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்)*

CAPSTONE BUSINESS PROFESSIONALS

## CAPSTONE, CIMA வுடன் இணைந்து நடாத்தும் A/L 2011 மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்குமான பரிசளிப்பு விழாவும், தொழில்சார் வழிகாட்டல் கருத்தரங்கும்

CIMA Chartered Institute of Management Accountants

### இடம்: வீரசிங்கம் மண்டபம்

**காலம்: வெள்ளிக்கிழமை (நாளை)**

**20.01.2012**

**மு.ப 9.00 - 12.00**

**பிரதம விருந்தினர்கள்:**

**திரு. பிரட்லீ எமர்சன்**

**(CIMA வின் ஆசிய மற்றும் மத்திய கிழக்கு பிராந்திய பணிப்பாளர்)**

**பேராசிரியர்: தி. வேல்நம்பி**

**(பீடாதிபதி, வணிக முகாமைத்துவக் கற்கைபீடம், யாழ் பல்கலைக்கழகம்)**

**கடந்த 2011ம் ஆண்டு நடைபெற்ற A/L பரீட்சையில் கணித, வர்த்தகப்பிரிவுகளில் பரீட்சைக்குத்தோற்றி யாழ் மாவட்ட மட்டத்தில் முதல் 200 இடங்களைப் (First 200 District Rank Holders) பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு விசேட பரிசில்கள் வழங்கப்படும்,**

**உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்று, மேற்படிப்பு பற்றி முடிவு எடுப்பதற்கு, இக்கருத்தரங்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். A/L 2010, 2011 மாணவர்களின் பெற்றோர்களும் பங்குபற்றி தமது கருத்துக்களையும், சந்தேகங்களையும் தெளிவுபடுத்துவதற்கு இது ஓர் அரிய சந்தர்ப்பம்...!**

**பரிசில்களைப் பெறும் மாணவர்கள் மு.ப 8.30 இற்கு முன்னதாக மண்டபத்தில் பிரசன்னமாகுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்**

**மேலதிக தொடர்புகளுக்கு: 021 222 0727, 0771 250 350, 077 248 7881**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 பிளஸ் திருத்தத்தை கடுமையாக எதிர்ப்போம்

### தேசப்பற்று தேசியஇயக்கம் கொதிப்பு

இனப்பிரச்சினைக்கு 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வை வழங்குவதற்கு அரசு தயார் என ஜனாதிபதி இந்திய அமைச்சருக்கு உறுதியாகக் கூறியிருப்பாராயின், அதனை எமக்கு உடனடியாக, உத்தியோகபூர்வமாக அவர் அறிவிக்கவேண்டும் என ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கையொன்றை விடுத்துள்ளது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்.

13 பிளஸைப் பற்றி ஜனாதிபதி பலமுறை கூறியுள்ளார். ஆனால், இம்முறை அது உண்மையாக இருக்குமானால், நாம் அதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிடுவோம் என்றும் அந்த இயக்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாகத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் கலாநிதி வசந்த பண்டார கூறியவை வருமாறு:-

காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கமாட்டோம் என ஜனாதிபதி அண்மையில் திட்டவட்டமாக அறிவித்திருந்தார். அதனையும் வரவேற்கிறோம்.

தற்போது கிருஷ்ணாவிடம் இவ்வாறு கூறியுள்ளார் எனக் கூறப்படுகின்றது. உண்மையாகவே ஜனாதிபதி 13 பிளஸுக்கு இணங்கியிருந்தால், அதனை எமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவேண்டும்.

ஜனாதிபதி 13ஆவது திருத்தத்துக்கு இணங்கியிருப்பாராயின், நாம் எமது கடும் எதிர்ப்பை வெளியிடுவோம் - என்றார் அவர். (த-சி)

## 13⁺ பற்றியே இனிமேல் பேச்சு

1 »

பொலிஸ் அதிகாரங்கள், வடக்கு, கிழக்கு இணைப்பைப் பற்றி இனி நாம் அரசுடன் பேசவேண்டிய தேவை இல்லை. ஏனெனில், 13 ஆவது திருத்தத்தில் இவை உள்ளடங்குகின்றன.

இனி அந்த விடயங்களை அமுலாக்கத்தை அர்த்தப்படுத்துவது பற்றித்தான் பேசவேண்டும். 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று சில விடயங்களை அர்த்தமுள்ளதாக்குவதுதான் இனி எமது செயற்பாடாக இருக்கவேண்டுமென நாம் கருதுகிறோம்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு எமது பெயர்களை அனுப்புவது தொடர்பான நிலைப்பாட்டில் நாம் இன்னமும் உறுதியாகவே உள்ளோம். ஆனாலும், 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அவசியமும் எழாது - என்றார் சுமந்திரன். (உ)

## இந்தியாவின் ஆதரவை பெறுவதற்கே 13 பிளஸ்

1 »

ஆனால், இதனால் கண்ட பயன் எதுவுமில்லை என்பதுடன், இனி காணப்போகும் பயனுமில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இலங்கை அரசு வழங்கிய உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துமாறு அதற்கு அழுத்தம் கொடுக்காமல் இந்தியா அமைதியாக இருப்பது புரியாத புதிராகவுள்ளது என்றும் அவர் கூறினார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு 13ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வை காண்பதற்குத் தயாராகவே உள்ளோம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் உறுதியாகக் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உறுதிமொழி தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் 'உதயனு'க்குக் கூறியவை வருமாறு:-

தற்போதைய அரசு அதிகாரப் பரவலாக்கத்திற்கு ஒருபோதும் இணங்காது. அவ்வாறு இணங்கும் பட்சத்தில் அவர்களின் கூட்டமைப்பு சிதறிவிடும். இந்தப் பயமும் அரசை வாட்டி வதைக்கின்றது.

இனப்பிரச்சினைக்கு 13ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வை காண்பதற்குத் தயார் என ஜனாதிபதி கூறுவது புதிய கதையல்ல. இதற்கு முன்னரும் நாடாளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்களின்போதெல்லாம் இந்தப் (13+) பல்லவியை அவர் பாடியுள்ளார் என்பதை நினைவூட்ட விரும்புகின்றோம்.


மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரின்போது, இந்தியாவின் ஆதரவைத் திரட்டிக் கொள்வதற்காகவே அரசு இந்த தந்திரோபாயத்தைக் கையாண்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு 13ஆவது அரசமைப்புக்கு அப்பால் சென்று தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி இதற்கு முன்னரும் இந்தியாவிடம் கூறியிருந்தார். ஆனால், உறுதிமொழிகளை அவர் காற்றில் பறக்கவிட்டார். இம்முறையும் அதுதான் நடக்கப்போகின்றது. 13ஆவது அரசமைப்பை நடைமுறைப்படுத்துவதில் அரசுக்குள் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், எப்படி 13 பிளஸ்ஸை வழங்குவார்கள்? இதெல்லாம் போலிக் கதைகள்.

ஜெனிவா மாநாட்டின் போது, தமிழர்களுக்கு நாங்கள் இவ்வாறானதொரு தீர்வை வழங்கவுள்ளோம் எனக் கூறி தப்பித்துக்கொள்வதற்கு அரசு கையாளும் உபாயம் இது. இதன்போது இந்தியாவும் இலங்கையின் போலி உறுதிமொழிகளை நம்பி அவற்றிற்கு பக்கபலமாக இருக்கும் - என்றார் அவர். (த-சி)

## அரசு கூட்டமைப்பு பேச்சின் போது இந்திய மத்தியஸ்தம் அவசியம்

1 »



இந்த வேண்டுகோள் அடங்கிய மகஜரொன்றை இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் கையளித்தார்.

இந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசானது தமிழ் சிறுபான்மையினருக்குப் பொருத்தமான அரசியல் தீர்வொன்றை அடைவதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சில் ஈடுபட்டுவருகிறது.

இலங்கையில் தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இது ஒரு வழி என இதனை இந்திய வெளிவிவகார அமைச்சு வரவேற்றிருக்கிறது. ஆனால், இலங்கை அரசானது பேச்சுக்களின் வழி யாக மாகாண சபைகளை இயங்குவதற்கு தேவையான அதிகாரங்களை வழங்குவதில் எள்ளளவும் விட்டுக்கொடுக்கவில்லை.

30 ஆண்டுகள் உள்நாட்டு யுத்தத்தின் பின்னரும் பெரும்பான்மையைக் கொண்ட இலங்கை அரசு மத்தியில் இருந்து தமது அதிகாரங்களை வழங்கத் தாயாராக இல்லை.

எனவே இலங்கை அரசிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சின் வழி இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றிற்கு வழி செய்யும் படி இந்திய அரசை விநயமாக வேண்டுகிறோம்.

இல்லாவிடின் இப்பேச்சுக்கள் நீண்டுகொண்டு போவதோடு இலங்கை அரசானது புதிய வழிகளை தேடி அரசியல் பிரச்சினைக்குத் தீர்வினைக் காணும் எண்ணத்தைப் பின் தள்ளிக்கொண்டே போகும்.

எனவே இந்திய அரசானது புவியியல் நோக்கங்களையும் தாண்டி உண்மையாகத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண உழைக்க வேண்டும். இந்தப் பேச்சில் இந்திய அரசு மத்தியஸ்தம் வகிப்பதை இலங்கை அரசு எதிர்க்கப் போவதில்லை.

இந்திய சமாதான உடன்படிக்கைக்கு முன்பு இந்திய அரசு இது போன்ற மத்தியஸ்தப் பணியை ஆற்றிய போதும் தமிழ் தலைவர்கள் இந்திய சமாதான ஒப்பந்தத்தின் தன்மைகளை உணராமலும் தமக்குள் கெட்டித்தனமாக ஒன்றிணைந்து செயல்படாமலும் தூக்கி எறிந்துவிட்டனர்.

எனவே, இந்திய வெளிவிவகார அமைச்சானது இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் எமது வேண்டுகோளைப் பரிசீலித்து எமது உதவிக்கு வரும்படி அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்.

போரினால் தாக்கப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப்படுகின்ற மக்கள் மேல் தாங்கள் காட்டும் மனிதாபிமான கரிசனைக்கு நன்றி தெரிவிக்கிறோம் என குறிப்பிடப்பட்டள்ளது.

## போலிக் கடிதம் மூலம் பட்டதாரிகள் நியமனம்

1 »

யில் இணைந்திருந்தார் என்பதை *உதயன்* உறுதிப்படுத்தி உள்ளது. இந்த மோசடி பற்றித் தன்னிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

உயர் கல்வி அமைச்சினது போன்றே தயாரிக்கப்பட்ட போலியான கடிதத் தலைப்பில், தனித் தமிழில் இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. 6.12.2011 திகதியிட்ட இந்தக் கடிதத்தில் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம். குணசேகர என்பவரின் கையெழுத்து இடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தைச் சமர்ப்பித்து கடந்த வியாழக்கிழமை யாழ். வண்ணை நாவலர் பாடசாலையில் பெண் ஒருவர் இணைந்துள்ளார். அவரது நியமனக் கடிதத்தில் சந்தேகம் கொண்ட அதிபர் அது பற்றி விசாரித்துள்ளார். அதன் பின்னர் அந்தப் பெண் பாடசாலைக்கு வருவதை நிறுத்திவிட்டார்.

அவரிடம் கல்வித் திணைக்களத்தினர் விசாரித்ததில் தனக்குத் தெரிந்தவரையில் 9 பேருக்கு இந்த வகையிலான நியமனம் வழங்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

அவர் சமர்ப்பித்த நியமனக் கடிதத்தில் பல தவறுகள் இருப்பதை மாகாணக் கல்வித் திணைக்களம் கண்டறிந்துள்ளது.

பாடசாலை ஆசிரியர்களுக்கான நியமனங்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. ஒருபோதும் உயர் கல்வி அமைச்சால் மேற்கொள்ளப்படுவதில்லை. போலி நியமனக் கடிதங்கள் உயர் கல்வி அமைச்சால் வழங்கப்பட்டுள்ளன.

கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயலாளரின் பெயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதே தவிர, உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதல்ல.

போலி நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டம் புதிதாக இணையும் ஆசிரியர்களுக்கு உரியதல்ல. கடிதத் தலைப்பில் உயர் கல்வி அமைச்சு என்பதற்கான ஆங்கிலப் பதம் வழக்கமாக அந்த அமைச்சுப் பயன்படுத்துவதை ஒத்திருக்கவில்லை.

வழக்கமான அரச நியமனக் கடிதங்களுக்கு முற்றிலுமான மாறான வடிவத்தில் தனித் தமிழில் போலிக் கடிதம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதிகள் வலயக் கல்விப் பணிப்பாளருக்கோ மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கோ கிடைக்கவில்லை.

அது தவிர அண்மைக் காலத்தில் ஆசிரிய நியமனங்கள் எதுவும் அரசாலோ அமைச்சாலோ மேற்கொள்ளப்படவில்லை என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்தது. இந்தப் போலி நியமனக் கடிதப் பிரதி உயர் கல்வி அமைச்சுக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

போலியான கடிதங்களைத் தயாரித்து சிலர் நியமனம் பெற முயற்சித்தார்களா அல்லது பணத்தைப் பெற்றுக் கொண்டு யாராவது மோசடியில் ஈடுபட்டார்களா என்ற கோணங்களில் அதிகாரிகள் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (உ-14)

## பேச்சுத் தடைப்பட்டுள்ளபோதும் தீர்வு வரும் என நம்பும் இந்தியா

1 »

மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் 49,000 வீடுகளை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டோம். இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் வரும் மிகுதி வீடுகள் இவை.

ஐந்து மாவட்டங்களிலும் 10,000 சைக்கிள்களை விநியோகிப்பதற்கான செயற்றிட்டம் இடம்பெயர்ந்தோரின் வருகையைத் தீவிரப்படுத்தும்.

வடமாகாண மக்களுக்கும் முக்கியமாக யாழ்ப்பாண மக்களுக்கும் தென்னிந்திய மக்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு.

காங்கேசன்துறைத் துறைமுகத்தில் கப்பற் சிதைவுகளை அகற்றும் பணிகள் 19 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளமையை நான் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் கடல் வாணிபம் அபிவிருத்தி அடைவதோடு பொருளாதாரச் செயற்பாடுகளும் புத்துயிர் பெறும். அடுத்த கட்ட வேலைகளுக்காகத் தேவையான உதவியை வழங்குவதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையைப் புனரமைக்கும் பணிகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம். இதன் மூலம் வடமாகாணத்தில் தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படுவதோடு யாழ்ப்பாணத்தில் கைத்தொழில் அபிவிருத்தியும் ஏற்படும். பலாலி விமான நிலையத்தை இலங்கை அரசு சிவில் போக்குவரத்து விமானநிலையமாக அவிருத்தி செய்து இலங்கையினுள்ளும் இந்தியாவுடனும் தொடர்புகளை புத்துயிர் பெறச் செய்யும் என்று நம்புகிறோம். இது இரு நாடுகளின் பொருளாதாரத்துக்குப் பெரியதொரு செயலூக்கத்தை அளிக்கும்.

யாழ்ப்பாணத்தின் விளையாட்டுக் கட்டமைப்புகளை மீளபிவிருத்தி செய்வதற்காக துரையப்பா விளையாட்டரங்கைச் செப்பனிடும் பணியை நாம் ஏற்றுள்ளோம். பொது நூலகத்துக்கு அருகில் யாழ்ப்பாணக் கலாசார நிலையம் ஒன்றை நிறுவவும் நாம் உத்தேசித்துள்ளோம். உத்தேச நிலையமானது கலாசாரத்தின் உருவமாகப் பரிணமித்து கலாசார நடவடிக்கைகளுக்குப் புத்துயிர் அளிக்குமென நம்புகின்றேன்.

மூன்று தசாப்த கால ஆயுதப் போராட்டத்தில் இருந்து இலங்கை மீண்டெழுந்துள்ளது. இப்போது சமாதானம் மலர்ந்துள்ளது. ஆயுதப் போராட்டத்தில் இருந்து இலங்கையை மீட்ட அதே மதி நுட்பமுள்ள தலைமை, இலங்கையிலுள்ள சகல சமூகத்தினரிடையேயும் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அதிகாரப் பரவலாக்கத்தினூடான ஒரு உண்மையான அரசியல் தீர்வை நாடுவதிலும் ஈடுபடுவர் என்பது எமது உள்ளார்ந்த நம்பிக்கையாகும்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை நாம் கவனத்தில் கொண்டுள்ளோம். அவற்றின் நடைமுறைப்படுத்தலை நாம் எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

இதேவேளை, அரசு பேச்சுக்கு வரும் என்று காத்திருந்த கூட்டமைப்பு பேச்சுக் குழுவினர் நேற்றும் ஏமாற்றத்துடன் திரும்பினர். இந்த மாதம் 17, 18, 19 ஆம் திகதிகளில் பேச்சு என்று அறிவித்தபோதும் எந்தவித முன்னறிவித்தலும் இன்றி கடந்த இரு நாள்களும் அரச பிரதிநிதிகள் பேச்சில் கலந்து கொள்ளவில்லை.

''நேற்றுமுன்திமும் நேற்றும் அரச தரப்பினர் பேச்சுக்கு வரவில்லை. அதற்கான காரணம் எமக்கு அறிவிக்கப்படவும் இல்லை. எனவே இன்று நாம் பேச்சுக்குச் செல்லமாட்டோம்'' என்றார் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இந்த நிலையில் பேச்சு மூலம் தீர்வு காணப்படும் என்று கிருஷ்ணா நம்பிக்கை வெளியிட்டுள்ளமை குறித்துக் கருத்துக் கூறிய சுரேஷ், ஜனாதிபதி மஹிந்தவின் இரட்டை வேடத்தையும் கபடத் தனத்தையும் இந்திய அரசு புரிந்துகொள்ளும் என்று கூட்டமைப்பு நம்புகிறது என்று குறிப்பிட்டார்.

இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு, ஜனாதிபதி மஹிந்த 13+ தீர்வுக்கு சம்மதித்திருக்கிறார். அதே மஹிந்த தான் இந்திய பத்திரிகைக்கு அண்மையில் மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என்று அடித்துக் கூறி இருந்தார். அதுமட்டுமல்ல இலங்கை ஜனாதிபதி மீண்டும் தனது இரட்டை வேடத்தை காட்டியுள்ளார். இந்திய அரசு அவர்களைப் புரிந்து கொள்ள வேண்டும். 13+ தீர்வுக்கு இந்தியாவுக்கு சம்மதம் தெரிவித்த அன்றே இலங்கை அரச தரப்பு பிரதிநிதிகள் பேச்சில் கலந்துகொள்ளவில்லை. இதன் மூலம் இலங்கை அரசின் கபடத்தனத்தை இந்தியா புரிந்து கொள்ளும் என்று நம்புகிறோம்'' என்றார் சுரேஷ். (உ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு குறித்து அறிவிக்கவேண்டியவர் மஹிந்தவே தவிர கிருஷ்ணா அல்லர்!

## ஜே.வி.பியின் செயலர் ரில்வின் காட்டம்

கொழும்பு, ஜன.19

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசின் தீர்வுத் திட்டம் என்னவென்பதை இந்திய அமைச்சர் கிருஷ்ணா கூறுவதில் பயனில்லை. அதனை எமது நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே பகிரங்கமாக அறிவிக்கவேண்டும்-என்று ஜே.வி.பி. அதிரடியான அறிவிப்பை விடுத்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணாவிடம் பேசப்பட்ட விடயங்கள், அதன்போது ஏற்பட்ட இணக்கப்பாடுகள் ஆகியவை குறித்தும் அரசு, நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அக்கட்சி அவசர கோரிக்கையை விடுத்துள்ளது.

இனப்பிரச்சினைக்கு 13ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் செல்வதற்கு நாம் தயாராகவே உள்ளோம் என இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னிடம் உறுதியளித்தார் என ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சையடுத்து, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா கருத்து வெளியிட்டிருந்தார்.

இதுதொடர்பாகக் கேட்டபோதே ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் 'உதயனு'க்கு மேலும் கூறியவை வருமாறு:-

இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா, ஜனாதிபதி உள்ளிட்ட அரச தரப்பினருடன் என்ன பேசினார் என்பது குறித்து எமக்கு எதுவும் தெரியாது. அதேபோன்று இந்திய அதிகாரிகள், அரச தரப்பினருடன் எந்த விடயங்கள் குறித்துப் பேசினார்கள் என்பதும் எமக்குத் தெரியாது.

எனவே, இருநாட்டு அதிகாரிகளும் பேசிக்கொண்ட விடயங்கள், அதன்போது ஏற்பட்ட இணக்கப்பாடுகள் உள்ளிட்ட முக்கிய காரணிகள் குறித்து அரசு நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும் என நாம் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

இனப்பிரச்சினைக்கு அரசு எவ்வாறானதொரு தீர்வை வழங்கவுள்ளது என்பதை இந்திய அமைச்சர் கிருஷ்ணா ஊடாகக் கூறாது, அரசின் தீர்வுத் திட்டம் என்னவென்பது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு, நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் நாம் வலியுறுத்துகின்றோம்.

இந்தியாவின் தாளத்திற்கு ஆட்டம் போடும் அரசியல் கொள்கையை அரசு கடைப்பிடிக்காமல், வடக்கு, கிழக்குத் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினையை உண்மையாகத் தீர்க்க முன்வரவேண்டும்.

இந்திய அதிகாரிகள், இலங்கை அரச தரப்பினருடன் பேச்சு நடத்திய பின்னர், இலங்கை அரசு 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வை வழங்கத் தயாராக உள்ளது என அவர்கள்தான் கூறுகின்றனர். அதனை இலங்கை அரசு கூறுவதில்லை, இதுதான் பழைய பல்லவியாக இருக்கின்றது. இம்முறையும் அதே பல்லவிதான்.

தேசிய இனப்பிரச்சினைக்கு, 13 பிளஸ் தருவதாகக் கூறி காலத்தை இழுத்தடிக்காமல் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினையை அரசு தீர்க்கவேண்டும்.

எமது நாட்டு விவகாரங்களில் இந்தியா மூக்கை நுழைக்காதவாறு உள்நாட்டுப் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்வதற்கு அரசு முயலவேண்டும் - என்றார் அவர்.(த-சி)

### நேற்று சுகயீன விடுப்பில் இணை மருத்துவ சேவையாளர்

8 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகளின் இணை மருத்துவ சேவையாளர்கள் நேற்று ஒரு நாள் சுகவீன விடுப்புப் போராட்டத்தில் குதித்திருந்தனர். இதனால் குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் இணை மருத்துவ சேவைகள் நேற்று முற்றாகப் பாதிக்கப்பட்டன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

இணை மருத்துவ சங்கத்தினரின் கோரிக்கைளுக்கு சுகாதார அமைச்சு செவி சாய்க்காததால் அவர்கள் நேற்று நாடளாவிய ரீதியில் ஒருநாள் சுகயீனப் போராட்டத்தில் குதித்தனர். இதில் யாழ். மாவட்ட இணை மருத்துவ சங்கத்தினரும் கலந்து கொண்டனர். இதனால் வெளிநோயாளர் பிரிவு இயங்கிய போதிலும் அதில் சிகிச்சை பெற்றவர்களுக்கான மருந்துகள் வழங்கப்படும் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-319-17-207-311-ரி)


பௌதிகவியல்
By M. கருணாநிதி
சடப்பொருளியல்
sat, sun- 6.00 am
சடமும் கதிர்ப்பும்
sat, sun- 11.00 am
வெப்பவியல்
sat, sun- 08.00 am
ஆரம்பம்- 21.01.2012
NEC பெருமாள் கோயிலடி.

2014 A/L
பௌதிகவியல்
By M. கருணாநிதி
N.E.C பெருமாள் கோயிலடி
sat, sun- 7.00 am
கொக்குவில்
Tue,Thu- 4.00 pm
அரியாலை
sat, sun- 06.00 pm
ஆரம்பம்- 21.01.2012

ஆஸ்திரேலியா குடும்ப விசா
குடும்பமாக ஆஸ்திரேலியா செல்ல 5 வருட விசாவிற்கு சட்ட ரீதியான ஆலோசனை.
திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
021 221 9016

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
புதிய பிரிவு ஆரம்பம் – 19.01.2012 (வியாழன் – இன்று)
NSB அருகில் கொடிகாமம் வீதி நெல்லியடி காலை 9.00 - 10.00
நகரசபை அருகில் ஸ்ரேசன் வீதி சாவகச்சேரி மாலை 4.00 - 5.00
சனி, ஞாயிறு புதிய பிரிவுகளும் ஆரம்பம் (21.02.2012)
NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி காலை 8.00 – 9.00
நகரசபை அருகில், ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி 10.00 – 11.00
182, ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் காலை 2.00 – 3.00
இலங்கை வங்கி மேல்மாடி, சங்கானை 4.00 – 5.00
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

தனித்துவமான ஆசிரியர் குழு சங்கமமாகிறது
விக்னா கல்வி நிலையம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A\L 2012 DAY CLASS WITH RIVISION A\L 2013, 2014
வர்த்தகப்பிரிவு
Eco¦- M.C.சுதாகரன் (யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர்)
Bist¦- S.முகுந்தன் (கொழும்பு, யாழ். பிரபல ஆசிரியர்)
Acc¦- M.R.றொஜிந்தன் (வலி.மேற்கின் பிரபல ஆசிரியர்)
ஆரம்பம்:- 21.01.2012 சனிக்கிழமை
A\L 2012 (11 மணி) A\L 2012 DAY CLASS 2013, 2014
நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.


## மரண அறிவித்தல்

### திருமதி விசுவலிங்கம் வடிவமலர்



வத்திராயன் தெற்கு, தாழையடியைப் பிறப்பிடமாகவும் ஆழியவளை, தாழையடியை வசிப்பிடமாகவும் தற்போது இல.46, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சியில் வசித்துவந்தவருமான திருமதி விசுவலிங்கம் வடிவமலர் 17/01/2012 செவ்வாய்க்கிழதமை காலமானார்.

அன்னார் சிற்றம்பலம் விசுவலிங்கத்தின் அன்பு மனைவியும் காலம்சென்ற குமாரசாமி - வள்ளிநாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், மன்மதகுமார் (ஆசிரி யர், கிளி/ பாரதி வித்தியாலயம்), தேவகுமார், சுபேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தாயும் ரேணுகா (மாவட்டச் செயலகம், கிளிநொச்சி), சிறிசாந்தி ஆகியோரின் மாமியும் அபிமன், வதுர்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் தங்கச்சிப்பிள்ளை, மலராம்பிகை, அமிர்தலிங் கம், காலஞ்சென்ற சோதிமலர் மற்றும் சோமசுந்தரம், சிவானந்தன், சிவகெங்கா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்இன்று (19/01/2012) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் தற்போதய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
இல 46, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி. குடும்பத்தினர்


பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்
சகலவித மோட்டார் வாகனங்களின் பிளாஸ்ரிக் பொருள்களும் சிறந்த தொழில் நுட்ப முறையில் செய்து கொடுக்கப்படும்
1. ஸ்பிறே பெயின்ரிங்
2. பிளேற்றிங் (மொப்பிங்)
3. கண்ணாடி வகைகள் பொலிசிங்
4. பைவர் மோல்டிங்
வரலட்சுமி பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்
286/2, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொடர்புக்கு: 0773512591

மாணவர்களின் குறையை நிவர்த்திசெய்ய...
விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A\L 2012 DAY CLASS , A\L 2013, 2014
பொருளியல்
M.C. சுதாகரன் யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர்.
ஆரம்பம்:- 21.01.2012. சனி 11 மணி.


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
கணபதி மாணிக்கம்

தோற்றம் 1916 * 04 * 02

மறைவு 2011 * 01 * 29



பண்பிலே வளர்த்து அன்பையே சொரிந்து
அரவணைத்த எங்கள் தெய்வமே அப்பா
தெய்வத்தொண்டு செய்வதையே கொடையாக்கிய கொடை வள்ளலே
எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு மறைந்தாலும்
என்றும் உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## தவறிவிட்டது

உரப்பையினுள் இருந்த வாகன் இலக்கத்தகடுகள் இரண்டு சோடி தட்டா தெரு சந்திக்கும், அரசடி றோட், பழம்றோட் ஆகிய இடங்களிற்கும் இடையில் 18.01.2012 அன்று தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் தொலைபேசியுடன் தொடர்புகொண்டு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
சதீஸ்:-0777780995


ஷாம்சன் இங்கிலீஷ்- 3மாத பயிற்சி நெறி
இன்றுவரை உங்களால் ஆங்கிலத்தால் பேச முடியாதிருப்தற்கான காரணம் ஆங்கிலம் கடினம் என்பதால் அல்ல, தவறான வழிமுறையில் கொப்பியில் எழுதியும், CD, புத்தகத்தின் வாயிலாக அதை முயற்சித்தலாகும்.
ஆங்கிலத்தை மட்டுமல்ல உலகில் எந்தவொரு மொழியையும் இலக்கணம், CD, புத்தகத்தின் வாயிலாகக் கற்று சரளமாகப் பேசவே முடியாது. நீங்கள் கூட தாய் மொழியை அவ்வாறு படிக்கவில்லையே!
எமது பழக்கப்படுத்தல் மூலமான ஆங்கிலப் பயிற்சியானது ஒரு சிறு குழந்தை எவ்வாறு தாய் - தந்தையாருடன், அயலவருடன் பேசிப் பேசி மொழியைப் பழகியதோ அதை அடிப்படையாகக் கொண்டதாகும்.
நீங்களும் எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சிப் பட்டறையில் (WORK SHOP) இணைய விரும்புகிறீர்களா? அப்படியானால் எதிர்வரும் 21.01.2012 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள். (இம் முறை O/L எழுதும் மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில்புரிவோர், பட்டதாரிகள் மற்றும் 15 வயதுக்கு மேற்பட்ட அனைவரும்)
ஒரு பிரிவில் 20 பேருக்கு மட்டுமே அனுமதி.
சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I மு.ப 8-10 பிரிவு III பி.ப 01- 03
பிரிவு II மு.ப 10- 12 பிரிவு IVபி.ப 03- 05
SAAMSON ENGLISH
279, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி பின்புறம்)
TEL: 0776214567

மணல் விற்பனைக்குண்டு
நாற்பது வருடங்களாக கட்டிட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற மண்கும்பான் மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.
4 டிரக்டர் - 24000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 -38/-)
தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.